
அனைத்து போட்டிப் பரீட்சைகளுக்குமான

# புதிய பொது அறிவு




**வேதநாயகம் தபேந்திரன்**

B. Com (Jaf), PGD. Population Development Studies (Jaf),

M.A in Development Studies (Jaf).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வெளியீடு : சிவகாமி பதிப்பகம்

## புதிய பொது அறிவு 2012ல் உள்ளடங்கிய விடயங்கள்

பின்வரும் பரீட்சைகளை வெற்றிகொள்ள உதவும்.

- இலங்கை நிர்வாக சேவை (SLAS).
- இலங்கை கல்வி நிர்வாக சேவை (SLEAS).
- இலங்கை திட்டமிடல் சேவை (SLPS).
- இலங்கை வெளிநாட்டுச் சேவை (SLFS).
- இலங்கை கல்வியியலாளர் சேவை (SLES).
- இலங்கை அதிபர் சேவை (SLPS).
- க.பொ.த. உயர்தர பொதுச் சாதாரண பரீட்சை.
- சமூக சேவைகள் உத்தியோகத்தர், சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர், சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர், பண்பாட்டு உத்தியோகத்தர், குடியேற்ற உத்தியோகத்தர், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் தெரிவுகள்.
- அரச பொது முகாமைத்துவ உதவியாளர் தெரிவு.
- சுகாதார அமைச்சின், புகையிரத் திணைக்களத்தின் பொது முகாமைத்துவ உதவியாளர் தெரிவு.
- கூட்டுறவு பரிசோதகர் தெரிவு.
- பட்டதாரி ஆசிரியர், தேசிய பாடசாலை ஆசிரியர், ஆரம்ப பாடசாலை ஆசிரியர், பெருந்தோட்டப் பகுதி ஆசிரியர் தெரிவுகள்.
- வங்கி அதிகாரிகளின் பதவி உயர்வு.
- சுங்கத்திணைக்கள, அஞ்சல் திணைக்கள அதிகாரிகள் தெரிவு.
- பொது அறிவுத் தேடல் உள்ளோர்.

**வெற்றி நிச்சயம். வாங்கிப் படியுங்கள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய

# பொது அறிவு

## New

# General knowledge

அனைத்துப் போட்டிப் பரீட்சைகளுக்குமான
வழிகாட்டி நூல்

ஆக்கம்:
**வேதநாயகம் தபேந்திரன்**
B.Com (Jaf), PGD. Population Development Studies (Jaf).
M.A. in Development studies (Jaf)

வெளியீடு
சிவகாமி பதிப்பகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைப்பு : புதிய பொது அறிவு (வழிகாட்டிநூல்)

ஆசிரியர்: வேதநாயகம் தபேந்திரன்
B.Com,(Jaf), PGD.Pop.Devt.Studies (Jaf).
M.A. in Development Studies (Jaf)

உரிமை: ஆசிரியருக்கு

புதுப்பித்த
ஒன்பதாம் பதிப்பு: டிசெம்பர் 2011

முதலாம் பதிப்பு: ஓகஸ்ட் 1996

வெளியிடுவோர்: சிவகாமி பதிப்பகம்
"தேன்தமிழ்"
கைதடி வடக்கு, கைதடி, யாழ்ப்பாணம்.

பக்கம்: viii + 195

e-mail : vethaben@yahoo.com

விநியோகஸ்தர்: லங்கா புத்தகசாலை,
F.L 1-14 டயஸ் பிளேஸ், குணசிங்கபுர,
கொழும்பு - 12
தொ.பே: 011 - 2341942

கணினி வடிவமைப்பு: கரிகணன் பிறிண்டேர்ஸ்,
இல. 424, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

ISBN : 978 - 955 - 0635 - 29 - 0

விலை: 350/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை

இன்றைய மாணவர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதே நாட்டினதும், சமுதாயத்தினதும் வளர்ச்சிக்கு அடிப்படை என்பதை எல்லோரும் ஏற்றுக்கொள்வர். இத்தகைய நடவடிக்கைக்கு அத்தியாவசியமானதே பொது அறிவின் வளர்ச்சியுமாகும்.

இதற்கென ஆங்கிலத்தில் தனியான புத்தகங்களும், சஞ்சிகைகளும் வெளிவந்த வண்ணமுள்ளன. ஆனால் தமிழில் இத்தகைய வாய்ப்பு இல்லை. இது தமிழ் மாணவர்களுக்குப் பெரும் குறைபாடாகும். இதனை நிவர்த்திக்கும் வகையில் இன்று வெளிவந்திருப்பதே திரு.வே.தபேந்திரன் அவர்களின் பொது அறிவு எனும் இந்நூலாகும்.

இந்நூலின் ஆசிரியர் திரு.வே.தபேந்திரன் எனது அன்புக்குரிய மாணவன். அவர் வணிகப் பட்டதாரியாக வெளியேறி இப்பொழுது சமூக சேவைகள் அலுவலராகப் பணியாற்றுகின்றார்.

அவர் படிப்பினாலும் அனுபவத்தினாலும் பெற்ற அறிவைப் பயன்படுத்தி இந்நூலை எழுதியுள்ளார். போட்டிப் பரீட்சைகள், உள்நுழைவுத் தேர்வுகள் என்பவற்றுக்குத் தோற்றுவோருக்கு இந்நூல் கடந்த ஒரு தசாப்தத்திற்கு மேல் பெரும் உதவியாக அமைந்து வருகின்றது.

இத்தகைய நூலை உருவாக்கிய ஆசிரியர் திரு.வே.தபேந்திரன் நீடூழி காலம் வாழ்ந்து தமிழ்பேசும் மாணவ உலகுக்கு உதவவேண்டுமென எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றேன்.

**பேராசிரியர் க.தேவராஜா**
**முதுநிலை விரிவுரையாளர்,**
**மனிதவள முகாமைத்துவ பிரிவு**
**முகாமைத்துவ கற்கைகள்,**
**வணிகபீடம்,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் பழையமாணவர் திரு.வேதநாயகம் தபேந்திரன் பொது அறிவு எனும் நூலைத் தொடர்ச்சியாக வெளியிடுவதையிட்டு அகமிக மகிழ்கின்றேன்.

தற்போது சமூக சேவைகள் அலுவலராகக் கடமைபுரியும் திரு.வே.தபேந்திரன் 1981/ 1988 காலப்பகுதியில் யாழ் இந்துவின் சிறந்த மாணவனாக மிளிர்ந்தார். கல்லூரி வணிக மாணவர்மன்றச் செயலாளராக 1987 / 1988 கல்வி ஆண்டிற் செயற்பட்டார். யாழ் பல்கலைக்கழக வணிகமாணிப் பட்டதாரியான இவர் பல்கலை ஆளுமைமிக்க இளைஞராவர்.

பொது அறிவுப்போட்டிப் பரீட்சைகளுக்கான வழிகாட்டி நூல் பொது அறிவுப் பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகளுக்கு நல்லதோர் வழிகாட்டி நூலாக அமையும் என்பது எனது துணிவு.

நூலாசிரியரின் அரிய முயற்சியைக் கல்வி உலகம் பாராட்டி வரவேற்கும் என்பதில் ஐயமில்லை. நல்லாசிகள் பல.

**அ.சிறிக்குமரன்**
**முன்னாள் அதிபர்,**
**யழ்ப்பாணம் இந்துக்கல்லூரி,**
**யாழ்ப்பாணம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

பொது அறிவுப் புத்தக வெளியீட்டின் பதினைந்தாம் வருட நிறைவில் ஒன்பதாம் பதிப்பில் உங்களைச் சந்திப்பதில் மனமகிழ்வடைகின்றேன். கால மாற்றத்திற் கேற்ப உள்வாங்கப்பட்ட விடயங்களை உள்ளடக்கியதாக இந்நூல் வெளிவருகிறது.

எனது இவ் வெளியீட்டை நாடளாவிய ரீதியில் விநியோகிக்கும் கொழும்பு லங்கா புத்தகசாலைக்கும் எனது மனமார்ந்த நன்றிகள். கணினியில் வடிவமைத்துத் தந்த யாழ்ப்பாணம் கரிகணன் பிறிண்டேர்ஸ் நிறுவனத் தினருக்கும் உளமார்ந்த நன்றிகள்.

இந்நூலுக்கு அணிந்துரைகளை வழங்கிய யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் வணிகபீட முதுநிலை விரிவுரையாளர் பேராசிரியர் க.தேவராஜா அவர்கட்கும், யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி முன்னாள் அதிபர் திரு. அ. சிறிக்குமரன் அவர்கட்கும் மனம் நிறைந்த நன்றிகள்.

பொது அறிவுத் துறையில் நன்கு வேரூன்றவும், தேசிய அளவில் நூல் வெளியிடவும் களம் அமைத்துத் தந்த கிழக்கின் திருகோணமலை மண்ணை என்புலன்கள் என்னை உணரும் இறுதிக் கணம் வரை நன்றியுடன் மனதிற் கொள்கின்றேன்.

உங்களது மதிப்பீடுகளையும் ஆலோசனைகளையும் இருகரம் கூப்பி வரவேற்கின்றேன்.

"உள்ளியது எய்தல் எளிதுமன் மற்றுந்தான்
உள்ளியது உள்ளப் பெறின்"

-குறள் 540

**வேதநாயகம் தபேந்திரன்**
**"தேன் தமிழ்"**
**கைதடி வடக்கு, கைதடி,**
**யாழ்ப்பாணம்.**
**2011 டிசெம்பர் 15**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளே உள்ளவை...


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | இன்றைய உலக தரிசனம் | 01-18 |
| 2. | சமகால உலக, உள்நாட்டு தரிசனம் | 19-48 |
| 3. | விளையாட்டு 2010 - 2011 | 49-51 |
| 4. | இன்றைய இலங்கை | 52-57 |
| 5. | இளையோர் ஒலிம்பிக் | 58 |
| 6. | ஒஸ்கார் (Oscar) விருது 2011 | 59 |
| 7. | உலகக் கிண்ணக் கிரிக்கெற் - 2011 | 60-61 |
| 8. | நோபல் விருது - 2010 | 62 |
| 9. | உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகள் - 2010 | 63-64 |
| 10. | உலகப் பிரபலங்கள் | 65-70 |
| 11. | நாடுகள் - ஆட்சித் தலைவர்கள் | 71-72 |
| 12. | சர்வதேச நாட்கள் அல்லது தினங்கள் | 73-74 |
| 13. | இலங்கை | 75-94 |
| 14. | இலங்கையின் சட்டங்கள், அரசியல் | 95-102 |
| 15. | இலங்கையின் கல்வித்துறை | 103-111 |
| 16. | சர்வதேச உடன்படிக்கைகள் | 112-117 |
| 17. | உலகம் கண்ட போர்கள் | 118-124 |
| 18. | சர்வதேச நிறுவனங்கள் | 125-135 |
| 19. | உலக விருதுகள் | 136-138 |
| 20. | விண்வெளி அறிவியல் | 139-142 |
| 21. | மருத்துவம் | 143-148 |
| 22. | சினிமா | 149-151 |
| 23. | விஞ்ஞானம் | 152-154 |
| 24. | கலை இலக்கியம் | 155-166 |
| 25. | பல்துறைக் களஞ்சியம் | 167-180 |
| 26. | உலக விளையாட்டுக்கள் | 181-187 |
| 27. | சுருக்கப் பெயர்கள் - நிறுவனங்கள் | 188-189 |
| 28. | மாதிரி வினாவிடை | 190-195 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய உலக தரிசனம்

## ஐரோப்பா

**பிரித்தானியா (Great Britain)**
**தலைநகர் – லண்டன்**
**பிரதமர் – டேவிட் கமரோன்**

இங்கிலாந்து, ஸ்கொட்லாந்து, வேல்ஸ், வட அயர்லாந்து ஆகியவை சேர்ந்ததே பிரித்தானியா அல்லது ஐக்கிய இராச்சியம் (U.K- United kingdom) ஆகும்.

- குடியேற்றவாத கொள்கைகள் ஐரோப்பாவில் தீவிரம் பெறத் தொடங்கிய காலப் பகுதியில் உலகெங்கும் பல நாடுகளை வென்று அடிமைப்படுத்தி வைத்திருந்தனர்.
- சூரியன் அஸ்தமிக்காத சாம்ராஜ்ஜியம் தமதென முன்னாளில் பெருமை கொண்டனர்.
- பழைமை, பெருமை பேணுவதில் பிரித்தானியர்கள் பெரும் நாட்டமுடையவர்கள்.
- இதனால்தான் ஐரோப்பிய ஒன்றியத்தில் மிகப்பெரும் நாடாக இருந்தபோதும் இன்றுவரை யூரோ (Euro) நாணயத்தில் இணையவில்லை.
- 2012 இல் 30ஆவது ஒலிம்பிக் போட்டிகளை லண்டன் மாநகரில் நடத்தவுள்ளது.
- கனவான்களின் விளையாட்டு என அழைக்கப்படும் கிரிக்கெற்றின் தாயகம் இங்கிலாந்து ஆனால் உலகக் கிண்ணத்தை இன்றுவரையும் கைப்பற்ற முடியவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ஈராக்கில் அமெரிக்கப் படைகளுக்கு ஆதரவாக 2003இல் நிலை நிறுத்தப்பட்டிருந்த பிரித்தானியப் படைகள் 2010ஆம் ஆண்டில் முற்றாக வெளியேறின.
- இங்கு தொழிற்கட்சி, பழைமைவாதிகளின் கன்வேட்டிவ் கட்சி ஆகியவை பலம் பொருந்திய கட்சிகளாக உள்ளன. ஆட்சிப் பீடத்தை மாறி மாறி அலங்கரிக்கின்றன.
- 2010 மே மாதத்தில் லெயி செஸ்ரர் மருத்துவமனையில் ரோபோ கரமொன்றைப் பயன்படுத்தி சத்திரசிகிச்சை ஒன்று முதல் முறையாக வெற்றிகரமாகச் செய்ப்பட்டது.
- 2010 யூலையில் விம்பிள்டன் ரெனிஸ் போட்டியில் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் சம்பியன் - ரபேல் நடால் (ஸ்பெயின்) இது இவரது 8 ஆவது கிராண்ட் ஸ்லாம் பட்டமாகும்.
- இவர் இதுவரை விம்பிள்டன் - 2 Frenchopen - 5, அவுஸ்திரேலியா - 01 என்ற எண்ணிக்கையில் சம்பியன் ஆகியுள்ளார்.
- 2010 ஒகஸ்ட்

  மனித தோலில் மூலவுயிர்க் கலம் ஈரல் உருவாக்கும் முறையை Dr.லுடோவிக் வாலியர் தலைமையிலான கேம்பிரிட்ஜ் விஞ்ஞானிகள் கண்டு பிடித்துள்ளனர். இது மாபெரும் விஞ்ஞான சாதனையாக விபரிக்கப்படுகின்றது.
- 2010 யூலை "ஹேர்ட் போட்ஷியர் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் மனிதனைப் போன்று உணர்வுகளை வெளிப்படுத்தக்கூடிய ரோபோவை உருவாக்கிச் சாதனை படைத்தனர். "நயோ" என இந்த ரோபோவுக்குப் பெயரிட்டனர்.
- 2010 செம்ரெம்பரில் முன்னணி கிரிக்கெட் வீரர் அன்ட்ரூ பிளின்டொப் ஓய்வு பெறுவதாக அறிவித்தார்.
- முன்னாள் பிரதமர் ரொனி பிளேயர் "A Journey" எனும் பெயரில் தனது சுயசரிதையை அயர்லாந்து டுப்ளின் நகரில் வெளியிட்டார்.
- 2010 ஒக்ரோபர்பு க்கார் விருதை பத்தி எழுத்தாளர் "ஹொவார்ட் ஜாகொப்சன்" Finger questio ே என்ற நாவலுக்குப் பெற்றுள்ளார்.
- இளவரசர் வில்லியம், கேட் மிடில்டன் ஆகியோருக்குத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமணம் 2012 ஏப்பிரலில் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப் பட்டுள்ளது.

## பிரான்ஸ்

**தலைநகர் – பரிஸ்**

**ஜனாதிபதி – நிக்கலஸ் சார்க்கோஸி**

- பிரெஞ்சுமொழி பேசப்படும் நாடு.
- கைத்தொழில் புரட்சியைத் தொடர்ந்து ஆசிய, ஆபிரிக்க நாடுகளைக் கைப்பற்றி தனது குடியேற்ற நாடுகளாக வைத்திருந்தது. அந்த நாடுகளின் வளங்களைச் சுரண்டித் தன்னை ஒரு வல்லமை பொருந்திய நாடாக்கியது.
- நெப்போலியன் போனபார்ட் எனும் மாபெரும் வீரனை உலகிற்குத் தந்தது.
- இங்கு நாடாளுமன்றத்தில் மேல்சபை, கீர்சபை என இரு சபைகள் உள்ளது.
- ஐரோப்பிய ஒன்றியம் ஆரம்பிக்கப்பட்டகாலம் முதலே அங்கம் வகிக்கின்றது.
- தனது பிராங் நாணயத்தைக் கைவிட்டு 01.01.2000 முதல் யூரோ நாணயம் ஆரம்பிக்கப்பட்டபோது அதில் இணைந்து கொண்டது.
- 1998 இல் உலகக்கிண்ண கால்பந்தாட்டச் சம்பியனாக முதல் முறை வந்து சாதனை படைத்தது.
- தற்போதைய ஜனாதிபதியின் மனைவியாகிய முதல் பெண்மணி கார்லா புரூணி அவர்களின் ஒழுக்கப் பண்பு தொடர்பான சர்ச்சைகள் ஊடாக சங்கங்களில் வெளிவருகின்றது.
- 2010 மேயில் 63ஆவது உலகத் திரைப்பட விழா இங்கு நடைபெற்றது.
- 2010 யூனில் விண்வெளி ஆய்வாளர்கள் அண்டவெளியில் 6 புதிய கோள்களைக் கண்டறிந்தனர்.
- 2010 யூனில் French Open Champion பட்டத்தை 5வது தடவையாகவும் ரபேல் நடால் (ஸ்பெயின்) பெற்றார்.
- 2010 செப்ரெம்பரில் செனற் சபையானது பெண்கள் முகத்தை முழுமையாக மூடி ஆடை அணிவதற்கான தடைச் சட்டத்திற்கு ஏக மனதாக அங்கீகாரம் வழங்கியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- குறிப்பாக இஸ்லாமியப் பெண்கள் அணியும் பர்தா என்ற ஆடையைத் தடை செய்வதாகவே இச் சட்டம் அமைந்தது.
- பிரான்சிய பிரஜைகளைத் தாம் கொல்லப்போவதாக ஒசாமா பின்லேடன் சூளுரைத்தார்.
- 2010 செம்ரெம்பரில் பணியில் ஓய்வுபெறும் வயதை 60 இலிருந்து 62 ஆக அதிகரிக்கும் தீர்மானத்தை அரசாங்கம் எடுத்தது.
- இதனை எதிர்த்து 2 மில்லியன் மக்கள் தெருவில் இறங்கி ஆர்ப்பாட்டம் நடத்தினர்.
- 2010 நவெம்பரில் நாட்டின் உயர் கொன்கோர்ட் இலக்கிய விருது மைக்கல் ஹவுயல்லேடுபக் பெற்றார்.
- "The man and the territory" எனும் நூலை எழுதியதற்காகவே இவ் விருது வழங்கப்பட்டது.
- உலகப் பிரபலம் பெற்ற Tour de France சைக்கிளோட்டப் போட்டியில் அல்பர்ட்டோ கொன்டாடோர் 3ஆவது முறையும் முதலிடம் பெற்றார்.

## இத்தாலி

**தலைநகர் – ரோம்**

**நாணயம் – யூரோ**

- ஐரோப்பாவில் பழம் பெரும் நாகரிகங்கள் நிலவிய நாடுகளில் ஒன்று.
- மாபியா எனப்படும் பயங்கரவாதக் குழுக்களின் பிறப்பிடம் இந்த நாடுதான்.
- உலகக் கிண்ணக் கால்பந்தாட்டச் சம்பியன் பட்டத்தைப் பலமுறை வென்றது.
- 72 வயதான தற்போதைய பிரதமர் பெர்லூஸ் கோனி பெரும் கோடீஸ்வரர்.
- இளம் பெண்களுடனும், விலை மாதர்களுடனும் தொடர்புபட்டவரென்ற சர்ச்சை ஊடகங்களில் அடிக்கடி எழுப்பப்படுகின்றது.
- 2010 ஓகஸ்ட் மாதம் பிரதமருக்கு எதிராக நாடாளுமன்றில் கொண்டுவரப்பட்ட நம்பிக்கை வாக்கெடுப்பில் அவர் வெற்றி பெற்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## டென்மார்க்

தலைநகர் – ஹோப்பன் ஹேகன்

நாணயம் – யூரோ

- ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் ஒன்று
- பாற்பண்ணைப் பொருள்களுக்கு உலகில் பிரபலமான நாடு
- யூரோ நாணயம் அறிமுகமாகி சில வருடங்களின் பின்பே பொதுமக்கள் அபிப்பிராய வாக்கெடுப்பை நடத்தி யூரோவில் சேர்ந்து கொண்டது.
- 2009 டிசெம்பரில் ஐக்கிய நாடுகள் சபையின் நாலநிலை மாற்றம் தொடர்பான மகாநாடு ஹோபன்கேகன் நகரில் நடைபெற்றது.

## ஐஸ்லாந்து

தலைநகர் –

- எரிமலைகளுக்கு பெயர்பெற்ற நாடு.
- இந்நாட்டின் தென்கோடியிலுள்ள எரிமலையான ஈய்ஜாப் ஜல்லா ஜோகுல் எனும் எரிமலையில் 2010 ஏப்பிரலில் பெரும் புகை மண்டலம் எழுந்தது. ஐரோப்பாவின் வானவெளியெங்கும் பெரும் புகை பரவியது.
- ஐரோப்பிய நாடுகளுக்கும், உலகின் ஏனைய பகுதிகளுக்கும் இடையிலான விமானப் போக்குவரத்து சில தினங்கள் இடை நிறுத்தப்பட்டது.
- 2001 செம்ரெம்பர் 11இல் அமெரிக்காவின் நியூயோர்க் நகரிலுள்ள உலக வர்த்தக மைய இரட்டைக் கோபுரங்கள் பாதுகாப்பு தலைமையகம் பென்ரகன் மீதான தாக்குதலுக்குப் பிறகு தற்போது இம்முறை தான் விமானப் பயணங்கள் பெருமளவில் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

## ஆசியா

**இந்தியா**

நிர்வாக தலைநகர் - புதுடெல்கி

வணிகத் தலைநகர் - மும்பாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதமர் - மன்மோகன்சிங்

ஜனாதிபதி - பிரதீபா பட்டீல்

◈ மனித வரலாற்றின் புராதன நாகரீகங்கள், மதங்கள் உருவாகிய நாடு.

◈ பலமொழி, பல இன, பண்பாட்டு அடையாளங்களைத் தனித்துவங்களுடன் பின்பற்றி வரும் நாடு.

◈ சட்டமா மேதை அம்பேத்கார் தூரநோக்குடன் வரைந்த அரசியலமைப்பு இன்றும் சில சட்ட திருத்தங்களுடன் நடைமுறையிலுள்ளது.

◈ மொழிவாரி, இனவாரி மாநிலங்கள் சுயாட்சி பெற்று தமது தனித்துவம் பேணி வாழக்கூடிய அரசியல் அமைப்பாக அது உள்ளது.

◈ வட மாநிலங்களான ஜார்க்கண்ட், உத்திராஞ்சல், மணிப்பூர், உத்திரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் மாவோயிஸ்ட் தீவிரவாதிகளின் செல்வாக்கு அதிகமாக உள்ளது.

◈ பலநூறு இந்தியப் படையினர் அண்மைய சில வருடங்களில் கொல்லப்பட்டுள்ளனர்.

◈ அம்மாநிலங்களின் இயற்கை வளங்களை அரசாங்கம் பல்தேசியக் கம்பனிகளுக்கு விற்றது. இதனால் இயற்கையுடன் இணைந்து வாழ்ந்த பழங்குடி மக்களும், கிராமப்புற மக்களும் பாரிய பாதிப்புக்கு உள்ளாயினர்.

◈ பாகிஸ்தானின் ஆதரவுபெற்ற இஸ்லாமிய தீவிரவாதம் இந்தியப் பெருநகரங்களில் இடையிடையே குண்டுவெடிப்புக்கள்மூலம் உயிர்ப்பலியை எடுத்து வருகிறது.

◈ ஜம்மு - காஷ்மீர் தொடர்பாக பாகிஸ்தானுடன் நீண்ட கால முரண்பாடு உள்ளது.

◈ பொருளாதார வல்லரசாகும் இந்திய அரசின் கனவு மாநில



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசுகளின் இலவசத் திட்டங்களால் நிறைவேற்றுவது வெகுதூரத்திற்குச் செல்கின்றது.

- "சேது சமுத்திரம் வரட்டும், செந்தமிழ்நாடு மலரட்டும்" என்ற அறிஞர் அண்ணாவின் சேது சமுத்திரத் திட்டக் கனவு உச்ச நீதி மன்றத் தடையினால் தாமதமாகிறது.
- ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புச் சபையின் பாதுகாப்புச் சபையில் நிரந்தர உறுப்புரிமை கோரும் கோரிக்கையையும் நீண்ட நாளாகவே உள்ளது.
- ஆந்திர மாநிலத்தைப் பிரித்துத் தனித் தெலுங்கானா கோரும் கோரிக்கையும் அவ்வப்போது தலை தூக்குகிறது.
- 2010 மார்ச் - இசையமைப்பாளர் A.R. ரகுமானுக்குப் பிரித்தானிய ட்ரினிட்டி இசைக் கல்லூரி கௌரவ பெலோஷிப் விருது வழங்கிக் கௌரவித்தது.

  புதுடெல்கியில் உலகக் கிண்ண ஹொக்கிப் போட்டிகள் நடைபெற்றது. 24 ஆண்டுகளுக்குப் பிறவு அவுஸ்திரேலியா இரண்டாவது முறையாகச் சம்பியன் ஆகியது.

  ஜேர்மனி இரண்டாம் இடம்

  பெண்களுக்கு அரசியல் சபைகளில் (லோக்சபா, ராஜ்ய சபா, சட்ட சபை) 33 வீதம் இட ஒதுக்கீடு வழங்கப்பட வேண்டுமென்ற சட்டமூலம் விவாதிக்கப்பட்டது.
- 2010 ஏப்ரல் - இந்தியன் பிறீமியர் லீக் (IPL) அமைப்பின் புதிய தலைவராக சிராயு அமீன் தெரிவாகினார்.

  A.R. ரகுமானுக்கு பத்மபூசன் எனும் இந்திய அரசின் உயர் விருது ஜனாதிபதியால் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.
- 2010 மே - மேற்குவங்க மித்நாயூரில் ரயில் விபத்து 100 பேருக்கு மேல் பலி.

  ஆந்திர மாநிலத்து காளஹஸ்தி ராஜகோபுரம் இரண்டாகப் பிளந்து அழிந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அணு ஆயுதங்களை ஏந்திச் சென்று தாக்கவல்ல அக்னி - 2 ஏவுகணை வெற்றிகரமாகப் பரீட்சிக்கப்பட்டது.

2008 நவெம்பரில் மும்பையில் நடைபெற்ற பயங்கரவாதத் தாக்குதலின்போது உயிருடன் பிடிக்கப்பட்ட அஜ்மல் சகாப்பிற்கு மும்பை நீதிமன்றம் மரண தண்டனை வழங்கும் தீர்ப்பை வழங்கியது.

- 2010 யூன் - சர்வதேச கிரிக்கெற் சம்மேளனம் (ICC) புதிய தலைவராக இந்திய அமைச்சர் சரத்பவார் தெரிவு செய்யப் பட்டார்.

1984 இல் மத்திய பிரதேச தலைநகரான போபால் நகரில் அமெரிக்க யூனியன் கார்பைட் தொழிற்சாலை விபத்து வழக்கின் தீர்ப்பு வெளியிடப்பட்டது.

- இந்நிறுவனத்தின் இந்திய முகாமையாளர் வோரன் அண்டர்சன் எனும் அமெரிக்கர் குற்றவாளியாக அறிவிக்கப்பட்டார்.
- 2010 செம்ரெம்பர் - பொது நலவாய விளையாட்டுப்போட்டி ஏற்பாடுகளில் இடம் பெற்றதாகக் கூறப்படும் முறைகேடு களுக்குப் பொறுப்பேற்று சுரேஷ் கல்மாடி பதவி விலகினார்.
- 2010 ஒக்ரோபர் பொதுநலவாய விளையாட்டுப்போட்டி இந்தி யாவின் புதுடெல்கியில் நடைபெற்றது. பதக்கப் பட்டியலின்படி இடங்கள்.

| | | |
|---|---|---|
| அவுஸ்திரேலியா | - | 1ஆம் இடம் |
| இந்தியா | - | 2ஆம் இடம் |
| இங்கிலாந்து | - | 3 ஆம் இடம் |

- 2011 மார்ச் மேற்கு வங்க மாநில சபாநயகராக 29ஆண்டுகள் இருந்து ஹசிம் அப்துல் ஹலிம் உலக சாதனை.
- 2011 மார்ச் ஏப்பிரல்

10ஆவது உலகக் கிண்ண கிரிக்கெற் போட்டிகள் இந்திய, இலங்கை, பங்களாதேஷ் நகரங்களில் நடந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்திய அணி இலங்கையை வென்று சொந்த மண்ணில் சம்பியனாகியது.

**பாகிஸ்தான்**

தலைநகர் - இஸ்லாமாபாத்

ஜனாதிபதி - அசிப் அலி சர்தாரி

பிரதமர் - யூசுப் ரசா கிலானி

- இந்தியா எனும் பெரிய நாட்டினுள் அடங்கி இருந்தது இந்நாடு.
- 1947 ஓகஸ்ட் 14இல் பாகிஸ்தான் எனும் இஸ்லாமிய இன அடிப்படையிலான நாட்டை இந்தியாவிலிருந்து பிரித்து பிரித்தானியர் சுதந்திரம் கொடுத்தனர்.
- அடுத்தநாள் ஓகஸ்ட் 15 ஆம் திகதி தான் இந்தியாவிற்கு சுதந்திரம் பிரித்தானியரால் வழங்கப்பட்டது.
- இதனால் இந்தியா, பாகிஸ்தானிய சுதந்திரத்தின்போது பெரும் இனக்கலவரங்கள் எழுந்தன.
- பல்லாயிரம் முஸ்லீம்களும், இந்துக்களும் கொல்லப்பட்டனர்.
- இன்றுவரை இந்தியாவும், பாகிஸ்தானும் வைரம் பாய்ந்த பகைமை நாடாக உள்ளமை.
- முகமதுஅலி ஜின்னா பாகிஸ்தான் நாட்டைப் பிரித்தானியரிடம் இருந்து பெற்றுக்கொடுத்த தேச பிதாவாகப் போற்றப்படுகிறார்.
- முழு இந்தியவிற்கும் முகமது அலி ஜின்னாவைப் பிரதமராக்கு கின்றோம். பிரிந்துபோக வேண்டாம் என மகாத்மா காந்தி, ஜவஹர்லால்நேரு ஆகியோர் கோரியதாக வரலாற்றாய்வாளர் கூறுகின்றனர்.
- பாகிஸ்தானைத் திறம்பட ஆட்சி செய்த சுல்பிகார் அலிபூட்டோ 1970களில் ஜெனரல் ஸியா உல்ஹக் அவர்களால் தேசத் துரோகக் குற்றச்சாட்டில் தூக்கில் இடப்பட்டார்.
- ஜனநாயகம் மறைந்து இராணுவ ஆட்சி தொடங்கியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- இராணுவ ஆட்சியாளர் ஸியா உல்ஹக் 1988இல் ஹெலிகொப்ரர் விபத்தில் கொல்லப்பட்டார்.
- ஜனநாயகம் மீண்டும் மலர்ந்தது.
- பூட்டோவின் மகள் பெனாசிர் பூட்டோ பொதுத் தேர்தல்மூலம் பிரதமரானார்.
- அடுத்த தேர்தலில் நவாஸ் ஷெரீப் கட்சிவென்று அவர் பிரதமரானார்.
- பாகிஸ்தானின் ஆட்சி அதிகாரம் இவர்களிடையே மாறி மாறிச் சூழன்றது.
- 1999இல் பிரதமராயிருந்த நவாஸ் ஷெரீப் சார்க் மகாநாட்டிற்காக இலங்கை வந்து இருந்தபோது பாகிஸ்தானின் இராணுவத் தளபதி ஜெனரல் பெர்வஸ் முசாரப் ஆட்சியைக் கைப்பற்றினார்.
- ஊழல் ஆட்சியில் இருந்து நாட்டை விடுவிக்கவே தான் ஆட்சியைக் கைப்பற்றியதாகக் கூறினார். அப்போது பாகிஸ்தான் மக்களிடம் வரவேற்பும் பெற்றார்.
- இதனால் நவாஸ் ஷெரீப் சவூதி அரேபியாவிலும், பெனாசிர் பூட்டோ இலண்டனிலும் அஞ்ஞாதவாசம் இருக்க நேரிட்டது.
- காலப்போக்கில் இராணுவ ஆட்சியில் வெறுப்புக்கொண்டு மக்கள் ஆர்ப்பாட்டங்களிலும் ஈடுபடத் தொடங்கினார்கள்.
- உள்நாட்டு, சர்வதேச அழுத்தங்களுக்கு அடிபணிந்து முசராப் ஜனநாயக, தேர்த்தல் நடைமுறைகளுக்கு இடமளித்தார்.
- ஆண்டிறுதியில் நாடாளுமன்றத் தேர்தல் பிரசாரக் கூட்டம் ஒன்றில் திறந்த ஜீப்பில் வீதி வழியாகச் சென்ற பெனாசிர் பூட்டோ சுட்டுக்கொல்லப்பட்டார்.
- 2008 இறுதியில் ஜனாதிபதி தேர்தல் நடைபெற்றபோது அமரர் பெனாசிர் பூட்டோவின் கணவர் அஸிப் அலி அர்தாரி பாகிஸ்தான் மக்கள் கட்சியின் சார்பாகப் போட்டியிட்டு வென்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

◈ பெர்வஸ் முசாரப்பை பதவி விலக்கும் தீர்மானம் ஒன்றை நாடாளுமன்றில் கொண்டுவர முயன்றபோது தானாகவே பதவி விலகினார்.

◈ அல்கொய்டா தலைவர் ஓசாமா பின்லேடன், தலிபான் தலைவர் முல்லா முகமட் ஓமர் ஆகியோர் பாகிஸ்தான் - ஆப்பானிஸ்தான் எல்லைப் பகுதியில் பழங்குடி இன மக்கள் பகுதியில் இருப்பதாக அமெரிக்கா சந்தேகிக்கிறது.

## சீனா

**தலைநகர் – பெய்ஜிங்**
**வணிகத் தலைநகர் – சங்காய்**
**ஜனாதிபதி – ஹியூ ஜிந்தாவோ**

◈ உலகப் பொருளாதார வல்லரசாக சீனா வேகமாக உருவெடுத்து வருகின்றது.
உலகெங்கும் தனது முதலீடுகளைச் செய்து வருகின்றது.
சீன நிறுவனங்கள் இலங்கையிலும் நன்கு காலூன்றி வருகின்றது.

◈ 21ஆம் நூற்றாண்டின் பொருளாதார வளர்ச்சி சீனாவிற்குரியதென பொருளியல் நிபுணர்கள் கூறுகின்றனர்.

◈ நாட்டை நேசிக்கும் ஒரு கட்சி கம்யூனிச ஆட்சிமுறை இவ் வெற்றிக்குக் காரணமாகவுள்ளது.

◈ சீனாவின் பொருளாதார வளர்ச்சி, அமெரிக்கா உட்பட மேற்கு நாடுகளையும் கலங்க வைத்துள்ளது.

◈ மாவோ சேதுஸ் தனது ஆட்சியில் கலாச்சாரம் புரட்சிக் காலத்தில் ஆண்டான், அடிமை, பணக்காரன், ஏழை, படித்தவன், பாமரன் என்ற வேறுபாடுகளை மட்டந்தட்டிச் சமப்படுத்தினார். இதனால் பெரிதும் விமர்சிக்கப்பட்ட ஒரு தலைவராக இருந்தார்.

◈ 1978இல் பதவிக்கு வந்த டெங்ஸியா ஓ பிஸ் தலைமையிலான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசு சோசலிச திறந்த சந்தைப் பொருளாதாரமுறை எனும் புதிய முறையை அறிமுகம் செய்தது.

இதனால் சீனாவிற்குள் மெல்ல மெல்ல வெளிநாட்டு நேரடி முதலீடுகள் வரவழைக்கப்பட்டன.

நாட்டில் நுகர்வுச் செலவுகள் குறைக்கப்பட்டு மூலதனச் செலவுகள் பெருமளவில் அதிகரிக்கப்பட்டன. வருடாந்த 10% பொருளாதார வளர்ச்சி தொடர்ந்துபெற இது உதவியது.

- 1980, 90, 91 இல் கம்யூனியஸ் அரசுகள் பல உலகில் மறைந்துபோன புதிய உலக ஒழுங்கு உருவானது.
- சீனா 1978இல் அறிமுகம் செய்த சோசலிச சந்தைப் பொருளாதார முறைமை காரணமாக ஆட்சிமுறை அழிவை எதிர்கொள்ள வில்லை.
- **2010 யூன் சீனா** தாய்வானுடன் முக்கியத்துவம் மிக்க வாணிப உடன்படிக்கை ஒன்றில் கையெழுத்திட்டது.

1949 இல் உள்நாட்டுப் போருக்குப் பின்பு பிளவுபட்ட தேசங்கள் முக்கியத்துவம் மிக்க இவ் உடன்படிக்கையில் இணைந்துள்ளன.

இது பொருளாதார கூட்டுறவுக் கட்டமைப்பு உடன்படிக்கை யாகும்.

இதன்கீழ் நூற்றுக்கணக்கிலான பொருள்கள் சுங்க வரியின்றி இரு நாடுகளுக்குமிடையில் பரிமாறப்படும்.

- சீனாவின் சனத்தொகை 2015இல் 139 கோடியாக உயருமென எதிர்வுகூறப்பட்டுள்ளது.

## பங்களாதேஷ்

**தலைநகர் – டாக்கா**

- வாரிசு அரசியல் வழிவந்த இரு பெண்மணிகளின் அதிகாரப் போட்டியின் களமாக உள்ள நாடு.
- வெள்ளப்பெருக்கை அடிக்கடிச் சந்திக்கும் நாடு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

◈ படகு விபத்துக்களால் வருடாந்தம் பல நூறு உயிரிழப்புக்களைச் சந்திக்கும் நாடு.

◈ 1971 இல் கிழக்குப் பாகிஸ்தானாக இருந்த நாடு இந்தியப் படைகளின் உதவியுடன் தனிநாடாகியது.

◈ முக்திவாகினி விடுதலை இயக்கத்தின் ஆயுதப் போராட்டத்திற்குத் துணைசெய்யவே அமரர் இந்திராகாந்தி இந்தியப் படைகளை அனுப்பினார்.

◈ பாகிஸ்தான் இரண்டாகப் பிளந்து பங்களாதேஷ் எனும் நாடு உருவாகியது.

◈ பங்களாதேசின் தேசபிதா முஜிபுர் ரகுமான் சுதந்திர நாட்டில் முதல் ஜனாதிபதியாக இருந்தார்.

◈ 1970 களின் நடுப்பகுதியில் தன் குடும்பத்தினருடன் இராணுவத்தால் படுகொலை செய்யப்பட்டார்.

◈ 2010 பெப்ருவரியில் சார்க் அமைப்பின் சாக் (SAG) விளையாட்டுக்கள் 11வதாக இங்கு நடந்தது.

◈ பதக்கப் பட்டியலின்படி நாடுகளின் இடங்கள்

இந்தியா - முதலாம் இடம்

பாகிஸ்தான் - இரண்டாம் இடம்

பங்களாதேஷ் - மூன்றாம் இடம்

இலங்கை - நான்காம் இடம்

12ஆவது போட்டி இந்தியாவில் நடைபெற உள்ளது.

## ஆபிரிக்கா

**ஐவரி கோஸ்ட்**

**தலைநகர் – அபிட்ஜான்**

◈ 2010 டிசெம்பரில் ஜனாதிபதி தேர்தல் நடைபெற்றது. தேர்தலில் தாமே வெற்றி பெற்றதாக ஜனாதிபதி லோரன்ட் கபாக்கோ தெரிவித்து சத்தியப்பிரமாணம் செய்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- தாமே வெற்றி பெற்றதாக எதிர்க் கட்சித் தலைவர் அலஸேன் குவாட்டரா சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.
- ஜனாதிபதி பதவிக்கு ஒரே நேரத்தில் இருவர் உரிமை கோரிய விசித்திரம் நிகழ்ந்தது.

இதனால் இரு தலைவர் ஆதரவாளர், ஆதரவு படைகளுக் கிடையே மோதல்கள் ஏற்பட்டது. 100பேருக்கு மேல் இறந்தும் ஒரு இலட்சம் பேருக்குமேல் இடம்பெயர்ந்தும் கொண்டனர். ஐக்கிய நாடுகள் சமாதானப்படை அமைதி காக்கும் பணியில் ஈடுபட்டது.

- லோரன்ட் கபாக்கோ மக்கள், இராணுவத்தனர் ஆதரவின்றி தலைமறைவாகினார். படைகளிடம் சரணடையப் போவதில்லை யென அறிவித்து தலைமறைவாகினார்.
- உள்நாட்டுக் குழப்பங்கள் தொடர்பில் தனது ஆதரவுப் படைகள் யுத்த நிறுத்தம் செய்யப்போவதில்லையென அறிவித்தார்.
- 2011 ஏப்பிரல் ஐ.நா. சமாதானப் படையின் ஆதரவுடன் லோரன்ட் கபாக்கோ கைதுசெய்யப்பட்டார்.
- 5 மாத கால உள்நாட்டுக் கலவரம் முடிவுக்கு வந்தது.

ஐ. நா. ஆதரவு பெற்ற அலஸேன் குவாட்டரா ஜனாதிபதியாகப் பதவியேற்க உள்ளார்.

- **கொங்கோ** – நாட்டில் 2010 மார்சில் உள்நாட்டுக் கலவரம் நடைபெற்றது. 321 பேர் பலியாகினார்கள்.
- **நைஜிரியாவில்** 2010 மார்சசில் மதக் கலவரம் பெரியளவில் நடந்தது. 500 பேருக்குமேல் பலியாகினார்கள்.
- இங்கு 2010 மேயில் ஜனாதிபதி உமறு யார் அதுவா மரணமானார்.
- புதிய ஜனாதிபதியாக குட்லக் ஜொனாதன் பதவியேற்றார்.
- கினியா எனும் மேற்கு ஆபிரிக்க நாட்டில் 2010 யூனில் வரலாற்று முக்கியத்துவமிக்க ஜனாதிபதி தேர்தல் நடைபெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

◈ ருவாண்டா எனும் மத்திய ஆபிரிக்க நாட்டில் 2010 யூனில் முன்னாள் இராணுவத் தளபதி லெப். ஜெனரல் போஸ்டின்கயும் நயவம்சாமீது இனந்தெரியாதோர் துப்பாக்கிச்சூடு.

◈ தாய்லாந்து நாடுதான் டெங்குக் காய்ச்சலால் அதிகம் பாதிக்கப் பட்டுள்ளது.

## சூடான்

**தலைநகர் – டாபூர்**

**ஜனாதிபதி – ஓமர் அல் பசீர்**

◈ 2010 ஏப்பிரலில் பலகட்சித் தேர்தல் நடந்தது. 24 ஆண்டுகளின் பின்பு இது நடைபெற்றது.

◈ தென்சூடான், வடசூடான் இனத்துவக் குழு மோதல்கள் நீண்டகாரமாகவே நடைபெற்று வருகிறது.

◈ ஜனாதிபதி ஓமர் அல் பசீருக்கு எதிராக ஐக்கியநாடுகள் சபையின் சர்வதேச நீதி மன்றம் பிடியாணை பிறப்பித்துள்ளது.

◈ பதவியில் இருந்தபோதே ஒரு நாட்டின் தலைவருக்கெதிராக பிடியாணை பிறப்பிக்கப்பட்டது. இதுவே முதல் முறையாகும்.

## ஆர்ஜென்ரீனா

தலைநகர் - புவனஸ் அயர்ஸ்

◈ தென் அமெரிக்கநாடு

◈ உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகளில் பலமுறை சம்பியன் ஆகிய நாடு "டியாகோ மரடோனா" எனும் புகழ்பெற்ற வீரரைக் கொண்டுள்ள நாடு.

◈ 2010 ஏப்பிரலில் இந் நாட்டின் முன்னாள் இராணுவ ஆட்சியாளர் ரெய்னால்டோ பிக்னன் மனித உரிமைகள் மீறல் குற்றச்சாட்டில் 25 வருட சிறைத்தண்டனை பெற்றுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உக்ரெய்ன்

- முன்னாள் சோவியத் ஒன்றியத்தினுள் அடங்கியிருந்த நாடுகளில் ஒன்று.
- 2010 பெப்ருவரி மாதத்தில் ஜனாதிபதி தேர்தல் நடந்தது.
- உயர் நீதிமன்றம் தேர்தல் முடிவுகளை இடை நிறுத்தியது.
- விக்கரர் யனுகோவிச் வெற்றி பெற்றதாக மத்திய தேர்தல் ஆணையகம் அறிவித்தது.
- எதிர்க்கட்சித் தலைவி யூலியா தைமோசின் தெரிவித்த ஆட்சேபனையால் உயர்நீதிமன்றம் தேர்தல் முடிவுகளை இடைநிறுத்தியது.

## அவுஸ்திரேலியா

**தலைநகர் – கன்பெரா**

**நாணயம் – டொலர்**

- கம்டன் ஜேம்ஸ் குக் எனும் கப்பல் மாலுமியால் இக் கண்டம் 1788இல் கண்டறியப்பட்டது.
- உலகில் மிகக் குறைந்த நாடுகளைக் கொண்டதாக இக் கண்டம் உள்ளது.
- உலகில் காட்டுத் தீயினால் அடிக்கடி அழிவைச் சந்திக்கும் நாடுகளில் இதுவும் ஒன்று.
- இந் நாடு நான்கு புறமும் கடலால் சூழப்பட்ட ஒரு தீவு ஆகும்.
- கரையோரங்களில் மெல்பேர்ண், சிட்னி, அடிலெயிட், கன்பெரா போன்ற பெரு நகரங்கள் உள்ளன. நடுப்பகுதி முழுவதும் பாலைவனமாகும்.
- பூர்வீக பழங்குடி இனத்தவர்களை வெள்ளையர்கள் கொன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குவித்து ஆட்சியைக் கையகப்படுத்தியதாக வரலாறு கூறுகின்றது.

- பால் பண்ணை உற்பத்திகள், இறைச்சி வகை உற்பத்திகளுக்குப் பெயர் பெற்ற நாடு.
- கிரிக்கெற்றின் பிதாமகன் எனப் போற்றப்படும் டொன் பிரட்மன் இந்நாட்டவர்.
- உலகக் கிண்ணக் கிரிக்கெற் சம்பியன் பட்டத்தை 1987, 1999, 2003, 2007 ஆகிய ஆண்டுகளில் வென்றெடுத்துள்ளனர்.
- பிரித்தானிய அரசியின் முடியாட்சியை இன்றுவரையும் ஏற்றுள்ள சில நாடுகளில் இதுவும் ஒன்றாகும்.
- 2010 டிசெம்பரில் வட கிழக்கு அவுஸ்திரேலியாவில் வரலாறு காணாத வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது.
- 2009 டிசெம்பரில் வட கிழக்கு அவுஸ்திரேலியாவில் வரலாறு காணாத வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது.
- 2009 டிசெம்பர் கிரிக்கெற் சுழல்பந்து வீச்சாளராக இருந்து அவுஸ்திரேலிய அணிக்கு உலகக் கிண்ண சம்பியன் பட்டங்களை வென்று கொடுத்த ஷேன் வோர்க்குசிலை வைக்கப்பட உள்ளது.
- மெல்பேர்ண் மைதானத்தின் வெளிப்புறத்தில் சிலை அமையும். டொன் பிரட்மன உட்பட 10 கிரிக்கெற் பிரபலங்களுக்கு இங்கு ஏற்கனவே சிலை வைக்கப்பட்டுள்ளது.
- 2010 பெப்ரவரி! Open tennis Champion போட்டியில் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் "ரோஜர் பெடரர்" மீண்டும் வெற்றி பெற்றார்.
- 2010 ஏப்பிரல் அவுஸ்திரேலிய மொத்த சனத்தொகையில் குடியேற்றவாசிகள் 2025 ஆம் ஆண்டில் பெரும்பான்மையின ராக இருப்பர் என கணிப்பு ஒன்று கூறுகின்றனது.
- 2010 டிசெம்பர் - விக்கிலீக்ஸ் இணையத்தள ஸ்தாபகர் யூலியன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அசேஞ் அவர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை அவுஸ்திரேலியா கைவிட்டது.

◈ *2010 ஜனவரி - அவுஸ்திரேலிய* Open Tennis Champion *ஆக டிகிம் கிளிஸ்டர்ஸ் தெரிவுசெய்யப்பட்டார். மெல்பேர்ண் நகரில் இப் போட்டிகள் நடைபெற்றது. இரண்டாம் இடம்* (Runner up) *சீன வீராங்கனை சீநா பெற்றுக்கொண்டார்.*

◈ *2011 ஜனவரி - அவுஸ்திரேலியாவின் மூன்றாவது பெரிய நகரான குயின்லாந்து நகரில் வரலாறு காணாத வெள்ளப் பெருக்கு.*

◈ *2011 ஜனவரி இங்கிலாந்து, அவுஸ்திரேலிய நாடுகளுக்கிடையில் வருடாந்த ஆஷஷ் கிரிக்கெற் தொடர் வருடாந்தம் நடைபெறுவது வழக்கம்.*

◈ *இம்முறை 23 வருடங்களுக்கு பிறகு இங்கிலாந்து 23 ஆண்டுகளின் பின்பு ஆஷஷ் கிண்ணத்தை அவுஸ்திரேலிய மண்ணில் வைத்துப் பெற்றுக்கொண்டது.*

◈ *அவுஸ்திரேலியாவின் முதல் பெண் பிரதமராக தொழிற் கட்சியைச் சேர்ந்த ஜீலியா கில்லர்ட் பதவி வகிக்கிறார்.*

எகிப்து நாட்டில் புராதன காலத்தில் இறந்துபோனவர்களின் உடல்களை அவர்கள் இறுதியாகப் பயன்படுத்திய விருப்பத்திற்குரிய உபகரணங்களுடன் பிரமிட் எனும் கட்டிடத்தினுள் இட்டு வைக்கும் வழக்கம் இருந்தது. தற்போதும் இந்த பிரமிட்டுகள் இந்நாட்டில் காணப்படுகின்றன. இவ்வாறு வைக்கப்படும் உடல்களை மம்மி என எகிப்திய மொழியில் அழைக்கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சமகால உலக, உள்நாட்டு தரிசனம்

**◆2011 ஜனவரி , பெப்ரவரி**

*01.* **பாக்கிஸ்தான்** பஞ்சாப் மாநில ஆளுநர் சல்மான் தசீர் மெய்ப் பாதுகாவலரால் சுட்டுக்கொலை.

*02.* **ஐக்கிய நாடுகள்** சபையின் பாதுகாப்புச் சபையில் நிரந்தர இடத்தை இந்தியா, ஜேர்மனி, ஜப்பான் கோருகின்றன.

*03.* **எகிப்து** 2வது பெரிய நகரான அலெக்சான்டிரியாவுக்கு வெளியே *01.01.2011* இல் குண்டு வெடிப்பு *23* பேர் பலி.

*04.* **பாகிஸ்தான்** ஆளும் கூட்டமைப்பு கட்சியிலிருந்து விலகி எதிர்க்கட்சியுடன் இணைவதாக முதாஹிதாகுவாமி இயக்கக் கட்சி அறிவிப்பு.

*05.* **கென்யா** ஊழல் குற்றச் சாட்டில் தொழிற்றுறை அமைச்சர் ஹென்றிகொஸ்கி பதவி விலகினார்.

*06.* **ஈரான்** தனது அணு சக்தி நிலையங்களை பார்வையிட வெளிநாட்டு இராஜதந்திரிகளுக்கு அழைப்பு.

*07.* **பிரேசில்** முதல் பெண் ஜனாதிபதியாக டில்மா ரோசெப் பதவியேற்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

08. **பிரித்தானியா** இளவரசர் வில்லியம் கேட்மிடில்டின் ஆகியோருக்கு ஏப்ரலில் திருமணம் நடைபெறவுள்ளது.

09. **குவைத்** பிரதமர் ஷெய்க்நாசா மொகமட் தனக்கெதிரான நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தில் வெற்றி.

10. **பிரேசில்** வெள்ளம், மண்சரிவு 335 பேர் பலி 100க்கு மேல் காணவில்லை.

11. லெபனான் ஹிஸ்புல்லா அமைச்சர்களின் இராஜினாமாவைத் தொடர்ந்து அரசாங்கம் வீழ்ச்சி.

12. **ஆஷஸ்** கிரிக்கெற் தொடரை அவுஸ்திரேலியாவில் போட்டி நடந்தது. 23 ஆண்டுகளின் பின் இங்கிலாந்து 3:1 என்ற அடிப்படையில் வென்றது அவுஸ்ரேலியா தோல்வி.

13. **ஸ்ரீலங்கா** 1913 ஆண்டுக்குப் பின் அதிக மழைவீழ்ச்சி லாநினோ காலநிலை காரணம் நாடெங்கும் பாரிய வெள்ள அழிவு.

14. **அவுஸ்ரேலியா** 3வது மிகப்பெரிய நகர் குயின்லாந்து பாரிய வெள்ளப்பெருக்கு.

15. **ஈரான்** பயணிகள் விமானம் விபத்து 77 பேர் பலி.

16. **சூடான்** ஆபிரிக்காவின் மிகப்பெரிய நாடான இங்கு தென்சூடான் கருத்துக் கணிப்பு நடைபெற்றது.

17. **கட்டார்** பகிரங்க Open Tennis போட்டியில் சுவிஸ் ரோஜர் பெடரர் Chamion.

18. **ஐக்கிய அமெரிக்கா** மேற்கு மாநிலங்களில் பனிப்புயலால் பாதிப்பு.

19. **விக்கிலீக்ஸ் சுவிஸ்** வங்கி இரகசியக் கணக்குகளின் விபரங்களை வெளியிடப்போவதாக யூலியன் அஸேஞ் தெரிவிப்பு.

20. **தியூனிஸியா** முன்னாள் ஜனாதிபதி பென் அலி 1500கிலோகிராம் தங்கத்துடன் நாட்டை விட்டுத் தப்பி ஓடினார் 23 வருடம் ஆட்சி புரிந்தார் சவூதி அரோபியா சென்றார்.

21. **பிலிப்பைன்ஸ்** வெள்ளம், மண் சரிவு

22. **போர்த்துக்கல்** ஜனாதிபதி தேர்தல் ஆரம்பம் (பழைமைவாத கட்சி) கவாகோ சில்வா வெற்றி.

23. **ஜப்பான்** ஆள்களற்ற விநியோக ஏவுகணை வெற்றி கரமாக ஏவுகை ஜக்ஸா விண்வெளி முகவர் நிலையம் அனுப்பியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

24. 2011 G20, G8 உச்சி மகாநாடு பிரான்சில்

25. உலகக் கிண்ணக் கிரிக்கெற் போட்டிகளில் அதிக விக்கெற்று களை விழுத்திய வீரர் - கிளன் மேக்ராத் (அவுஸ்திரேலியா) 3வது வீரர் மு. முரளிதரன்.

26. ரஷ்யா மொஸ்கோ நகர சர்வதேச விமான நிலையத்தில் தற்கொலைக் குண்டுத் தாக்குதல் 35 பேர் பலி.

27. லெபனான் ஹிஸ்புல்லா அரசாங்கம் அமைப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்த ஆர்ப்பாட்டம்.

28. கட்டார் ஆசிய கிண்ண உதைபந்தாட்டம் சம்பியன் ஜப்பான் அவுஸ்திரேலியா Runner up.

29. லெபனான் புதிய பிரதமர் நஜீப் மிகதி. இவர் ஹிஸ்புல்லா அமைப்பின் ஆதரவாளர்.

30. இந்தோனேசியா புரோமோ எரிமலை குமுறல் (கிழக்கு ஜாவாவிலுள்ளது)

31. நெல்சன் மண்டெலா (90 வயது) நுரையீரல் சம்பந்தமான பிரச்சனைகளால் அவதிப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

32. எகிப்து 30 வருட ஆட்சியைச் செய்யும் ஹொஸ்னி முபாரக்கிற்கு எதிராக ஆர்ப்பாட்டங்கள். சிலர் பலி. மில்லியன் கணக்கானோர் பங்கேற்பு.

33. ICC கொல்கத்தா ஈடன் கார்டன் மைதானம் போட்டிகளுக்கு தயாராக வில்லை என அறிவிப்பு.

34. Asian Games ஆண்களுக்கான ஈட்டி எறியும் போட்டியில் கட்டார் வீரர் அகமது தீப்பெற்ற வெள்ளிப் பதக்கம் பறிப்பு ஊக்க மருந்து பாவித்தமை கண்டுபிடிக்கப்பட்டதன் காரணமாக பறிக்கப்பட்டது. அவுஸ்திரேலிய Open tennis champion கிம் கிளிஸ்டர்ஸ். மெல்பேண் நகரில் நடந்தது. போட்டி Runner up லீநா (சீனா)

35. ஜப்பான் ஆட்களற்ற விநியோக ஏவுகணை கோனோடோறி 2 வெற்றி கரமாக ஏவப்பட்டது. விண்வெளி வீரர்களுக்கு உணவு, மருந்து எரிபொருள் விநியோகம் செய்வதற்காக அனுப்பப் பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

36. இதுவரை நடைபெற்ற உலகக் கிண்ணக் கிரிக்கெற் போட்டிகளில் அதிக ஓட்டம் பெற்றவர் சச்சின் டெண்டுல்கர் 33 போட்டியில் 1732 ஓட்டங்கள் எடுத்துள்ளார்.

37. தெற்கு சூடான் வாக்களிப்பில் 99% மக்கள் தனிநாட்டு கோரிக்கைக்கு ஆதரவு தெரிவித்தனர். 2011 யூலையில் தனிநாடாகும். சூடான் மக்கள் விடுதலை இயக்கம் தலைமை தலைவர் றூல்வாகீர். 2005 இல் வாக்கெடுப்பு நடத்த தலைவர் ஒப்புக் கொண்டாார். தென்சூடான் ஆபிரிக்காவின் 55வது நாடாக மலர்ந்துள்ளது. அதிக நாடுகளைக் கொண்ட கண்டமாக ஆபிரிக்கா உள்ளது.

## 2011 மார்ச்

01. ஐவரிகோஸ்ற் - போராளிகள் படையினர் மோதல். உலகின் மிகப்பெரிய கொக்கோ உற்பத்தி நாடு இதுவாகும். 2002 இல் ஆயுதப் போராட்டத்தின் பின் நாட்டின் வடபகுதி போராளி களின் கட்டுப்பாட்டிலும், தென்பகுதி அரசாங்கக் கட்டுப் பாட்டின் கீழும் சென்றது.

02. லிபியாவுக்கான புதிய தூதுவராக ஐ.நா. செயலாளரால் முன்னாள் ஜோர்தானிய வெளிநாட்டு அமைச்சர் அபடேவியாலற் அல்காடிப் நியமனம்.

03. ஜப்பானிய வெளிநாட்டமைச்சர் செய்ஜிமேஹரா பதவி விலகியுள்ளார். பிறநாட்டுப் பிரஜையிடமிருந்த அரசியல் நன்கொடை பெற்றுக்கொண்டமை தொடர்பான குற்றச் சாட்டால் இது நிகழ்ந்தது.

04. எகிப்தில் புதிய அரசாங்கம் பதவியேற்பு. பிரதமர் - எஸாம்ஷராப்

05. லிபியாவுக்கு மேலாக விமானம் பறப்பதற்கு தடைவிதிக்கப்பட்ட வலயத்தைப் பிரகடனப்படுத்த Nato திட்டம்.

06. மெக்ஸிக்கோ - கார்லோஸ் சிலிம் 2வது தடவையாகவும் உலகின் முதல் கோடீஸ்வரராக போர்ப்ஸ் சஞ்சிகையால் தெரிவு.

07. லிபியா - எதிர்ப்பாளரிடமிருந்து ஸவியா நகரை கடாபி படையினர் கைப்பற்றினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

08. திவிநெகும இலங்கையில் 10 இலட்சம் இல்லங்களுக்கான வீட்டுத் தோட்ட அலகுகளை தேசிய ரீதியிலாக அபிவிருத்தி செய்யும் நடவடிக்கை. குடும்பங்களின் பொருளாதார போசாக்கு நிலையினை விருத்தி செய்யும் நடவடிக்கையாகும். சுயதொழில் கால்நடை வளர்ப்பு போன்றவையும் உள்ளடங்கும்.

09. பஹ்ரெயின் தலைநகரில் மனாமாவில் அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள். மன்னராட்சிக்கு எதிராக ஆர்ப்பாட்டங்கள் மக்களால் முன்னெடுப்பு.

10. ஜப்பானின் வடகிழக்கு பிரதேசத்தை சுனாமி பேரலைகள் தாக்கியழித்தது. 8.9 ரிச்டர் அலகில் பூகம்பம் தாக்கியது. மியாகி பிராந்தியத்தில் 10000 பேருக்கு மேல் பலி.

11. ஜப்பான் புகுஷிமா பகுதியிலுள்ள 6 அணு உலைகளில் சிலவெடிப்புக்குள்ளானது.

12. சவூதி அரேபியா - மன்னராட்சிகெதிராக ஆர்ப்பாட்டம் நடந்தது. பொலிசார் துப்பாக்கிச் சூடு.

13. சீனாவில் 5.4 ரிச்ரர் அலகில் பதிவாகியது பூமியதிர்ச்சி. 25 பேர் பலி.

14. ஸ்ரீலங்கா உள்ளூராட்சி சபைகள் 235க்கு 3036 உறுப்பினர்கள் தெரிய 29132 பேர் போட்டியிட்டனர்.

15. லிபியா - பிரேகா நகரில் அரசாங்க, கிளர்ச்சிப் படைகள் மோதல்.

16. பஹ்ரெயினுக்கு உதவ சவூதி அரேபியா, ஐக்கிய அரபு இராச்சியம் ஆகிய நாட்டுப் படையினர் சென்றனர்.

17. நைகர் - ஜனாதிபதி தேர்தலில் எதிர்க்கட்சி தலைவர் மஹம்டோயு இஸ்ஸோயுபோயு வெற்றி.

18. ஜப்பான் - புகுஷிமா டாய்ச்சி அணு உலையின் 4வது உலையிலும் வெடிப்பு.

19. லிபியாவுக்கு மேலாக விமானம் பறப்பதற்கு தடைவிதிக்க அரபு நாடுகள் ஆதரவு.

20. தியுனிஸியா இடைக்கால ஜனாதிபதி போலாத் மேபாஸா 2011 யூலையில் அரசியல் அமைப்பை வரைவதற்கான தேர்தலென அறிவித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21. **ஐக்கிய அமெரிக்கா** 83வது OSCAR விருது வழங்கும் வைபவம் - கலிபோர்னியா மாநில ஹொலிவூட்டில் நடந்தது. சிறந்த படம் The Kings speech (நான்காம் ஜோர்ஜ் மன்னரின் கதை) மன்னராக நடித்த கொலின் பிர்த் சிறந்த நடிகர். இப்படரொம் ஹீப்பர் - சிறந்த இயக்குநர் Black swan திரைப்பட நடிகை நாட்டார்லி போர்ட்மான் பெஜ்ஜார் In a better world (டென்மார்க்)

22. **பாகிஸ்தான்** - சிறுபான்மை இன அமைச்சர் ஷப்பாஸ்த்தி சுட்டுக்கொலை. கிறிஸ்தவரான இவர் சர்ச்சைக்குரிய மதஅவதூறு சட்டத்தை மாற்றுவதற்கு அழைப்பு விடுத்ததையிட்டு கொல்லப்பட்டு உள்ளார்.

23. **ஜப்பான்** - புகுஷிமா டாய்ச்சி அணு உலைகளில் வெப்பம் அதிகரிப்பதால் கடல் நீரை வாரியிறைப்பதில் ஈடுபட்டுள்ளனர்.

24. **யேமன்** - தென்யேமனில் இராணுவ ஆயுத தொழிற்சாலையில் வெடிவிபத்து 121 பேர் பலியாகினார்கள்.

25. **கியூபா** ஐக்கிய முன்னாள் ஜனாதிபதி ஜிம்மி கார்ட்டர் கியூபா சென்றார் அங்கு சிறையிருக்கும் அரச ஒப்பந்தக்காரர் அலன் குரொஸை விடுவிக்க முயற்சி.

26. **சிரியா** அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் தொடருகின்றது.

27. **அவுஸ்திரேலியா** - ரிக்கி பொன்டிங் Test one day match இலிருந்து விலகினார். இரு உலகக் கிண்ணம் கைப்பற்றிய பெருமைக் குரியவர். புதிய தலைவர் மைக்கல் கிளார்க்.

28. **ஆர்ஜென்டீனா** - வெனிசூலா ஜனாதிபதி ஹிகோசாவேசுக்கு ஆர்ஜென்டீனாவில் சுதந்திர ஊடகவியலாளர் விருது.

29. **இந்தியா** - மேற்கு வங்க மாநில சட்டசபையின் சபாநாயகராக 29 ஆண்டுகள் இருந்த ஹசிம் அப்துல்ஹலிம் உலக சாதனை.

30. **இத்தாலி** - பிரதமர் பெர்லுஸ்கோனி ஊழல் குற்றச்சாட்டில் நீதிமன்றில் ஆஜரானார்.

31. **ஓமான்** - அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றது. முன்பு தியூனிஸியா, எகிப்து, தற்போது யேமன், லிபியா, பஹ்ரெயின் பின்பு ஜோர்தான் சிரியா, மொரோக்கோ, அல்ஜீரியா என இவ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலை பரவுகிறது. அரேபிய வசந்தமென மேற்கு நாடுகள் இதனை கூறுகின்றன.

32. **ஓமான் சுல்தான்** - கபூஸ்பின் சயித் 40 வருடத்திற்கு மேல் ஆட்சி புரிகின்றார். 1744 முதல் அல்சயீத் வம்சாவளியினரின் ஆட்சிக்கு உட்பட்டது.

33. **ஜப்பான்** - புகுஷிமா அணுசக்தி நிலையத்தில் 10 மில்லியன் மடங்கு அதிகமான கதிர்வீச்சு இடம்பெற்றதாகக் கூறப்படுகிறது.

34. **ஸ்ரீலங்கா** உள்ளூராட்சி தேர்தல் முடிவுகளின்படி UPFA- 205, TNA - 12, முஸ்லீம் காங்கிரஸ் 4 என சபைகளைக் கைப்பற்றின.

35. 20 ஆண்டுகளில் முதல் தடவையாக சந்திரன் பூமிக்கு அருகில் வந்தது. சுப்பர்மூன் என இது அழைக்கப்பட்டது.

36. **லிபியா** - கடாபி படையினரின் கட்டளைப் பணியகம் கூட்டுப் படையினரால் தாக்கியழிப்பு.

37. **எகிப்து** - முக்கிய அரசியலமைப்பு மாற்றத்திற்கு ஆதரவாக மக்கள் வாக்களித்தனர்.

38. **ஸ்ரீலங்கா** கொழும்பு, தெகிவல, கோட்டை, கொலன்னாவ மாநகர சபைகளை உள்ளடக்கி நகர கூட்டுத்தாபனம் அமைக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

39. **போர்த்துக்கல்** - பிரதமர் ஜோஸ்சொக்ரடிஸ் பாராளுமன்றத்தில் வாக்கெடுப்பின்போது வரவு செலவுத் திட்ட தோல்வியால் இராஜினாமா.

40. **ஐக்கியஅமெரிக்கா** எலிஸபெத் ரெய்லர் மரணம். முன்னாள் பிரபல கவர்ச்சி நடிகையான இவர் இரு தடவை OSCAR AWARD சிறந்த நடிகைக்காகப் பெற்றார்.

41. **லிபியா** - இராணுவத் தளங்களின் மீது கூட்டுப்படையினர் தாக்குதல்

42. **ஜப்பான்** - அணுக்கதிர் வீச்சு பயத்தினால் வெளிநாடுகள் தமது பிரஜைகளை வெளியேறுமாறு அறிவித்தன.

43. இலங்கையில் பெருந்தெருக்களில் திடீர் விபத்து ஏற்பட்டால் அறிவிக்க வேண்டிய இலக்கம் 1969 ஆகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2011 ஏப்ரல்

*01.* **ஐவரிகோஸ்ட்** - லோரன்ட் ஸ்கபாகோ சரணடையப் போவதில்லை என அறிவிப்பு.

*02.* **இத்தாலி** - பிரதமர் சில்வியோ பெர்லூஸ்கோனி மீதான பாலியல் குற்றச்சாட்டு விசாரணைகள் ஆரம்பம்.

*03.* **ஜப்பான்** - கடலில் கலக்கும் கதிர்வீச்சு தன்மையுடைய நீர் கசிவைத் தடுக்கும் முயற்சியில் வெற்றி.

*04.* **லிபியா** - நேட்டோ படையினர் மக்களைக் காப்பாற்றத் தவறிய தாக கிளர்ச்சிப் படைக் கட்டளைத் தளபதி ஜெனரல் அப்துல் பத்தாற் யுனிஸ் குற்றம் சாட்டினார்.

*05.* **இந்தியா** - 4வது IPL கிரிக்கெற் போட்டிகள் ஆரம்பம்.

*06.* **பங்களாதேஷ்** - AUS பங்களாதேஷ் அணி one day match மேர்பூரில் - ஆஸிவீரர் 15 சிக்ஸர் அடித்துச் சாதனை. முன் மேற்கிந்திய வீரர் சேவியர் மார்ஷல் ODI, 2 சிக்ஸர் சாதனை முறியடிப்பு.

*07.* **ஐவரிகோஸ்ட்** - பதவி விலக மறுத்த ஜனாதிபதி லோரன்ட்க் பாக்கோ சிறைப்பிடிப்பு

*08.* **கென்யா** - 23வது உலகக் குடிசன மகாநாடு நடைபெற்றது. இங்குள்ள ஐக்கிய நாடுகளின் குடிசன மத்திய ஆணைக்குழுவின் தலைமையகத்தில் இது நடைபெற்றது. 11 நாட்டின் அனைத்துப் பிரதேசங்களையும் சிறிய நகரங்களாக அபிவிருத்தியடையச் செய்தல் என்பது. இதன் தொனிப் பொருள்.

*09.* **ஜப்பான்** - புகுஷிமா அணு உலையில் ஐதரசன் வெடிப்பை தடுப்பதற்கு நைதரசன் வாயு உட்செலுத்தப்பட்டது.

*10.* **நைஜீரியா** - ஜனாதிபதி தேர்தல் குட்லக் ஜோனாதன் 57சதவீத வாக்குப்பெற்று அமோக வெற்றி.

*11.* **தியூனிஸிய** முன்னாள் ஜனாதிபதி பென் அலி மீது 18 குற்றச்சாட்டுக்கள்

*12.* **ஆபிரிக்க** ஒன்றியத்தின் சமாதான திட்டத்தை லிபியா ஏற்றது.

*13.* **கொசோவோ** - முதல் பெண் ஜனாதிபதியாக அதிபெடி ஜஹ்ஜஹா என்பவர் தெரிவு செய்யப்பட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14. சாயிபாபா இறைபதம் அடைந்தார் ஆந்திரபுட்ட பர்த்தியில் 27.04.11 காலை பூதவுடல் நல்லடக்கம்.

15. ஐக்கிய நாடுகள் சபையால் இலங்கை குறித்த போர்க்குற்ற ஆவணம் வெளியாகியது.

16. **ஸ்ரீலங்கா** - எலிக்காய்ச்சல் பரவி வருகிறது.

17. **சிரியா** - அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக அரசு பீரங்கிகள், துப்பாக்கிகளால் சூடு - UNO இதை எதிர்த்தது.

18. **திபெத்** - நாடுகடந்த நிலையில் வாழும் திபெத்தியர்களின் புதிய தலைவ ராக லோப்சாங் சங்கே தெரிவானார். நாடு கடந்த அரசின் பிரதமராக இருப்பதுடன் தலாய்லாமாவிற்கு பின் தலைவராக இருப்பார்.

19. **ஸ்ரீலங்கா** அரச உத்தியோகத்தர்களுக்கு ஜனசெவன வீடமைப்பு உபகார கடன் திட்டம் நடைமுறையிலுள்ளது.

20. **இந்தியா** - கிரிக்கெற் அணி புதிய பயிற்றுவிப்பாளர் டங்கன் ப்ளெட்சர். இவர் சிம்பாவே கிரிக்கெற் அணியின் முன்னாள் தலைவர். கேரிகோஸ்டன் (தென் ஆபிரிக்கா) பயிற்றுவிப்பாளார் பதவியிலிருந்து ஓய்வுக்குப் பின்னரே புதிய பயிற்றுவிப்பாளராக ப்ளெட்சர் நியமிக்கப்பட்டுள்ளார்.

21. **பிரித்தானியா** இளவரசர் வில்லியம், கேட் மிடில்டன் திருமணம் வெஸ்மினிஸ்ரர் அபே தேவாலயத்தில் நடந்தது. 2 பில்லியன் மக்கள் கண்டுகளிப்பு

22. **ஐக்கிய அமெரிக்கா** தென்கிழக்கு பிராந்தியத்தை புயல் தாக்கியது. அலபமா, தென்னஸி, மிசிசிப்பி, ஜோர்ஜியா, வேர்ஜினியா மாநிலங்களே பாதிப்பு. 300க்கு மேல் பலி.

23. ஐக்கிய அமெரிக்கா புதிய புலனாய்வு பிரிவு பணிப்பாளராக ஜெனரல் டேவிட்பெட்ரேயஸ் - ஜனாதிபதி ஒபாமாவால் நியமனம்.

24. **மேற்கு இந்திய** தீவுகளில் பாகிஸ்தான், மேற்கு இந்திய தீவு கிரிக்கெற் நடைபெற்றது. 3 ஒரு நாள் போட்டிகளில் பாகிஸ்தான் வென்றது.

25. பராக் ஒபாமா அமெரிக்காவில் பிறந்தவர் என்பதை நிரூபிக்கும் பிறப்புச் சான்றிதழ் வெளியிடப்பட்டது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

26. **ஜவுரிகோஸ்ட்** - புதிய ஜனாதிபதி அலஸேன் குவாட்டராவின் படைகளால் 10 வருடத்திற்கு மேற்பட்ட பல இராணுவப் புரட்சிகளுடன் தொடர்புபட்ட போராளி குழுத் தலைவர் இப்ராகிம் கோலி பலி. சுட்டுக் கொல்லப்பட்டார்.

27. **சிரியா** - ஆளும் கட்சி உறுப்பினர்கள் 200 பேர் ஒரே சமயத்தில் இராஜினாமா.

28. பஷார் அல்அஸாத் தற்போதைய சிரிய ஜனாதிபதி.

29. **லிபியா** - இராணுவ நடவடிக்கையில் அமெரிக்க ஆளற்ற விமானங்கள்.

30. **ஹெய்ட்டி** நாட்டின் புதிய ஜனாதிபதியாக பிரபல பாடகர் மிசேல் மார்ட்டெல்லி பிரகடனம் செய்யப்பட்டார்.

30. **ஜப்பானில்** 4 தாய்மாரின் முலைப்பாலில் கதிர்வீச்சு அவதானிக்கப்பட்டது.

31. **பர்ஹன்ஹக்** இவர் ஐ.நா. செயலாளர் நாயகத்தின் பிரதிப் பேச்சாளர்.

32. **கோபா டெல்ரே** எனப்படும் கிங்ஸ்கப் இறுதி ஆட்டத்தில் ரியல் மட்ரிட் சம்பியனாகியது. Runner up - பார்சிலோனா. இது உதைப்பந்தாட்டப் போட்டியாகும்.

## 2011 மே

01. **சிங்கப்பூர்** - பொதுத் தேர்தலில் ஆளும் கட்சி மீளவும் வெற்றி. 1959 முதல் ஆட்சி செய்யும் மக்கள் செயற்பாட்டுக் கட்சிக்கு 81 ஆசனம் கிடைத்தது. எதிர்க்கட்சியாக தொழிலாளர் கட்சி உள்ளது.

02. விக்கிலீக்ஸ் - ஸ்தாபகர் யூலியன் அசேஞ்சுக்கு அவுஸ்ரேலிய சிட்னி சமாதான மன்றத்தின் உயர் கௌரவ விருது வழங்கப் பட்டது.

03. **ஸ்ரீலங்கா** அரச உத்தியோகத்தர்கள் ஓய்வுபெறும் வயதெல்லை 55 இலிருந்து 57 வரை உயர்த்தப்பட்டது.

04. 2011 சர்வதேச தடகளப் போட்டிகள் செக்குடியரசில் நடைபெற உள்ளது.

05. **ஸ்ரீலங்கா** 2018 பொது நலவாய விளையாட்டுப் போட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்பாந்தோட்டையில் நடத்துவதற்கு கோரிக்கை விடுவித்து வருகிறது.

06. ஐக்கிய அமெரிக்கா துணை ஜனாதிபதி ஜோபிடென்.

07. அமெரிக்காவின் கடற்படை சிறப்புப் பிரிவு சீல் (SEA) படையணி (Sea, Air land) கடல், ஆகாயம், தரை ஆகியவற்றில் திறமை காட்டும் படையணி இது.

08. சங்கேதக்குறி EKIA (Enemy killed in Action) பாகிஸ்தானின் தலைநகர் இஸ்லாபாத் நகருக்கு அருகாமையிலுள்ள அப்டபோபாத் நகரில் ஒசாமா பின்லேடன் கொல்லப்பட்டார்.

09. ஸ்ரீலங்கா 2600வது ஆண்டு சம்புத்தத்துவ ஜெயந்தி கொண்டாடப் பட்டது.

10. ஐரோப்பிய தினம் கொண்டாட்டம் - மே 09 இல் வருடாந்தம் கொண்டாடப்படுகிறது.

11. இந்தியாவில் ஹெலி விபத்து அருணாசல முதலமைச்சர் - டோர்ஜிகாண்ட் பலி. ஏனைய 3 பேரும் பலி.

12. கனடா - பாராளுமன்றத் தேர்தலில் தமிழ்ப் பெண் வெற்றி பெற்றுச் சாதனை ரொறன்ரோ - கிழக்குப் பகுதியில் புலம்பெயர் தமிழர்கள் ஸ்காபுறோ பகுதியில் பெரும்பான்மையாக வாழ்கின்றார்.

13. லிபியா கடாபி மகன் Nato படையினரின் தாக்குதலில் சயீப் அல்அராப் (29 வயது) கொல்லப்பட்டார்.

14. கனடா - பொதுத் தேர்தலில் - ஸ்ரீபன் ஹார்பர் மீண்டும் வெற்றி.

15. ஐக்கிய அமெரிக்கா பின்லேடன் படுகொலையால் அமெரிக்க பாகிஸ்தானிய உறவில் விரிசல்.

16. இந்தியா - IPL 4வது போட்டியில் சென்னை சுப்பர்கிங்ஸ் Champion

17. ஐஸ்லாந்து - கிறிம்ஸ்வோட்சன் எரிமலை குமிறி புகையையும் சாம்பலையும் தள்ள விமான சேவைகள் பாதிப்புக்குள்ளானது.

18. பிரான்ஸ் - பாலியல் குற்றச்சாட்டில் பொது சேவைகள் அமைச்சர் ஜோர்ஜஸ் திரோன் இராஜினாமா செய்தார்.

19. EUFA - ஐரோப்பிய கால்பந்தாட்டச் சம்மேளனம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20. **ஜேர்மனி** - 2022 இல் அணுசக்தி உலைகளைமூடிவிட உத்தேசம். ஜப்பான் புகுஷிமா விபத்தே காரணம் என தெரிவிக்கப்பட்டது.

21. **ஆர்ஜென்டினாவின்** முன்னாள் இராணுவ ஜெனரல் - எட்வார்டோ கபானில் லாஸ் ஆயுள் தண்டனை.

22. **இந்தியா** - இந்தியாவில் பெருகிவரும் ஊழல்களைக் கண்டித்து அன்னா ஹசாரி எனும் பிரபல சமூக சேவையாளர் சாகுல் வரை உண்ணாவிரதம் இருந்தார்.

## 2011 யூன்

01. ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளராக பான்கீமூன் மீண்டும் தெரிவு செய்யப்பட்டார்.

02. அய்மான் அல்சவாஹிரி அல்கொய்டா புதிய தலைவராக பிரகடனம். எகிப்து நாட்டவர். ஒசாமா பின்லேடன் மரணத்தின் பின்பே இவர் பிரகடனம் செய்யப்பட்டார்.

03. உலக சுகாதார சபையின் உலக சுகாதாரத்துக்கும் மனித உரிமைகளுக்குமான ஜொனாதன் மான் விருது இரு ஈரானிய மருத்துவர்களுக்கு வழங்கப்பட்டது. கமியர் அலேயி, அராஷ் அலேயி ஆகிய ஈரான் மருத்துவர்களே அவர்கள்.

04. **ஐக்கிய அமெரிக்கா** இணையத் தளத்தின் மூலம் பெண்களுக்கு ஆபாச பாலியல் புகைப்படங்களை அனுப்பிய குற்றச் சாட்டின் பேரில் அமெரிக்க ஜனநாயகக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் அந்தோனி வெயினர் பதவியை ராஜினாமா செய்தார்.

05. **ரஷ்யா** - புதுயுகத்தின் பொருட்டு வளர்ந்து வருகின்ற தலைமைத்துவம் எனும் தொனிப் பொருளில் நடைபெற்ற பொருளாதார வளர்ச்சி மகாநாட்டில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பங்கேற்றார்.

06. **சிலி** - தென் சிலி எரிமலை புயெஹிகோர்டன் கோலி எரிமலை 2 வாரங்களாக குமுறி வருகிறது. இதனால் ஆர்ஜென்னீனா, உருகுவே தென் பிரேசில், அவுஸ்திரேலியா, நியூசிலாந்து ஆகிய நாடுகளுக்கான விமான சேவைகள் பாதிக்கப்பட்டது. வானில் புகைமண்டலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

07. **ஸ்ரீலங்கா** பிறீமியர் லீக் (SLIPL) போட்டிகள் ருவென்ரி - ருவென்ரி நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டது.

08. French open tennis champion ரபேல் நடால் (ஸ்பெயின்). 6வது முறையாகச் சம்பியனாகினார். பெடரர் பெற்ற 10 கிராண்ட் ஸ்லம் பட்டத்தை இதன் மூலம் சமன் செய்தார்.

09. உலகில் அதிக பணம் சம்பாதிக்கும் விளையாட்டு வீரர்கள் போல் வீரர்.

1. டைகர் வூட்ஸ்
2. மிக்கல்சன்

10. **சோமாலியா** - பிரதமர் மொகமட் அப்துல்லாறி பர்மஜோ பதவி விலகினார்.

- **பில்கேட்ஸ்** - அமெரிக்காவைச் சேர்ந்த இவர் மைக்றோ சொவ்ற் எனும் கணனி மென்பொருள் தயாரிப்பு நிறுவனத்தின் ஸ்தாபகர்.
- **பான்கீன் மூன்** - ஐக்கியநாடுகள் சபையின் செயலாளர் நாயகம். தென்கொரியாவின் முன்னாள் வெளியுறவு அமைச்சரான இவர் 2007ஆம் ஆண்டில் முதல் தடவையாக ஐ.நா. செயலாளர் நாயகமாகத் தெரிவு செய்யப்பட்டார். தற்போது மீண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பதவிக்கு 192 நாடுகளாலும் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள இவர் 2012 ஜனவரியிலிருந்து 2016 டிசெம்பர் 31 வரை அடுத்த 5 ஆண்டுகளுக்கும் பதவியில் இருப்பார்.

- **ரொபேர்ட் கேற்ஸ்** - ஐக்கிய அமெரிக்காவின் முன்னாள் பாதுகாப்புத்துறைச் செயலாளர். அமெரிக்காவில் இவ்வாறுதான் இப்பதவி அழைக்கப்படுகிறது. 2011 யூன் இறுதியுடன் பதவி விலகினார்.
- **சுரேஸ் கல்மாடி** - இந்தியாவின் ஆளும் காங்கிரஸ் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான இவர் ஊழல் குற்றச்சாட்டின் பேரில் டில்லி, திகார் சிறையிலுள்ளார்.
- **எஸாம் ஷராப்** - எகிப்து நாட்டின் புதிய பிரதமர்.
- **ஹொஸ்னி முபாரக்** - எகிப்து நாட்டை நீண்ட காலம் ஆட்சி செய்து மக்கள் புரட்சியால் 2011இல் விரட்டப்பட்ட சர்வாதிகார ஆட்சியாளர்.
- **லியன்சான்** - சீனாவினால் 2011 இல் முதன் முதலாக வழங்கப்பட்ட கொன்பியூசியஸ் சமாதானவிருதை வென்றவர். இவர் தாய்வான் நாட்டின் முன்னாள் உப ஜனாதிபதி.
- **பிலிப்பே கால் டெரோன்** - மெக்சிக்கோ நாட்டின் ஜனாதிபதி.
- **றிட்சார்ட் ஹோல்புரூக்** - அமெரிக்காவின் புகழ்பெற்ற இராஜதந்திரி. அமெரிக்க வெளியுறவுத் துறையில் பல சாதனை படைத்தவர். 2009 டிசெம்பரில் 69 ஆவது வயதில் காலமானார்.
- **மனோஜ்ஹர் மொதாகி** - ஈரானின் முன்னாள் வெளியுறவுத் துறை அமைச்சர். அதிகாரப் போராட்டத்தின் விளைவாக 2010 டிசெம்பரில் பதவி துறந்தார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ◆ சல்மான் தசீர் - பாகிஸ்தானின் பஞ்சாப் மாநில ஆளுநர், இவரது மெய்ப் பாதுகாவலராலேயே 2011 ஜனவரியில் சுட்டுக் கொல்லப் பட்டார்.
- ◆ கென்றி கொஸ்கி - கென்ய நாட்டின் முன்னாள் தொழில் துறை அமைச்சர். ஊழல் குற்றச்சாட்டின் பேரில் 2011 ஜனவரியில் பதவி விலகினார்.
- ◆ அல்பார்ட்டோ கொன்டாடோர்- பிரான்சின் உலகப் புகழ்பெற்ற Tour De France சைக்கிளோட்டப் போட்டி யில் 3ஆவது முறையாகவும் 2010 இல் பரி வென்றவர்.
- ◆ மரோப் பக்ஹித் - ஜோர்தான் நாட்டின் புதிய பிரதமர். முன்னாள் இராணுவ அதிகாரி
- ◆ ஜோ பிடென் - அமெரிக்க துணை ஜனாதிபதி
- ◆ இப்ராகிம் கோலிபரி - ஐவரி கோஸ்ட் நாட்டில் பல இராணுவப் புரட்சிகளுடன் தொடர்புபட்ட போராளிக் குழுத்தலைவர். 2011 ஏப்பிரலில் சுட்டுக்கொல்லப் பட்டார்.
- ◆ பர்ஹறன் ஹக் - ஐ. நா. செயலாளரின் பிரதிப் பேச்சாளர்.
- ◆ லியோன் பனேட்டா - அமெரிக்காவின் புதிய பாதுகாப்புச் செயலாளராக 2011 யூலை முதல் பதவியேற்றுள்ளார்.
- ◆ மிசேல் மார்ட் டெல்லி - ஹெய்ட்டி நாட்டின் புதிய ஜனாதிபதி யாகப் பிரகடனம் செய்யப்பட்ட பிரபல பாடகர்.
- ◆ கார்லா புருணி - பிரான்ஸ் நாட்டின் முதற்பெண் இவரது பாலியல் விவகாரம் தொடர்பில் மிகுந்த சர்ச்சைகள் ஊடகங்களால் கூறப்படு கின்றது. நெப்போலியனின் மனைவிக்குப் பிறகு இவரே குழந்தை பெற்ற ஆட்சித் தலைவரின் மனைவி இவரே ஆகும்.
- ◆ சாரா பாலின் - அமெரிக்காவின் அலாஸ்கா மாநில முன்னாள் ஆளுநர். கவர்ச்சி மிக்க முன்னாள் அரசியல்வாதி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- **அந்தோனி வெயினர்** - அமெரிக்க ஜனநாயகக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர். இணையத் தளத்தின்மூலம் பெண்களுக்கு ஆபாசப் படங்களை அனுப்பிய குற்றச்சாட்டினால் பதவி விலகினார்.
- **அய்மான் அல்சவாஹிரி** - அல்கொய்டா இயக்கத்தின் புதிய தலைவராகப் பிரகடனம் செய்யப் பட்டவர். எகிப்து நாட்டவர். ஒசாமா பின் லேடனை அமெரிக்காவின் அதிசிறப்பு படையணியான சீல் (SEAL Sea, Air, Land) படையணியினர் ஜெரோனிமா எகியா நடவடிக்கையின் மூலம் கொல்லப்பட்டதன் பின்ன அல்சவாஹிரி தலைவராகத் தெரிவு செய்யப்பட்டு உள்ளார்.
- **ஷகித் அப்ரிடி** - பாகிஸ்தான் கிரிக்கெற் அணியின் முன்னாள் தலைவர். 2011 இவ் வருடம் நடந்த 10ஆவது உலகக் கிண்ண கிரிக்கெற் போட்டிகளுக்கு பாகிஸ்தான் அணியை அரையிறுதி வரை வழிநடத்தியவர்.
- **அலன் ஐசாக்** - சர்வதேச கிரிக்கெற் சம்மேளனத்தின் (ICC) துணைத் தலைவர் - நியூசிலாந்து நாட்டவர்.
- **லெக்கக்ஸின்ஸ்கி** - ரஷ்யாவில் இடம் பெற்ற விமான விபத்தில் கொல்லப்பட்ட போலந்து ஜனாதிபதி.
- **புரோனிஸ்லாவ் கொமொரோவ்ஸ்கி** - போலந்து நாட்டின் தற்போதைய ஜனாதிபதி.
- **சீ. ஆர். டி. சில்வா** - இலங்கையில் LLRC எனப்படும் கற்றறிந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் தலைவர். இலங்கையின் முன்னாள் சட்டமா அதிபர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- **ஹசன் நசருல்லா** - லெபனான் நாட்டின் ஹிஸ்புல்லா குழுத் தலைவர்.
- **கென் வயட்** - அவுஸ்திரேலிய நாட்டின் பூர்வீகக் குடியினத்தின் முதலாவது நாடாளுமன்ற உறுப்பினராக 2010 ஓகஸ்ட் தேர்தலில் தெரிவானார்.
- **தான் சவே** - மியன்மார் (பர்மா) நாட்டின் முன்னாள் இராணுவ ஆட்சித் தலைவர் - 2010 ஓகஸ்ட் மாதம் பதவி விலகினார்.
- **தலாய் லாமா** - சீனாவின் ஆக்கிரமிப்பிலுள்ள திபெத் நாட்டின் ஆன்மீகத் தலைவர். தற்போது இந்தியாவில் அஞ்ஞாதவாசமிருக்கிறார்.
- **ஆங்சான் சூ கீ** - மியன்மார் நாட்டில் ஜனநாயக உரிமை கோரிப் போராடிவரும் பெண். ஜனநாயகத்திற்கான தேசிய லீக் (NLD) எனும் கட்சியின் தலைவி. உலக சமாதானத்திற்கான நோபல் பரிசையும் வென்றுள்ளார்.
- **முஸ்தபா கமால்** - ஆசிய கிரிக்கெற் கவுன்சில் தற்போதைய தலைவர் பங்களாதேஷ் நாட்டவர்.
- **தாருஸ்மன்** - இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க் குற்றச்சாட்டுக்களை விசாரித்து அறிக்கை சமர்ப்பிப்பதற் காக ஐ. நா. செயலாளர் நாயகத்தினால் நியமிக்கப்பட்டவர். இந்தோனேசியா நாட்டைச் சேர்ந்தவர்.

**வெற்றிபெற்ற போராட்டங்களை புரட்சி என்றும் , தோல்வி அடைந்த போராட்டங்களை கிளர்ச்சி என்றும் வரலாற்று அறிஞர்கள் அழைப்பது விந்தையாகவும் வேடிக்கையாகவும் இருப்பது வழக்கமான ஒன்றுதான்.**

**-ஓர் அறிஞர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நாடுகள் - ஆட்சித் தலைவர்கள்

01. இத்தாலிய பிரதமர் - மரியோமொன்ரி.
02. பிரித்தானிய பிரதமர் டேவிட் கமரோன்.
03. இந்தோனேசிய ஜனாதிபதி - சுசிலோ பம்பாஸ்
04. சீன ஜனாதிபதி - ஹீ ஜிந்தாவோ.
05. கனடா பிரதமர் - ஸ்ரீபன் ஹார்பர்
06. அவுஸ்திரேலிய பிரதமர் - ஜீலியா கில்லர்ட்
07. ரஷ்ய ஜனாதிபதி - திமித்ரி மெட்வேடேவ்
08. அமெரிக்க ஜனாதிபதி - பராக் ஒபாமா
09. ஜப்பானிய பிரதமர் - யொஷி ஹிகோ நொடா
10. இந்திய ஜனாதிபதி - பிரதீபா பட்டேல்
11. புரூண மன்னர் - ஹசனால் பொல்கியா
12. சிலி ஜனாதிபதி - செபஸ்ரியன் பினேரா
13. ஹொங்கொங் நிறைவேற்றதிகாரத் தலைவர் - டொனால்ட் ரிஷங்
14. சிங்கப்பூர் பிரதமர் - லீ ஹசியன் லூங்
15. பெரு ஜனாதிபதி - ஒலன்டா ஹீமலா
16. இந்திய பிரதமர் - மன்மோகன்சிங்
17. மலேசியப் பிரதமர் - நஜீப் ரஸாக்.
18. தென்கொரிய ஜனாதிபதி - லீ மயுங்
19. பபுவா நியூகினி பிரதமர் - பீற்றர் ஓ நெயில்
20. பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி - பெனிக்னோ அகியூனோ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21. வியட்நாம் ஜனாதிபதி - துறுவோன் தான்சாங்
22. குவைத் பிரதமர் - ஷெய்க் நாசா மொகமட்
23. பங்களாதேஷ் பிரதமர் - ஷேக் ஹசீனா
24. லெபனான் பிரதமர் - நஜீப் மிகதி
25. போர்த்துக்கல் ஜனாதிபதி - கவாகோ சில்வா
26. பாகிஸ்தானிய ஜனாதிபதி - அஸிப் அலிசர்தாரி
27. ஐவரிகோஸ்ட் ஜனாதிபதி - அலஸேன் குவாட்டரா
28. ஜப்பான் பேரரசர் - அகிஹிதோ
29. நைகர் ஜனாதிபதி - மஹம்டோயு இஸ்ஸோயு போயு
30. வெனிசுவேலா ஜனாதிபதி - ஹீகோ சாவேஸ்
31. ஓமான் சுல்தான் (மன்னர்) - கபூஸ் பின்சயித்
32. நைஜீரிய ஜனாதிபதி - குட்லக் ஜொனாதன்
33. கொசோவோ ஜனாதிபதி - அதிபெடி ஜஹ்ஜஹா
34. எகிப்திய பிரதமர் - கமால் கன்ஸோரி
35. ஐக்கிய அமெரிக்க துணை ஜனாதிபதி - ஜோ பிடென்
36. பாகிஸ்தானிய பிரதமர் - யூசுப் ரசா கிலானி
37. துருக்கிய பிரதமர் - ரஜப் தய்யிப் உருதுகான்
38. பங்களாதேஷ் பிரதமர் - ஷேக் ஹசீனா
39. தாய்லாந்து பிரதமர் - யிங்வக் சின்வட்ரா
40. யேமனிய ஜனாதிபதி - அலி அப்துல்லா சாலெஹ்
41. நியூசிலாந்து பிரதமர் - ஜோன் கீ
42. ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி - ஹமீட் ஹர்சாய்
43. இஸ்ரேல் பிரதமர் - பெஞ்சமின் நெட்டென்னியாகூ
44. சிரிய ஜனாதிபதி - பஷீர் அல்அசாத்
45. பிரான்ஸ் ஜனாதிபதி - நிக்கலஸ் சார்க்கோஸி
46. போலந்து பிரதமர் - டொனால்ட் டஸ்க்
47. ஜமேக்கா பிரதமர் - அன்ட்றூ ஹோல் நெஸ்
48. பூட்டான் மன்னர் - ஜிம்மி கேசார் வாங்சுங்க்
49. கிரேக்க (கிரீஸ்) பிரதமர் - லூகாஸ் பயடமொஸ்

**(2011 டிசெம்பரில் தொகுக்கப்பட்டது)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சர்வதேச நாட்கள் அல்லது தினங்கள்

ஐக்கிய நாடுகள் சபை வருடத்தின் குறித்த சில நாட்களை உலக மக்களுக்கு நல்லெண்ணத்தையும், சமூகப் பொறுப்பையும் வளர்க்கும் நோக்குடன் முதன்மை வாய்ந்த நாள்களாகப் பிரகடனம் செய்துள்ளது. இவ் அறிவிப்பு, காலத்திற்குக் காலம் புதிதாகவும் இடம்பெற்று வருகின்றது.

**அவ்வாறு பிரகடனமான சில நாள்கள்:**

| | | | |
|---|---|---|---|
| மார்ச் | 08 | - | சர்வதேச மகளிர் தினம் |
| மார்ச் | 22 | - | சர்வதேச குடிநீர் தினம் |
| மார்ச் | 27 | - | சர்வதேச நாடக தினம் |
| ஏப்பிரல் | 07 | - | சர்வதேச சுகாதார தினம் |
| ஏப்பிரல் | 10 | - | சர்வதேச அன்னையர் தினம் |
| ஏப்பிரல் | 12 | - | சர்வதேச தாதிகள் தினம் |
| ஏப்பிரல் | 22 | - | சர்வதேச பூமிப்பாதுகாப்பு தினம் |
| ஏப்பிரல் | 23 | - | சர்வதேச புத்தகத் தினம் |
| மே | 01 | - | சர்வதேச தொழிலாளர் தினம் |
| மே | 03 | - | சர்வதேச பத்திரிகைச் சுதந்திர தினம் |
| மே | 08 | - | சர்வதேச செஞ்சிலுவை, செம்பிறை தினம் |
| மே | 14 | - | சர்வதேச நூதனசாலை தினம் |
| மே | 15 | - | சர்வதேச குடும்ப நலன் தினம் |
| மே | 17 | - | சர்வதேச தொலைத்தொடர்பு தினம் |
| மே | 21 | - | சர்வதேச கலாசார/பண்பாட்டு தினம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மே 31 - சர்வதேச புகையிலை மறுப்பு தினம்

யூன் 05 - சர்வதேச சுற்றுச்சூழல் தினம்

யூன் 26 - சர்வதேச போதை மருந்து எதிர்ப்பு தினம்

யூலை 11 - சர்வதேச சனத்தொகை தினம்

யூலை 26 - சர்வதேச சித்திரவதை எதிர்ப்பு தினம்

யூலை 28 - சர்வதேச அகதிகள் தினம்

செப்ரெம்பர்08 - சர்வதேச ஆதிவாசிகள் / பழங்குடிகள் தினம்

செப்ரெம்பர் 08 - சர்வதேச எழுத்தறிவு தினம்

ஒக்ரோபர் 01 - சர்வதேச சிறுவர் தினம்

ஒக்ரோபர் 03 - சர்வதேச மதுஒழிப்பு தினம்

ஒக்ரோபர் 03 - சர்வதேச உயிரினங்கள் தினம்

ஒக்ரோபர் 06 - சர்வதேச ஆசிரியர் தினம்

ஒக்ரோபர் 09 - சர்வதேச அஞ்சல் தினம்

ஒக்ரோபர் 10 - சர்வதேச உளச் சுகாதார தினம்

ஒக்ரோபர் 15 - சர்வதேச வெள்ளைப்பிரம்பு/விழிப்புலனற்றோர் நாள்

ஒக்ரோபர் 16 - சர்வதேச உணவு நாள்

ஒக்ரோபர் 17 - வறுமை ஒழிப்பு நாள்

ஒக்ரோபர் 21 - சர்வதேச விவசாய நாள்

ஒக்ரோபர் 30 - சர்வதேச சேமிப்பு நாள்

நவெம்பர் 20 - சர்வதேச சிறுவர் உரிமை நாள்

நவெம்பர் 21 - சர்வதேச கடற்றொழில் நாள்

நவெம்பர் 25 - பெண்கள் தொடர்பான வன்முறைக்கெதிரான சர்வதேச தினம்

டிசெம்பர் 01 - சர்வதேச எய்ட்ஸ் (AIDS) நாள்

டிசெம்பர் 03 - சர்வதேச ஊனமுற்றோர் நாள்

டிசெம்பர் 10 - சர்வதேச மனித உரிமைகள் நாள்

டிசெம்பர் 18 - சர்வதேச சிறுவர் ஒலிபரப்பு நாள்

ஒக்ரோபர் 15 - கை கழுவுதல் தினம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கை

பகுதி I

**பொது நிர்வாகக் கட்டமைப்பு**

நாட்டின் பொது நிர்வாகமானது 1954 இற்கு முன்பு ஐந்து மட்ட நிர்வாக அமைப்பாக பின்வரும் படிமுறையில் இருந்தது. மாகாணம், மாவட்டம், காரியாதிகாரி (D.R.O.) பிரிவு, உடையார் பிரிவு, விதானையார் பிரிவு.

1954 ஆம் ஆண்டில் மாகாண நிர்வாகம் கைவிடப்பட்டு மாவட்டமே உயர் நிர்வாக அலகாக மாறியது. மாவட்டத்திற்கு அடுத்தபடியாக காரியாதிகாரி பிரிவுகள் இருந்தன.

காரியாதிகாரி பிரிவுகள் உருவாக முன்னர் மணியகாரர் பிரிவுகள் இருந்தன. மணியகாரர் ஓய்வுபெற்றபோது, மரணித்தபோது அவர்களிற்கு மாற்றாக காரியாதிகாரிகள் நியமிக்கப்பட்டனர். காரியாதிகாரிகள் நிர்வாக அலகிற்கு அடுத்ததாக உடையார் பிரிவுகள் இருந்தன. இவையும் 1954 இல் முடிவுறுத் தப்பட்டன.

1954 இன் பின் மாவட்டம், காரியாதிகாரி பிரிவு, விதானை பிரிவு என நிர்வாக அமைப்பு மூன்று மட்டங்களானது.

1963இல் விதானை எனும் பதவிப் பெயர் கிராமசேவகர், (கிராம நிலதாரி) என மாற்றப்பட்டது. ஏற்கனவேயிருந்த விதானைமார் பரீட்சை எடுத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்தியடைய வேண்டி வந்தது. புதிதாகவும் பலர் கிராம சேவகராக நியமனம்பெற்று புதிய பிரிவுகளும் உருவாக்கப்பட்டன.

1970 களில் காரியாதிகாரி பிரிவுகள் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளாக மாற்றம் பெற்றன. இத்துடன் உதவி அரசாங்க அதிபருக்கு நில அதிகாரங்களும் கொடுக்கப் பட்டன.

1988 டிசெம்பரில் ஜனாதிபதி பதிவியேற்ற பிரேமதாஸ "அதிகாரம் யாருக்கு?" மக்களுக்குத்தான் சேவை. ஆகவே மக்களின் காலடியில் நிர்வாகத்தைக் கொண்டு செல்ல வேண்டுமென்ற கருத்தை முன்வைத்தார். இதன் பயனாக 1989 இல் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் பல பிரதேச செயலகங்களாக **(Divisional Secretariat)** மாற்றப்பட்டன. உதவி அரசாங்க அதிபர் பதவி பிரதேச செயலர் என மாற்றப்பட்டது.

மணியகாரர் காலத்தில் சட்டம் ஒழுங்கில் கூடிய கவனம் செலுத்தப்பட்டது. காரியாதிகாரி காலத்தில் வருமானச் சேகரிப்பில் முக்கிய கவனம் செலுத்தப்பட்டது. உதவி அரசாங்க அதிபர் காலத்தில் நிலப் பங்கீடு, அபிவிருத்தி, திட்டமிடல், பண்பாடு விளையாட்டு என்பவற்றில் முக்கிய கவனம் செலுத்தப்பட்டது. ஆனால் பிரதேச செயலர் காலத்தில் பிரதேச செயலகம் அதிகார அலகாக அதாவது மினி கச்சேரியாகச் செயற்படுகின்றது.

திட்டமிடல், சமூகசேவை, உணவு விநியோகம், நிவாரணம், கிராம அபிவிருத்தி, பண்பாடு, சிறுவர் நலத்துறை, ஓய்வூதியம், வாகன சாரதி அனுமதிப் பத்திரம், வாகன வரி, புனர்வாழ்வு, புனருத்தாரணம், அபிவிருத்தி, தேர்தல் டாப்பு தயாரித்தல், காணி அதிகாரம், விளையாட்டு, உளவளத்துணை, பிறப்புச் சான்றிதழ் வழங்கல் போன்ற விசாலமான சேவைகள் மக்களின் வதிவிடப் பிரதேசங்களிலேயே பெறும் நிலை உருவாக்கப்பட்டுள்ளது.

இலங்கை நிர்வாக சேவை, கணக்காளர் சேவை, திட்டமிடல் சேவை ஆகியவற்றின் அதிகாரிகளும் பணியாற்றுகின்றனர். இதைவிட உதவிப் பிரதேச செயலர், நிர்வாக உத்தியோகத்தர், பிரதிப் பதிவாளர் எனும் ஆளணிகளும் உள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1988 ஆம் ஆண்டின் 13 ஆவது திருத்தச் சட்டத்தின் கீழ் மாகாணசபைகள் எனும் நிர்வாக முறையும் நாட்டில் நடைமுறையிலுள்ளது. மாகாண முதலமைச்சர் ஒருவருடன், ஐந்து மாகாண அமைச்சர்களும் மாகாண சபைக்கென பின்வரும் குறித்துரைக்கப்பட்ட பணிகளை ஆற்றவென உள்ளனர்.

சமூக சேவைகள், சிறுவர் நன்னடத்தை, கிராம அபிவிருத்தி, கல்வி, விளையாட்டு, பண்பாடு, உள்ளூராட்சி, வீதி அபிவிருத்தி, கட்டடங்கள், கூட்டுறவு, புனர்வாழ்வு, புனருத்தாரணம், விவசாயம், காணி, கால்நடைகள், பெண்கள் விவகாரம், சுகாதாரம், மருத்துவம் ஆகியவையாகும்.

மாகாணத் திணைக்களத் தலைவர்களால் மாகாண சபை அலுவலர்கள் கட்டுப்படுத்தப் பட்டாலும், மாவட்டங்களில் உள்ள அரச அதிபர், பிரதேச செயலர் ஆகியோருடன் ஒத்திசைந்து கடமையாற்ற வேண்டிய இரு மட்ட நிர்வாக முறைகளிற் செயற் படுகின்றனர். ஆகவே தற்போது நாட்டின் பொது நிர்வாகமானது மத்திய அரசாங்கம், மாகாண அரசாங்கம் என்ற இருமட்ட நிலைகளில் இயங்கி வருகின்றது.

**இலங்கை பகுதி II**

**சிறப்புப் பெயர்கள்**

இந்து சமுத்திரத்தின் முத்து, இந்து சமுத்திரத்தின் நித்திலம்.

◈ பண்டைக் காலத்தில் தொலமி என்பவர், தான் வரைந்த தேசப் படத்தில் இலங்கையை தப்ரபேன் எனக் குறித்துள்ளார்.

**நாட்டின் கூறுகள்**

◈ மொத்தப் பரப்பளவு 65610 சதுர கிலோமீற்றர்
இதில் நிலப்பரப்பு 62705 சதுர கிலோமீற்றர்
நீரால் சூழப்பட்ட பிரதேசம் 2905 சதுர கிலோமீற்றர்
ஆகக் கூடிய நீளம் 435 கிலோமீற்றர்
ஆகக் கூடிய அகலம் 225 கிலோமீற்றர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

◈ நாடு 09 மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

◈ நிர்வாக மாவட்டங்கள் - 25

1984 இல் யாழ்ப்பாணத்திலிருந்து பிரித்தெடுக்கப்பட்டு கிளிநொச்சி 25 ஆவது நிர்வாக மாவட்டமாகியது.

◈ தேர்தல் மாவட்டங்கள் - 22

காரணம்: யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய நிர்வாக மாவட்டங்கள் இணைந்து யாழ்ப்பாணம் எனும் தேர்தல் மாவட்டமாக உள்ளது. வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய மூன்றும் வன்னி என்ற ஒரு தேர்தல் மாவட்டமாக உள்ளதனால் ஆகும்.

◈ கூடிய மாவட்டங்களை வட மாகாணம் கொண்டுள்ளது. இதில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா எனும் 5 நிர்வாக மாவட்டங்கள் உள்ளன.

◈ நிலப் பரப்பிற் கூடியது வட மத்திய மாகாணம் 10472 சதுர கிலோமீற்றர்

நிலப்பரப்பிற் கூடிய மாவட்டம் - அனுராதபுரம் 7180 சதுர கிலோமீற்றர்

நிலப்பரப்பிற் குறைந்த மாவட்டம் - கொழும்பு 700 சதுர கிலோ மீற்றர்

◈ ஒரேயொரு பிரதான குடாநாடு - யாழ்ப்பாணம்

**வரலாற்றுத் தகவல்கள்**

◈ கி.பி. 1505 இல் போர்த்துக்கேயர் இலங்கைக்கு வருகை தந்தபோது யாழ்ப்பாணம், கண்டி, கோட்டை என்ற தனியரசுகள் மூன்று இருந்தன. கண்டி இராச்சியம் தவிர்ந்த முழு நாட்டையும் கைப்பற்றினார்கள். நாட்டை ஆண்ட முதல் போர்த்துக்கேய தளபதி. அசவேடா.

◈ கி.பி. 1658இல் ஒல்லாந்தர் போர்த்துக்கேயரை விரட்டியடித்து ஆட்சியைத் தம் வசமாக்கினர். அப்போதும் கண்டி இராச்சியம் சுதந்திரமாக இயங்கியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கி.பி. 1796 இல் ஆங்கிலேயர் ஒல்லாந்தரைத் தோற்கச் செய்து நாட்டைக் கைப்பற்றினர். அப்போதும் கண்டி இராச்சியம் சுதந்திரமாகவே இயங்கியது.

◈ இலங்கை 1802 இல் பிரித்தானியாவின் முடிவுக்குரிய குடியேற்ற நாடாகப் பிரகடனம் செய்யப்பட்டது.

◈ 1815 இல் கண்டி இராச்சியத்தின் மீது போர் தொடுத்துக் கைப் பற்றினார்கள்.
அப்போது இலங்கையில் ஆளுநராக இருந்த "றொபேட் பிரவுண்றிக்" என்பவராலேயே படையெடுப்புக்கான உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

அப்போது இலங்கையில் ஆளுநராக இருந்த "றோபேட் பிரவுண்றிக்" என்பவராலேயே படையெடுப்புக்கான உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

◈ கண்டியை ஆண்ட கடைசி மன்னன் சிறீ விக்கிரமராசசிங்கன். இந்திய நாயக்க வம்சத்தைச் சேர்ந்த இவனை ஆங்கிலேயர் கைது செய்து தமிழகத்தின் வேலூரில் சிறை வைத்தனர்.

◈ முதலாவது பிரித்தானியத் தேசாதிபதி - பிறெட்ரிக் நோர்த் (1798-1805) இவராலேயே இலங்கையில் நிலவி வந்த இராசகாரிய முறை ஒழிக்கப்பட்டமை சிறப்பிற்குரியது.

◈ முதலாவது பிரதம நீதியரசர் - சேர் எட்மண்ட் கரிங்கடன் (1802 - 1806)

◈ கொழும்பு - கண்டி வீதியை 1802 ஆம் ஆண்டு சேர். எட்வேட் பாண்ஸ் திறந்து வைத்தார்.

17 ஆம் நூற்றாண்டிலே மலையக இராச்சியத்தின் சிறைக்கைதியாக இருந்த "றொபேட் நொக்ஸ்" என்பவரால் இலங்கை குறித்து எழுதப்பட்ட நூல் **Historical Relations of the Island of Ceylon**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

◈ ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்திற்றான் நாட்டில் அச்சுக்கலை அறிமுகமாகியது.

முதலாவது அச்சு நூல் 1737 இல் சிங்கள மொழியில் வெளியாகியது.

◈ ஆசியாவிலேயே இலங்கையிற்றான் முதல்முதலாக குதிரை வண்டி ஓடியது. 1832 ஆம் ஆண்டு அஞ்சல் சேவையினை இலகுபடுத்துவதற்காகப் பிரித்தானிய ஆட்சியாளரால் அறிமுகப்படுத்தப்பட்டது.

◈ இரண்டாம் பராக்கிரமபாகு மன்னனால் எழுதப்பட்ட பெருங்காவியம் - கவிசிலுமின.

◈ கண்டியிலுள்ள தலதா மாளிகையைக் கட்டியது - முதலாம் விமலதர்ம சூரிய. புனித தந்ததாது தலதா மாளிகையில் வைக்கப்பட்டுள்ளது.

◈ மகாபோதி சங்கங்களை இலங்கையிலும் இந்தியாவிலும் நிறுவியவர் அநகாரிக தர்மபால.

பௌத்த சமயத்தின் மறுமலர்ச்சிக்காகவும், அந்நிய மதங்களிலிருந்து பௌத்த சமயத்தைக் காப்பாற்றுவதற்காகவும் மகாபோதி சங்கங்களை அநகாரிக தர்மபால நிறுவினார்.

◈ சிகிரியா குகை ஓவியங்கள் காணப்படும் மலைக்கோட்டையைக் கட்டிய மன்னன் - காசியப்பன்

◈ அநுராதபுரத்தை முதன்முதலில் இராசதானியாக்கிய மன்னன் - பண்டுகாபயன்

◈ யாழ்ப்பாணத்தை ஆண்ட கடைசி மன்னன் - சங்கிலியன்

◈ சிங்கள இராச்சியத்தின் முதலாவது தலைநகரம் - அநுராதபுரம். இரண்டாவது தலைநகரம் - பொலநறுவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

◈ முதலாவதாகக் கட்டப்பட்ட வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஸ்தூபி - தூபராம தாபகே.

◈ பிரித்தானியரின் ஆட்சிக்காலத்தில் சுதேச மதங்களின் மேம்பாட்டிற்காகவும், மறுமலர்ச்சிக்காகவும் பாடுபட்டவர்கள்:
இந்துமதம் - ஆறுமுகநாவலர்
பௌத்தம் - அநகாரிக தர்மபால
இஸ்லாம் - M.C. சித்திலெப்பை

◈ இலங்கைக்கு வந்த முதல் ஐரோப்பியர் - மார்க்கோ போலோ
இலங்கைக்கு வந்த முதல் அராபியர் - இபன் பதூதா

◈ இலங்கையை ஆட்சி செய்த முதலாவது அரசி - அனுலா

◈ நாட்டில் புத்தமதம் தோன்றிய 2500 ஆண்டு நிறைவு குறித்தான புத்த ஜெயந்தி கொண்டாடப்பட்டது. 1957. பௌத்த மதம், உருவாகி வளர வித்திட்டவர் - மகிந்த தேரோ.

◈ இலங்கையில் தொழிற் சங்கத்தை முதன்முதலில் உருவாக்கியவர் - A.E. குணசிங்க
இவர் இலங்கை தொழிற்சங்க இயக்கத்தின் தந்தையென வர்ணிக்கப் படுகின்றார்.

◈ பௌத்த மதத்தின் தேரவாதப் பிரிவு இலங்கையிற் பெரும்பான்மையான பௌத்தர்களாற் கடைப்பிடிக்கப்படுகிறது. பௌத்தர்களின் புனித மரமாக வெள்ளரசு வழிபடப்படுகிறது.

◈ மும்மணிகள் - புத்தகம், தர்மமம், சங்கம்

◈ பெருங் குளங்களைக் கட்டிய மன்னன் - வசபன்
மின்னேரியாவின் தெய்வம் எனப்படும் - மகாசேனன்
அபயவீவா குளத்தைக் கட்டிய மன்னன் - பண்டுகாபயன்
காலாவீவா குளத்தைக் கட்டிய மன்னன் - தாதுசேனன்
பதவியா குளத்தைக் கட்டிய மன்னன் - மொகலானன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

◈ இலங்கையில் முதன் முதல் தோன்றிய செய்தித் தாள் - கொழும்பு ஜேணல் (Colombo Journal)

◈ மின்சக்திப் பற்றாக்குறை 1996 இல் பாரியளவில் எதிர்நோக்கப்பட்டது. இதை நிவர்த்திக்கும் வழிகளில் ஒன்றாக யூன்மாதம் நாட்டின் நேரம் 1 மணித்தியாலயத்தில் முன்னகர்த்தப்பட்டது. பின்னர் ஒக்ரோபரில் அரை மணி நேரம் பின்னகர்த்தப் பட்டது.

◈ 2006ஆம் ஆண்டு தமிழ் - சிங்களப் புத்தாண்டுமுதல் இன்னும் 1/2 மணி நேரம் பின்னகர்த்தப்பட்டது. இதனால் 1996 இற்கு முந்திய நேரம் மீண்டும் நடைமுறைக்கு வந்தது.

தற்போது நடைமுறையிலுள்ள நேரம் GMT நேரத்துடன் 5 1/2 மணிநேரம் கூட்டப்பட்டது.

◈ 4ஆவது உலகத் தமிழாராய்ச்சி மகாநாடு 1974 ஜனவரியில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது. அமரர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் அவர்களே இம் மகாநாட்டின் அமைப்புக் குழுத் தலைவராகப் பணியாற்றினார்.

◈ அரச துறை ஊழியர்களின் மாபெரும் வேலை நிறுத்தம் 1980 யூலையில் நடைபெற்றது. இதில் ஈடுபட்ட ஆயிரக் கணக்கானோர் வேலையிழந்தனர்.

◈ இலங்கை ஆசிரியரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான மென்டிஸ் அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க ஒக்ரோபர் 06ஆம் திகதி சர்வதேச ஆசிரியர் தினமாகக் கொண்டாடப்படுகிறது. 1990இல் கோஸ்டாரிக்காவில் நடைபெற்ற உலக ஆசிரிய சம்மேளன மகாநாட்டில் இத் தினத்தைக் கொண்டாடுவதென தீர்மானிக்கப் பட்டமை குறிப்பிடத்தக்கது.

◈ 1984 இல் ஜமேய்க்காவின் தலைநகரான "கிங்ஸ்டன்" நகரில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் குடியிருப்பு ஆணைக்குழு மகா நாட்டின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலம் ஒக்ரோபரில் சர்வதேச குடியிருப்புத் தினம் கொண்டாடப்பட்டு வருகிறது.

◈ சர்வதேச குடியிருப்புத் தினம் கொண்டாடப்பட வேண்டும் என்ற தீர்மானத்தை இலங்கையின் அப்போதைய பிரதமரான ரணசிங்க பிரேமதாஸ அவர்களே இம் மகாநாட்டிற் கோரிக்கையாக முன் வைத்தமை குறிப்பிடத் தக்கது.

1985இலிருந்து ஒவ்வொரு வருடமும் ஒக்ரோபர் மாதத்தில் வரும் முதல் தினங்களில் சர்வதேச குடியிருப்பு தினம் கடைப்பிடிக்கப் படுகின்றது.

◈ ரூபா சதக் குற்றி நாணயங்கள் புழக்கத்திற்கு வந்த ஆண்டு 1872 தாள் நாணயங்கள் புழக்கத்திற்கு வந்தது. 1885.

◈ நாட்டில் முதலாவதாக அமைக்கப்பட்ட புகையிரதப் பாதை: கொழும்பு - கண்டி புகையிரதப்பாதை.

◈ இலங்கை - இந்தியாவைப் பிரிக்கும் பாக்கு நீரிணையை முதன்முதலில் நீந்திக் கடந்தவர் - மு. நவரத்தினசாமி.

தேசியப் பத்திரிகை ஒன்றுக்கு ஆசிரியராகப் பதவி வகித்த முதல் பெண்மணி - ரீட்டா செபஸ்தியன்.

இவர் **Times of Ceylon** எனும் ஆங்கிலப் பத்திரிகைக்கு ஆசிரியராக இருந்தார்.

◈ சிங்கள மொழி இலக்கியத் துறைக்கு அளப்பரிய சேவை செய்தவர்: பேராசிரியர் எதிரி வீர சரத்சந்திர. இலங்கை பாரம்பரியக் கலைகளின் முன்னோடி எனவும் போற்றப்படுகின்றார். ரமன்மச்சே சேவிருதை சிங்கள இலக்கியத்துறைக்காகப் பெற்றுள்ளார். "சிங்கபாகு, மகாராசா" உள்ளிட்ட பல வரலாற்றுச் சிறப்புமிக்க நாடகங்களை எழுதி மேடை ஏற்றியமையும் குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

◊ ஒலிம்பிக் போட்டிகளுக்குச் சென்ற இலங்கை அணிக்கு முதன் முதலில் தலைமை தாங்கிய பெண் - புஸ்பமாலி ராமநாயக்க

1996 அமெரிக்க அற்லான்ராவின் 26 ஆவது ஒலிம்பிக் போட்டியில் இலங்கை அணிக்குத் தலைமை தாங்கினார்.

◊ நாஸா **(NASA)** எனப்படும் அமெரிக்க விண்வெளி ஆய்வு நிகழ்ச்சி அமைப்பின் பகுதி ஒன்றுக்குத் தலைமை தாங்கிய இலங்கையர் - பேராசிரியர் சிறில் பொன்னம்பெரும.

◊ இலங்கையில் ஒல்லாந்தர் காலத்தில் அர்ப்பணிப்புடன் கிறிஸ்தவ மதப்பணி புரிந்த யோசப் வாஸ் அடிகளாரை, பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பர் 1995 இல் இலங்கைக்கு வந்து, புனிதராகத் திருநிலைப்படுத்திப் முத்திப்பேறு பெற்றவராகப் பட்டமளித்தார்.

◊ தமிழ்மொழியில் முதன்முதலில் வெளியாகிய நாளிதழ் அல்லது பத்திரிகை - உதயதாரகை. இது 1841 ஆம் ஆண்டு அமெரிக்க மிசனரியால் வெளியிடப்பட்டு இன்றுவரையும் தொடர்ந்து வெளிவருகிறது.

**முதலாவது இலங்கையர்....**

பிரதம நீதியரசர் - சேர் ஆர்தர் விஜயவர்த்தன (1949 - 1950)

தற்காலிகப் பிரதம நீதியரசர் C. நாகலிங்கம்

சிவில் சேவைப் பதவி - சேர் பொன் அருணாசலம்.

முதலாவது உதவி மாகாண அரசாங்க அதிபர் C.L. விக்கிரமசிங்க

கோமறைக் கழக உறுப்பினராக (பிரிவுக் கவுன்சிலராக) நியமனம் பெற்றவர் D. S. சேனநாயக்க சேர்

(Sir) பட்டம் பெற்றவர். கலாநிதி ஆனந்த குமாரசாமி

விஞ்ஞான கலாநிதி (D.Sc) கலாநிதி ஆனந்த குமாரசாமி

முதுகலைமாமணி (M.A.) B. மகாதேவா.

முது விஞ்ஞானமாணி (M.Sc.) P. கனகசபாபதி

அரசபையின் பெண் உறுப்பினர் - திருமதி A.F. மொலமுரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண் நீதிபதி (மஜிஸ்திரேட்) - செல்வி சுதர்ம தர்மதாஸ

செனற் சபையின் பெண் உறுப்பினர் - செல்வி சி. சி. கூரே.

பெண் பரிஸ்ரர் - திருமதி எஸ்லின் தெரணியகல.

மாகாண அரசாங்க அதிபர் - சேர் வேலுப்பிள்ளை குமாரசாமி.

◈ அரசாங்க சபையின் சபாநாயகராகப் பதவி வகித்த ஒரேயொரு தமிழர் - சேர் வைத்திலிங்கம் துரைச்சாமி (1936 - 1947).

◈ அரசாங்க சபையின் முதலாவது சபை முதல்வர் - சேர். பரன் ஜயதிலக.

**கட்சிகள், அமைப்புக்கள்**

◈ இலங்கை தேசிய காங்கிரஸ் 1919 இல் நிறுவப்பட்டது. இதன் முதலாவது தலைவர் - சேர். பொன். அருணாசலம்.

◈ இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி 1943 யூலை 03 இல் நிறுவப்பட்டது.

◈ இலங்கை தமிழரசுக்கட்சி 1949 டிசெம்பர் 18 இல் நிறுவப்பட்டது.

◈ முதன் முதலாக ஆரம்பிக்கப்பட்ட அரசியல் கட்சி - சமசமாஜக் கட்சி.

◈ இக்கட்சியைச் சேர்ந்த திருமதி விவியன் குணவர்த்தன முதுபெரும் பெண் அரசியல் தலைவி ஆவார்.

ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து தலைமைத்துவப் போட்டி காரணமாக S.W.R.D. பண்டாரநாயக்க வெளியேறி 1951 செப்ரெம்பர் 02 இல் சிறீலங்கா சுதந்திரக் கட்சியை (S.L.F.P) நிறுவினார்.

**இலங்கையின் தேசிய.....**

| | |
|---|---|
| கீதத்தை இயற்றியவர் | - ஆனந்த சமரக்கோன் |
| மரம் | - நாகமரம் (மெசுவா நாகசூரியம்) |
| விளையாட்டு | - கரப்பந்தாட்டம் (Volley Ball) |
| கொடி | - வாளேந்திய சிங்கம் |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலர் - நீலோற்பலம் (நீல அல்லி மலர்)
பறவை - காட்டுக்கோழி
மிருகம் - மர அணில்

**அரச நலச் சேவைகள் ஆரம்பம்**

◈ அரிசிப் பங்கீட்டு முறைகள் - 1942

◈ அரச குடும்பத் திட்டமிடல் பிரிவு - 1968

◈ திரிபோசா நிகழ்ச்சித்திட்டம் - 1973

◈ பங்கீட்டுத் திட்டத்தின் கீழ் இலவச அரிசி விநியோகம் - 1965

**படைகளின் உருவாக்கம்**

இராணுவம் - 1949 -10 - 10
கடற்படை - 1950 - 12 -10
பொலிஸ் சேவை - 1856 - 09. 03இல் ஆரம்பிக்கப்பட்டது.

**இலங்கை வங்கிகள்**

◈ பெருந்தோட்டப் பயிர்ச்செய்கையின் விருத்திக்காக "ஒறியன்றல் வங்கி" ஆரம்பமானது 1841

◈ இலங்கை வங்கி உருவாக்கம் - 1939 ஓகஸ்ட் 01

◈ தேசிய சேமிப்பு வங்கி - 1972 மார்ச்

◈ மத்திய வங்கி 1950 இல் உருவாக்கப்பட்டது.
தலைமையகம் - கொழும்பு
பிராந்தியப் பணிமனைகள் - அநுராதபுரம், மாத்தளை, மாத்தறை,
நாட்டில் மக்களின் பாவனைக்குரிய பணச் சுற்றோட்டத்திற்கான தாள்களையும் நாணயங்களையும் இவ் வங்கியே வெளியீடு செய்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

◈ இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் உருவாக்கப்பட்டது 1982. ஜப்பானிய அரசின் நன்கொடையாக இது கட்டப்பட்டது.
இலங்கையில் 1978 முதல் தொலைக்காட்சி சேவை நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது.
ரூபாவாஹினியிற் கல்விச்சேவை ஒளிபரப்பு 1986 முதல் நடைபெறுவது குறிப்பிடத்தக்கது.

◈ சிறீலங்கா துறைமுக அதிகாரசபை (SLPA) உருவானது 1979.

◈ கடவுச்சீட்டு (Passport) விநியோகத்துக்குப் பொறுப்பாக உள்ள நிறுவனம் - குடிவரவு, குடியகல்வுக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்.

◈ லக்சபான மின் நிலையம் ஆரம்பம் - 1950

◈ நாட்டின் சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கென 1989 ஆம் ஆண்டின் தேசிய சுற்றாடல் சட்டத்தின் கீழ் 1981 இல் மத்திய சுற்றாடல் அதிகாரசபை நிறுவப்பட்டது. 1988 இல் தேசிய சுற்றாடல் (திருத்தச்) சட்டத்தின்கீழ் இச்சபைக்கு கூடிய அதிகாரங்கள் வழங்கப்பட்டது.

◈ தேசிய அடையாள அட்டையை (NIC) ஆட்களைப் பதிவுசெய்யும் திணைக்களம்,1972 முதல் வழங்கி வருகின்றது.

◈ இலங்கை போக்குவரத்துச் சபை (இ.போ.ச.) நிறுவப்பட்ட ஆண்டு 1958. நாடளாவிய ரீதியில் இயங்கிவந்த தனியார் போக்குவரத்து நிறுவனங்கள் அரசுடைமையாக்கப்பட்டு இது நிறுவப்பட்டது.

◈ இலங்கை முகாமைத்துவப் பட்டயக் கணக்கறிஞர் நிறுவனம் உருவானது - 1919


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

◈ தேசிய அபாயகர ஔடத கட்டுப்பாட்டுச்சபை - இதுபோதைப் பொருள் ஒழிப்பு, தடுப்பு நடவடிக்கையில் அரசின் சார்பில் ஈடுபடுகிறது.

◈ இலங்கை புற்றுநோய்த் தடுப்புச் சங்கம் ஆரம்பம் - 1948
தேசிய புற்றுநோய் மருத்துவமனை உள்ள இடம் - மஹரகம

புகை பிடிப்பதாலேயே இலங்கையில் அதிகமானோருக்கு புற்றுநோய் வருவது குறிப்பிடத்தக்கது.

◈ கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையம் 1957 இல் இலங்கைக்குச் சொந்தமாகியது.

◈ இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம், பெற்றோலியக் கூட்டுத் தாபனம் ஆகியவை உருவாக்கப்பட்டது 1962.

◈ கொழும்புத் துறைமுகம் 1958 இல் தேசிய மயமாக்கப்பட்டது.

◈ இலங்கைத் தொலைத்தொடர்புத் திணைக்களம் - 1982இல் உருவாக்கப்பட்டது.

இது 1990இல் இலங்கை தொலைத்தொடர்பு திணைக்களம் கூட்டுத்தாபனமாக மாற்றப்பட்டது.

1997 இல் இதன் 35% பங்குகள் ஜப்பான் கம்பனிக்கு விற்கப்பட்டு சிறீலங்கா ரெலிக்கொம் ஆனது.

◈ எயர் லங்கா (Air Lanka) உருவானது 1979. இது 1990களின் இறுதியில் சிறிலங்கா எயர்லைன்ஸ் ஆனது.

◈ ஒலிபரப்புச் சேவை 1925 இல் ஆரம்பமாகியது. கொழும்பு ஒலிபரப்பு நிலையம் என இருந்த இது 1949 இல் இலங்கை வானொலி என மாற்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றது. வர்த்தக சேவை 1951 இல் ஆரம்பம். இலங்கை வானொலி 1967 இல் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் ஆகியது.

◈ தேசிய அனர்த்த முகாமைத்துவ நிலையம் நிறுவப்பட்டது. 1996. தலைமையகம் கொழும்பு

◈ கடவுச் சீட்டு (Passport) விநியோகத்திற்கென மகிந்த சிந்தனை வேலைத்திட்டத்தின் கீழ் 3 பிராந்திய அலுவலகங்கள் 2006 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டன. அவை அமைந்துள்ள இடங்கள் ,

அம்பாந்தோட்டை, மாத்தளை, அநுராதபுரம்

| நிறுவனங்கள் | அமைவிடம் |
|---|---|
| சோயா ஆராய்ச்சி நிலையம் | பள்ளேகல, கன்னறுவா |
| விவசாய நெல் ஆராய்ச்சி நிலையம் | மகாஇலுப்பள்ளம், பத்தலகொட |
| இறப்பர் ஆராய்ச்சி நிலையம் | அகலவத்தை |
| பருத்தி ஆராய்ச்சி நிலையம் | அம்பாந்தோட்டை |
| விவசாய கால்நடை ஆராய்ச்சி நிலையம் | மகா இலுப்பலம |
| தாழ்ந்த பிரதேச தேயிலை ஆராய்ச்சி நிலையம் | கலகம்பொல |
| ஆயுர்வேத ஆராய்ச்சி நிலையம் | நாவின்ன |
| தேயிலை ஆராய்ச்சி நிலையம் | தலவாக்கொல |
| தென்னை ஆராய்ச்சி நிலையம் | லுணுவில |
| உருளைக்கிழங்கு ஆராய்ச்சி நிலையம் | நுவரெலியா |
| அரசினர்சுதேச வைத்தியக் கல்லூரி | பொரளை |
| குஷ்டரோக வைத்தியசாலை | மாந்தீவு(மட்டக்களப்பு) |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| தொழிற்சாலைகள் | அமைவிடம் |
|---|---|
| கட்டிப்பால் | பொலநறுவை |
| பால்பதனிடுதல் | அம்பேவெல |
| பால்பவுடர் (லக்ஸ்பிறே) | வெலிசற |
| இறப்பர் பால் | மாவனல்ல |
| மட்பாண்டம் | ரத்தோட்ட, தங்கொட்டுவ, பிலியந்தல |
| ரயர் | களனி |
| உருக்கு | ஒறுவல |
| புடைவை | வியாங்கொட, பூகொட, துல்கிரிய |
| எண்ணெய் சுத்திகரிப்பு | சபுகஸ்கந்த |
| உலோகப் பொருள் | யக்கல |
| ஒட்டுப்பலகை | ஜின்தோட்ட |
| தோற்பொருள் | மட்டக்குளிய |
| காகிதம் | வாழைச்சேனை, எம்பிலிபிட்டிய, ராஜாங்கன |
| சீமெந்து | புத்தளம், காலி |
| சீனி | கந்தளாய், பெல்வத்த, ஹிங்குராணை |

- இலங்கை புகையிரதச் சேவை ஆரம்பமானது 1876.
- 1947 இல் உள்ளூர் விமான சேவை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

## பெருந்தோட்ட விவசாயம்

- இலங்கை வர்த்தகப் பயிர்களின் அரசனெனத் தேயிலை அழைக்கப் படுகின்றது.
  தேயிலையின் பிறப்பிட முக்கோண வலயம் "சீனா, கம்போடியா, அசாம் (சீனா)"



இலங்கையில் தேயிலையை அறிமுகப் படுத்தியவர் "கலாநிதி கிணேசர்" இவர் பேராதனைப் பூங்காவில் கி.பி. 1839ஆம் ஆண்டு இந்திய அசாம் பகுதியிலிருந்து கொண்டுவரப்பட்ட 205 தேயிலை விதைகளை நாட்டினார். பின்னர் 1867இல் கண்டி மாவட்ட "லூல்கந்தை" தோட்டத்தில் "ஜேம்ஸ் ரெயிலர்" என்பவரால் தேயிலை நடப்பட்டு பெருந்தோட்டங்களாக விருத்தி செய்யப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

◈ கோப்பிப் பயிர்ச்செய்கை 1823 இல் சேர் எட்வேட் பாண்ஸ் எனும் ஆளுநரின் ஊக்கமளித்தலின் மூலம் ஆரம்பமாகியது.

◈ இறப்பர் பயிர்ச்செய்கை 1876இல் ஆரம்பமாகியது. ஆங்கிலேயர் பிரேசில் நாட்டிலிருந்து இறப்பர் மர விதைகளைக் கொண்டு வந்து நாட்டினர்.

## அரச நடைமுறைகள்

◈ சிவில் சேவை நீக்கப்பட்டு பரிபாலன சேவை நிறுவப்பட்ட ஆண்டு 1963.

◈ அரசாங்கம் போயா நாட்களை வார விடுமுறை நாட்களாகப் பிரகடனம் செய்தது: 1966

◈ முஸ்லிம்கள் துருக்கித் தொப்பி அணிந்து சட்டத்தரணிகளாக நீதிமன்றத்திற் கடமையாற்றச் சட்ட பூர்வமாக அனுமதிக்கப்பட்ட ஆண்டு – 1906.

◈ ஒழுங்கமைந்த முறையிலான சனத்தொகைக் கணக்கெடுப்பு முதன்முதலாக 1871இல் 2001இல் 13வது கணிப்பீடு இடம்பெற்றது.

◈ முதலாவதாக நிறுவப்பட்ட மாநகர சபை கொழும்பு மா.ந.ச. இது 1865இல் நிறுவப்பட்டது.

◈ முன்னர் நடைமுறையிலிருந்த கிராம சபை, பட்டின சபை என்பவற்றை ஒன்றாக இணைத்து "பிரதேசபை" என்னும் உள்ளூராட்சி நிர்வாக அலகு உருவாக்கப்பட்ட ஆண்டு-1988.

◈ கிராம சேவகர் முறை அறிமுகமாகியது. 1963

◈ முதலாவது அஞ்சல் முத்திரை வெளியிடப்பட்ட ஆண்டு 1857

◈ முதலாவது அஞ்சல் அலுவலகம் 1895 ஆம் ஆண்டு கொழும்பில் திறந்து வைக்கப்பட்டது.

◈ உபதபால் அலுவலக முறை அறிமுகம் செய்யப்பட்ட ஆண்டு – 1921, அவ்வாறு முதலாவதாக உருவான உப தபாலகம் – சிலாவத்துறை (மன்னார்)

◈ முதலாவது கூட்டுறவுச் சங்கம் 1912 இல் மாத்தறை மாவட்டத்தின வெல்லபொடபத்து கிராமத்தில் உருவானது. கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரி 1943 இல் கண்டி, பொல்கொல்லையில் ஆரம்பிக்கப்பட்டது.

இவ்வருடமே பாவனையாளர் கூட்டுறவுச் சங்கங்கள் யாவும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களாக (MPCS) மாற்றப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

◈ அரசின் நிர்வாக ரீதியான செய்திகளைத் தாங்கி வெளிவரும் அதிகார பூர்வமான ஏடு - வர்த்தமானி அல்லது அரச செய்தி மடல். இது பிரதி வெள்ளிக்கிழமை தோறும் வெளிவருகிறது.

1802 இல் முதன்முதலில் வெளியாகியது.

◈ இலங்கை பாராளுமன்றத்தில் உறுப்பினர்களால் ஆற்றப்படும் உரைகளைப் பதிவு செய்யும் ஏடு "ஹன்சார்ட்" என அழைக்கப்படுகின்றது.

## அமைவிடங்கள்


தாவரவியற் பூங்காக்கள் - பேராதனை, ஹக்கல, கணேபத்த (கம்பஹா)

மிருகக்காட்சிச் சாலை - தெகிவளை

யானைகளின் சரணாலயம் - பின்னவெல

பறவைகள் சரணாலயம் - குமண

வனவிலங்கு சரணாலயம் - யால, வில்பத்து, ருகுணு, உடவளவ, லகுகல



◈ இன்றுள்ள ஒரேயொரு இயற்கை வனம் - சிங்கராஜவனம் சப்பிரகமுக மாகாணத்தில் அமையப்பெற்றுள்ள இவ் வனம் யுனெஸ்கோ ஆல் உலகப் பண்பாட்டு பிரதேசங்களுள் ஒன்றாகப் பிரகடனம் செய்யப்பட்டுள்ளது. உயிரின வாழக்கைச் சூழல் அடிப்படையிற் சிங்கராஜ வனம் பாதுகாக்கப்பட வேண்டுமென யுனெஸ்கோ கூறியுள்ளது.

◈ இலங்கையில் மிக உயரமான நீர்வீழ்ச்சி பம்பரகந்த. வளவை கங்கையில் அமைந்துள்ளது. இது 240 மீற்றர் உயரமானது. அப்புத்தளை எனுமிடத்திற் பம்பரகந்தை உள்ளது.

◈ வெந்நீர் ஊற்றுக்கள் ஏழு உள்ள இடம் - கன்னியா (திருகோணமலை)

◈ தொல்பொருட்கள் அல்லது புராதன பொருட்கள் அதிகமாகக் காணப்படும் இடம் - அநுராதபுரம்

◈ தெங்கு முக்கோண வலயம் எனச் சிறப்பிக்கப்படும் மாவட்டங்கள் - குருணாகல், சிலாபம், கொழும்பு

◈ பண்பாட்டு முக்கோண வலயம் அல்லது கலாசார முக்கோண வலயம் எனச் சிறப்பிக்கப்படும் மாவட்டங்கள் - அநுராதபுரம், பொலநறுவை, கண்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

◈ மிக நீளமான ஆறு - மகாவலிகங்கை, நீளம் 335 கி.மீ. மிக உயரமான மலை - பீதுறுதாலகால மலை, உயரம் 2524 மீற்றர். மிக உயரமான குன்று - கொக்காகல

◈ மிகப் பெரிய குளம் அல்லது ஏரி - சேனநாயக்க சமுத்திரம்.

◈ மூவின மக்களும் வழிபடச்செல்லும் புனிதமலை சிவனொளிபாத மலை அல்லது சிறிபாத

◈ புகழ்பெற்ற குகை ஓவியங்கள் - சிகிரியா

◈ நாடாளுமன்றம் உள்ள இடம் - ஸ்ரீஜெயவர்த்தனபுர. 1982இல் ஜப்பானிய அரசின் நன்கொடையாக நிர்மாணிக்கப்பட்ட நாடாளுமன்றத்தைச் சுற்றி தியவன்ன ஓயா எனும் ஆறு ஓடுகிறது.

◈ இலங்கையில் மிக நீளமான கடற்பாதை: வேலணை - புங்குடுதீவு கடற்பாதை

◈ முக்கியமான இயற்கைத்துறைமுகம் உள்ள இடம் - திருகோணமலை

◈ ஐம்பெரும் வாவிகள் எனப்படுபவை - மகாவிலாச்சிய, மகாகந்தறவா, வவுனிக்குளம், பதவியா, பாவற்குளம்.

## உத்தியோகபூர்வ வதிவிடங்கள் ....



ஜனாதிபதி - ஜனாதிபதி மாளிகை
பிரதமர் - அலரி மாளிகை
சபாநாயகர் - மும்தாஜ் மகால்

◈ துரித மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ்வரும் திட்டங்களும் உதவி வழங்கிய நாடுகளும்:

| | |
|---|---|
| கொத்மலை | சுவீடன் |
| விக்ரோறியா | பிரித்தானியா |
| ரந்தெனிகல | ஜேர்மனி |
| பொல்கொல்ல | ஜப்பான் |
| மதுறு ஓயா | கனடா |

◈ சர்வதேச தரம் வாய்ந்த மகாநாட்டு மண்டபம் - பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மகாநாட்டு மண்டபம் **(BMICH)**

இது சீன அரசாங்கத்தின் நன்கொடையாக நிர்மாணிக்கப்பட்டு 1973 ஆம் ஆண்டில் திறந்து வைக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- செய்மதித் தகவல் தொடர்பு நிலையம் - பாதுக்கை
- சுதந்திர வர்த்தக வலயம் (FTZ) உள்ள இடங்கள் - கட்டுநாயக்க, பியகம, கொக்எல, பல்லேகல.

இலங்கையின் முதலாவது சுதந்திர வர்த்தக வலயம் அல்லது ஏற்றுமதி மேம்பாட்டு (ஊக்குவிப்பு) வலயம், 1978 ஆம் ஆண்டு கட்டுநாயக்க எனும் இடத்தில் உருவானது. இவ் அமைப்பிற்குப் பொறுப்பாக உள்ள அரச துறை நிறுவனம்: இலங்கை முதலீட்டுச் சபை (BOI) உலகின் முதலாவது சுதந்திர வர்த்தக வலயம் 1959 இல் அயர்லாந்து நாட்டில் ஆரம்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

- **நூறு ஆண்கள் சேர்ந்து ஒரு வீட்டை அமைக்கலாம். ஆனால் வீட்டிற்கு தீபம் ஏற்றி ஒளியூட்ட ஒரு பெண்தான் தேவை.**
- **முதுமை என்பது மனிதனின் இரண்டாவது மழலைப் பருவம்.**
- **முதியவர் ஒருவர் இறந்தால் மனிதன் ஒருவன் இறப்பான் சிறுவன் ஒருவன் இறந்தால் தலைமுறை ஒன்று இறக்கும்.**
- **முதியோர்கள் ஒவ்வொருவரும் நடமாடும் தகவல் களஞ்சியம் ஆகும்.**
- **கற்கையில் கல்வி கசப்பு.**
  **கற்றபின் அதுவே இனிப்பு.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கையின் சட்டங்கள், அரசியல்

◈ தேச வழமைச் சட்டம் 1707 இல் ஆண்டு ஒல்லாந்தரால் நடைமுறைக்கு வந்தது.

◈ நொத்தாரிசுச் சட்டம் 1902 ஆம்ஆண்டு நடைமுறைக்கு வந்தது. இதில் காலத்துக்குக் காலம் பல்வேறு திருத்தங்கள் மேற்கொள்ளப் பட்டன.

◈ மாவட்ட அபிவிருத்திச் சபை உருவானது - 1981,. பின்னர் இம்முறை கைவிடப்பட்டது.

◈ பயங்கரவாதத் தடைச் சட்டம் (Prevention of Terrorism Act - PTA) 1979 இல் உருவானது.

◈ மாகாண சபைகள் நிர்வாக முறை ஏற்படுத்தப்பட்ட ஆண்டு - 1988. அப்போதைய இலங்கை இந்தியத் தலைவர்களால் 1987 யூலை 29ஆம் நாள் கையெழுத்திடப்பட்ட இலங்கை - இந்திய சமாதான உடன்படிக்கையின் மூலமே மாகாண சபை எனும் நிர்வாக அலகு நடைமுறைக்கு வந்தது.

◈ 1833 ஆம் ஆண்டு கோல்புறூக் விசாரணைச் சபையின் சீர்திருத்தத்தின் மூலம் சட்ட நிரூபண சபை, சட்ட நிருவாக சபை என்பன ஏற்படுத்தப் பட்டன. இதன் மூலம் இலங்கையில் மாகாண நிர்வாக அலகு நடைமுறைக்கு வந்தது. வடக்கு, கிழக்கு, மேற்கு, தெற்கு, மத்தி என மாகாணங்கள் உருவாக்கப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

◈ *1910இல் மக்கலம் அரசியல் சீர்திருத்தங்கள் ஏற்பட்டது. கல்வி கற்ற இலங்கையருக்குப் பிரதிநிதியைத் தெரிவு செய்யும் உரிமை வழங்கப்பட்டது.*

◈ 1924 இல் மன்னிங் கால இரண்டாவது அரசியல் சீர்திருத்தங்கள் ஏற்பட்டன.

◈ **1931** இல் டொனமூர் அரசியல் யாப்பு ஏற்படத்தப்பட்டது. இவ்யாப்பின் கீழ் இடம்பெற்ற முக்கிய அம்சங்கள் வருமாறு.

- சர்வசன வாக்குரிமை ( **21** வயதுக்கு மேற்பட்ட ஆண்களுக்கும் பெண்களுக்கும் வாக்குரிமை)
- பிரதேசவாரிப் பிரதிநிதித்துவம்
- அரசுக் கழகம்
- நிருவாகக் குழு முறைமை

**61** உறுப்பினர்களைக் கொண்ட அரசுக் கழகம் ஏற்படுத்தப்பட்டது. இதில் **50** பேர் சர்வசன வாக்குரிமை மூலமும், **3** பேர் அரச அலுவலராகவும், **8** பேர் ஆளுநர் மூலமும் நியமிக்கப்பட்டனர்.

◈ **1947** இல் சோல்பரி அரசியல் யாப்பு நடைமுறைக்கு வந்தது. அவ் ஆண்டில் இவ் யாப்பின் கீழ் முதலாவது பொதுத் தேர்தல் நடைபெற்றது. செனற் சபை, பிரதிநிதிகள் சபை என்பன நிறுவப்பட்டன.

◈ முதன் முதலில் சட்ட நிரூபணச் சபைக்குத் தெரிவான படித்த இலங்கையர் பிரதிநிதி - சேர் பொன் இராமநாதன்.

◈ இலங்கை **1948** பெப்ருவரி **04** ஆம் திகதி பிரதித்தானியக் குடியேற்ற ஆட்சியாளரிடம் இருந்து அரசியல் சுதந்திரம் பெற்றக்கொண்டது. பெப்ருவரி **04** ஆம் திகதி சுதந்திர தினமாக ஆண்டு தோறும் கொண்டாடப்பட்டு வருகிறது.

**1505** இல் போர்த்துக்கேயரிடம் இழந்த அரசியல் இறைமை **443** ஆண்டுகளுக்குப் பிறகு மீட்கப்பட்டது.

**1950** இல் வாளேந்திய சிங்கக் கொடி நாட்டின் தேசியக் கொடியாகப் பறக்க விடப்பட்டது. சுதந்திர இலங்கையின் முதற் பிரதமர் டி.எஸ். சேனநாயக்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

◈ இலங்கை சோசலிஸ ஜனநாயகக் குடியரசு யாப்பு **1972** மே **22** இல் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. இது முதலாவது குடியரசு யாப்பு என அழைக்கப்படுகிறது.

- இதனை உருவாக்கிய பிரதான கர்த்தா கலாநிதி கொல்வின் ஆர்.டி.சில்வா.
- இந்த யாப்பின் மூலம் பிரித்தானிய மகாராணியின் பிரதிநிதியாகக் கடமையாற்றிய ஆளுநர் மகாதேசாதிபதி எனும் பதவி ஒழிக்கப்பட்டது.
- அதற்குப் பதிலாகச் சம்பிரதாயபூர்வ ஜனாதிபதி பதவி முறை ஏற்படுத்தப்பட்டது.
- அவ்வாறு பதவி வகித்த முதலாவது ஜனாதிபதி சேர்.வில்லியம் கோபல்லாவ.

முதலாவது குடியரசு யாப்பு நிறைவேற்றப்பட்ட மே **22** ஆம்நாள் தேசியவீரர் தினமாகவும் குடியரசு தினமாகவும் கொண்டாடப்படுகிறது.

◈ **1978**இல் இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு யாப்பு ஐந்தில், நான்கு பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது. இது இரண்டாவது குடியரசு யாப்பு எனவும் அழைக்கப்படுகிறது. இந்த அரசியலமைப்பு அல்லது யாப்பின் மூலமாக நடைமுறைக்கு வந்த பிரதான அம்சங்கள் பின்வருமாறு.

- பிரதமரை ஆட்சித் தலைவராகக் கொண்ட ஆட்சிமுறை ஒழிக்கப்பட்டது. அதற்குப் பதிலாக சர்வ வல்லமை பொருந்திய நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறை நடைமுறைக்கு வந்தது.

  அப்பதவியை முதலில் வகித்தவர் ஜே.ஆர். ஜெயவர்த்தன.

- நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தொகுதி முறை மூலம் தெரிவு செய்யப்படும் முறை கைவிடப்பட்டது. விகிதாசார பிரதிநிதித்துவ தேர்தல் முறைப்படி உறுப்பினர்களைத் தெரிவு செய்யும் முறை நடைமுறைக்கு இடப்பட்டது.

  ஆனால் இம்முறையிலான முதலாவது தேர்தல் **1989** ஆம் ஆண்டில் தான் நடைபெற்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்குக் காரணம் 1982 இல் சர்வஜன வாக்கெடுப்பின் மூலம் நாடாராளு மன்றத்தின் பதவிக்காலம் ஆறு வருடங்களால் நீடிக்கப்பட்டதனாலாகும்.

- விகிதாசாரப் பிரதிநிதித்துவத் தேர்தல் முறை மூலம் 22 தேர்தல் மாவட்டங்களிலிருந்தும் மக்களின் வாக்களிப்பின் மூலம் 196 நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவ செய்யப்படுவார்கள்.

கட்சிகள் நாடளாவிய ரீதியில் பெறும் வாக்குகளின் விகிதாசாரத்தின் அடிப்படையில் 29 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுவார்கள்.
இது தேசியப் பட்டியல் முறையிலான நியமனமென அழைக்கப் படுகிறது.

ஆகவே தற்போது நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் உறுப்பினர்களின் எண்ணிக்கை (196+29) 225 ஆகும்.

◊ ஜனாதிபதி நாட்டினதும், நாடாளுமன்றத்தினதும், அமைச்சரவை யினதும், முப்படைகளினதும் தலைவராக இருப்பார்.
அமைச்சரவையில் முக்கிய உறுப்பினராகவும் இருப்பார்.

◊ தேர்தல் ஒன்றின்மூலம் தெரிவுசெய்யப்படும் ஜனாதிபதியின் பதவிக்காலம் 06 ஆண்டுகள் ஆகும். ஜனாதிபதி ஒருவர் தனது பதவிக் காலத்தின் 04 ஆண்டுகள் நிறைவு பெற்றதும் எப்போது விரும்பினாலும் ஜனாதிபதித் தேர்தலை நடத்த உத்தரவிட முடியும்.

◊ ஜனாதிபதி அடுத்துறும் இரு தடவைகள் அல்லது இடைவெளி விட்டு இன்னுமோர் தடவை எப்படியாயினும் இரு தடவைகளுக்கு மேல் பதவி வகிக்க முடியாது.

◊ சந்தர்ப்பங்கள் ஏற்படும்போது ஜனாதிபதிக்குப் பதிலாக கடமை புரியும் பொறுப்பு பிரதமரைச் சார்ந்தது.

- எக் காரணம் கொண்டாவது ஜனாதிபதியின் பதில் கடமைகளைப் பிரதமராலும் ஆற்ற முடியாது போயின் சபாநாயகர் கடமை யாற்றுவார்.

- ஜனாதிபதி பதவியை வகிப்பவரின் கால எல்லை முடிவடைய முன் அப்பதவி வெற்றிடமாக வந்தால் நாடாளுமன்றம் கூடித் தம் உறுப்பினர் ஒருவரை அப் பதவிக்குத் தெரிவு செய்யும். அவ்வாறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரியப்பட்டவர் அப் பதவிக்குரிய எஞ்சிய காலப் பகுதிக்கு மாத்திரமே ஜனாதிபதியாகப் பதவி வகிப்பார்.

◈ தனிச் சிங்களச் சட்டம் நாடாளுமன்றத்தில் நிறைவேறியது 1956 யூன் 05. எஸ். டபிள்யூ, ஆர். டி. பண்டாரநாயக்காவின் மகாஜன ஐக்கிய கூட்டு முன்னணி அரசே இச் சட்டத்தை நிறைவேற்றியது.

இதனை எதிர்த்த இலங்கைத் தமிழரசுக் கட்சியினர் எஸ்.ஜே,வி. செல்வநாயகம் அவர்களின் தலைமையில் பழைய நாடாளுமன்றத்துக்கு முன்னாலுள்ள காலி முகத்திடலில் சத்தியாக்கிரகம் செய்தனர்.

அரச ஆதரவுடன் காடையர்கள் இவர்களை கடுமையாகத் தாக்கி சத்தியாக்கிரகப் போராட்டத்தைக் குழப்பினர்.

◈ பிராந்திய சபைகள் அமைப்பதற்கான பண்டா - செல்வா ஒப்பந்தம் 1957 யூலை 26 இல் கையெழுத்தானது. அப்போதைய எதிர்க்கட்சித் தலைவர் J.R. ஜெயவர்த்தன வினால் இதை எதிர்த்து மாபெரும் பாதயாத்திரை கண்டி நகரை நோக்கி நடத்தப்பட்டது.

இதனால் சிங்கள் மக்கள் இன ரீதியாகத் தூண்டப்பட S.W.R.D. பண்டாரநாயக்க S.J.V. செல்வநாயகம் ஆகியோரால் எய்தப் பெற்ற குறித்த ஒப்பந்தம் கைவிடப்பட்டது.

◈ இலங்கையில் மிகக் குறுகிய காலம் பிரதமர் பதவியை வகித்தவர் கலாநிதி தஹநாயக்க, முதலாவது காபந்து பிரதமர் என்ற பெருமையையும்இவர் பெறுகின்றார்.

பாஷா பெரமுன கட்சியின் தலைவரான இவர் 1959 செப்ரெம்பர் 26 இல் பிரதமர் பண்டாரநாயக்க அவர்களின் மறைவையடுத்து இரண்டு மாதம், ஒன்பது தினங்கள் (71 நாட்கள்) பிரதமர் பதவியை வகித்தார்.

கலாநிதி தஹநாயக்க அவர்களினாலேயே நாடாளுமன்றத் தேர்தல் ஒரே நாளிலேயே நடத்தி முடிக்கப்படும் முறை அறிமுகப்படுத்தப்பட்டது. 1960 மார்ச் மாதம் 4 ஆவது பொதுத் தேர்தலின்போது இது அறிமுகமாகியது.

◈ அதற்கு முன் பல நாட்கள் தேர்தல் நடப்பது வழக்கம்.
பதவியில் இருந்தபோதே இரண்டு ஆட்சித் தலைவர்கள் கொல்லப் பட்டுள்ளனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*1959* இல் பிரதமர் பண்டாரநாயக்க அவர்களும், *1993* இல் ஜனாதிபதி R.பிரேமதாஸ அவர்களுமே இவ்வாறு கொல்லப்பட்டவர்கள்.

◈ *1987* யூலையில் இலங்கை - இந்தியத் தலைவர்களான J.R. ஜெயவர்த்தன-ராஜீவ் காந்தி ஆகியோரால் இலங்கை - இந்திய சமாதான உடன்படிக்கை கையெழுத் தானது. இதன் விளைவாக வடக்கு - கிழக்கு மாகாணங்களில் அமைதி காக்கவென இந்தியப் படைகள் (Indian Peace Keeping Forces - IPKF) இந்திய அமைதி காக்கும் படைகள் எனும் பெயரில் வந்தன. இவை *1990* மார்ச்சில் நாட்டைவிட்டு வெளியேறின. *1971* ஏப்ரலில் அரசாங்கத்தைக் கவிழ்க்க றோகண விஜேவீர தலைமையில் மக்கள் விடுதலை முன்னணி **(JVP)** கிளர்ச்சி நடத்தியபோதும் அதை ஒடுக்க இந்தியப் படைகள் வந்தமை குறிப்பிடத்தக்கது.

◈ சிறீமாவோ பண்டாரநாயக்கவின் குடியுரிமையைப் பறிப்பதற்கான குடியுரிமைத் தடைச்சட்டம் *1980* ஓகஸ்ட் *29* இல் கொண்டு வரப்பட்டது.

அப்போதைய J.R. ஜெயவர்த்தனவின் ஐக்கிய தேசியக் கட்சி அரசே குடியுரிமைப் பறிப்பைச் செய்தது.

◈ பிரதம மந்திரி பதவி வகித்த ஒரேயோரு சௌற்றர் சிறீமாவோ பண்டாரநாயக்க

◈ ஒரே நேரத்தில் இரு தேர்தல் தொகுதிகளுக்குப் நாடாளுமன்ற உறுப்பினராக அங்கம் வகித்த ஒரேயோருவர் R.G. சேனநாயக்க. இவர் *1956-1960* வரை களணி, தம்பதெனிய ஆகிய இரு தொகுதிகளைப் பிரதிநிதித்துவம் செய்தார்.

◈ ஐக்கிய நாடுகள் சபையில் இலங்கை உறுப்புரிமை பெற்றது - *1955*.

◈ இலங்கையில் அதிக தடவைகள் வரவு - செலவுத் திட்டத்தைத் தயாரித்து நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்த ஒரேயொரு நிதியமைச்சர் - ரொனி டி மெல்.

◈ ஐக்கிய நாடுகள் சபையின் வலிமைமிக்க அமைப்பான பாதுகாப்புச் சபையில் இலங்கை உறுப்புரிமை பெற்ற ஆண்டு *1962*.

◈ அணிசேரா இயக்கத் தலைவர்கள் பங்கேற்ற உச்சி மாநாடு *1976* இல் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மகாநாட்டு மண்டபத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடைபெற்றது. அந் நிகழ்வுக்குப் பிரதமர் சிறீமாவோ பண்டாரநாயக்க தலைமை வகித்தார்.

◈ உலகின் முதலாவது பெண் ஆட்சித் தலைவர் என்ற பெருமையைச் சிறீமாவோ பண்டாரநாயக்க பெறுகின்றார்.

◈ 1960 யூலையில் பிரதமராக பதவியேற்றதன் மூலம் இப் பெருமை கிடைத்துள்ளது.

◈ இலங்கையின் முதலாவது பெண் மாகாண முதலமைச்சர், பெண் ஜனாதிபதி ஆகிய நிலைகளை சந்திரிகா குமாரதுங்க பெறுகின்றார்.

இலங்கைப் பாராளுமன்றத்தில் மனித உரிமைகள் சட்டம் 1996 இல் அறுதிப் பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேறியது.

◈ ஐக்கிய நாடுகள் சபையின் சர்வதேச நீதிமன்றத்திற் பணியாற்றிய இலங்கை நீதிபதி - வீரமந்திரி.

◈ 1998 ஆம் ஆண்டு 21 ஆம இலக்க காணி உரித்து பதிவுச் சட்டம் இயற்றப்பட்டது.

◈ இதன் கீழ் காணி உரித்து நிர்ணய ஆணையாளர் நாயகம் எனும் பதவி உருவாக்கப்பட்டது.

◈ இச்சட்டத்தின் கீழ் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் "பிரமவிய' திட்டம் நடைமுறைக்கு வரப்படவுள்ளது.

◈ இலங்கையில் பொதுச் சட்டத்தின் கீழ் திருமண வயது 18 ஆகும். முஸ்லீம் விவாகப் பதிவு வயது 12.

◈ தேசவழமைச் சட்டம்

◈ இலங்கையில் வடமாகாணத்தை வாழிடமாகக் கொண்ட தமிழ் மக்களுக்கும் அவர்களுடைய ஆதனங்களுக்கும் ஏற்புடையதான ஓர் சட்டமாகும்.

◈ இது இலங்கையின் ஆள்சார் சட்டங்களில் ஒன்றாகக் கருதப்பட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டாலும் இதன் சிறப்பியல்பு சில விடயங்களில் இது ஓர் இடம் சார்சட்டமாகவும் இருக்கிறது.

◈ 1706 ஆம் ஆண்டு டச்சு (ஒல்லாந்தர்) ஆட்சிக்காலத்தில் முதன்முதலாக இத்தேச வழமைச் சட்ட விதிகளை உத்தியோகபூர்வமாக கோவைப் படுத்திய கிளாஸ் ஐசாக் எனும் நிர்வாக சேவை அதிகாரி அன்றைய மகாதேசாதிபதியாக இருந்த "ஜோன்ஸ் சைமன்ஸ்" இவற்றை அறிக்கையிட்டார்.

◈ 1707 இல் இது கோவைப்படுத்தப்பட்டது. இந்தக் கோவை 1806 ஆம் ஆண்டு நியதிச்சட்ட (Regulations) அந்தஸ்து பெற்றது.

## கண்டியச் சட்டம்

◈ கண்டிய மாகாணங்களில் வசித்தவர்களின் வாய்மொழி மரபும், வழக்காறும் கண்டியச்சட்டமாக அடையாளம் காணப்பட்டது.

## முஸ்லீம் சட்டம்

◈ முஸ்லீம்களுக்குரிய மரபுகளும், வழக்காறுகளும் முகமதியன் கோவை எனப்படுகின்றது. இது முஸ்லீம் சட்டத்தின் முழுமையான ஒரு தொகுப்பாகும்.

◈ இலங்கையில் தாபரிப்புச் சட்டம் 1999 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்கச்சட்டத்தின் திருத்தியமைக்கப்பட்டது.

◈ இலங்கையில் 2005 ஆம் ஆண்டின் 36ஆம் இலக்க குடும்ப வன்முறைத் தடுப்புச்சட்டம் இயற்றப்பட்டது.

> போர்க்களத்திலே பெறக்கூடிய சில வெற்றிகளை இழக்கக்கூட நான் சம்மதிப்பேன். அனால் காலம் வீணாக்கப்படுவதை மட்டும் ஒருபோதும் நான் விரும்பமாட்டேன்.
>
> -நெப்போலியன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கையின் கல்வித்துறை

◆ இலவசக் கல்வித் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்ட ஆண்டு -1945

C.W.W. கன்னங்கரா கல்வி அமைச்சராக இருந்தபோது இத்திட்டம் அறிமுகப்படுத்தப் பட்டதினால் அவரை "இலவசக் கல்வியின் தந்தை" எனப் போற்றுகின்றனர்.

1943ஆம் ஆண்டில் கன்னங்கரா குழுவின் அறிக்கை வெளியானது.

◆ இலண்டன் பல்கலைக்கழக கல்லூரியுடன் இணைந்ததாக கொழும்பில் இலங்கைப் பல்கலைக்கழக கல்லூரி 1921ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.

இலங்கைப் பல்கலைக்கழகக் கல்லூரியையும், கொழும்பு மருத்துவக் கல்லூரியையும் இணைத்து, கொழும்பில் இலங்கைப் பல்கலைக்கழகம் 1942ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.

இதன் முதலாவது துணைவேந்தராக பிரித்தானியரான சேர்.ஐவர் ஜெனிங்ஸ் பதவி வகித்தார்.

துணைவேந்தராகப் பதவி வகித்த முதலாவது இலங்கையர்-சேர்.நிக்கலஸ் அட்டிகல.

◆ யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கல்லூரி 1972ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப் பட்டது. 1974ஒக்ரோபர் 06 முதல் இது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமாகத் தரம் உயர்த்தப்பட்டது. அமைவிடம் திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

◆ மட்டக்களப்புப் பல்கலைக்கழகக் கல்லூரி 01.08.1981இல் ஆரம்பிக்கப்பட்டது. பின்னர் 01.10.1986இல் கிழக்குப் பல்கலைக்கழகமாகத் தரம் உயர்த்தப் பட்டது. அமைவிடம், வந்தாறுமூலை, மட்டக்களப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- இலங்கைப் பல்கலைக்கழகச் சட்டத்தின்கீழ் நாட்டின் உயர் கல்வித்துறையில் 1980ஆம் ஆண்டு இலங்கை திறந்த பல்கலைக்கழகம் நிறுவப்பட்டது.

  இதன் தலைமையகம் கொழும்பு மாவட்டத்தின் நாவல, நுகேகொட எனுமிடத்தில் உள்ளது. இதன் துணைவேந்தர் பதவியை முதன் முதலில் வகித்தவர் பேராசிரியர் டீ.பி.குணதிலக.

  இலங்கையின் தேசிய பல்கலைக்கழகங்களில் ஒன்றாக இலங்கை திறந்த பல்கலைக்கழகமும் கணிக்கப்படுகிறது.

- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு எனும் நிறுவனம் 1978ஆம் ஆண்டில் இலங்கைப் பல்கலைக்கழகச் சட்டத்தின் மூலம் நிறுவப்பட்டது. இந்த நிறுவனம் இலங்கையின் தேசிய பல்கலைக்கழகங்களது நிர்வாகத்திற்குப் பொறுப்பாக இருப்பதுடன், பல்வேறு பீடங்களுக்கும் மாணவர்களைத் தெரிவு செய்து அனுமதியும் வழங்குகிறது.

- இலங்கையின் தேசிய பல்கலைக்கழகங்களில் கல்வி பயிலும் வறிய மாணவர்களுக்கு உதவுவதற்காக 1986ஆம் ஆண்டில் "மகாபொல நம்பிக்கை நிதியம்" ஏற்படுத்தப்பட்டது. மகாபொல புலமைப்பரிசில் 1981ஆம் ஆண்டு முதல் வறிய மாணவர்களுக்கும், அதி திறமைப் புள்ளிகளுடன் பல்கலைக்கழகம் தெரிவாகும் மாணவர்களுக்கும் வழங்கப்பட்டு வருகிறது.

- இளைஞர் அமைதியின்மை தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் சிபாரிசின் பேரில் 1989ஆம் ஆண்டு நாட்டின் உயர் கல்வித்துறை வரலாற்றில் இணைக்கப்பட்ட பல்கலைக்கழகக் கல்லூரி முறை அறிமுகம் செய்யப்பட்டது.

  1991முதல் செயற்பட ஆரம்பித்த இக்கல்லூரி முறையை 1996ஆம் ஆண்டு முதல் அரசாங்கம் நிறுத்தியது.

  இக்கல்லூரிகள் ஒவ்வொரு பல்கலைக்கழகத்துடனும் இணைக்கப்பட்டு அவற்றுக்கு பல்கலைக்கழக அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது.

- இலங்கைப் பல்கலைக்கழகங்களில் தாய்மொழி மூலம் அல்லது சுதேச மொழி மூலம் பட்டப்படிப்புக் கற்கைகள் உருவான ஆண்டு 1960.
- இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரி முதன்முதலில் 1893ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்பித்து வைக்கப்பட்ட இடம் மருதானை, கொழும்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

◆ இலங்கை முஸ்லீம்களது கல்வி வளர்ச்சியில் முதன்மை வாய்ந்த நிறுவனமாக ஜாமி ஆ நளீமிய்யா உள்ளது. இக்கலாநிலையம் 1973ஆம் ஆண்டு அன்றைய கல்வி அமைச்சர் பதியுத்தீன் மஹ்மூத் அவர்களால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

நளீம் ஹாஜியார் எனும் தனவந்தரால் இக் கலாநிலையமும் இஸ்லாமிய மறுமலர்ச்சி இயக்கமும் உருவானது. இங்கு 07 வருடங்கள் கல்விகற்று வெளியேறுபவர்கள் இரு நிலைப் பட்டங்களோடு வெளியேறுகின்றார்கள். அவ்விரு துறைகள் இஸ்லாமிய அரபுத்துறை, கலைமாணி.

◆ பாடசாலைகளில் வகுப்பு நிலைகள் முன்னர் தரம் **(Grade)** என குறிப்பிடப்பட்டது.

1984 ஜனவரியிலிருந்து இம்முறை ஆண்டு **(Year)** என மாற்றப்பட்டது. இதன்படி முன்னர் முதலாம் தரம் ( Grade 1) என இருந்தது. இரண்டாம் ஆண்டு (Year 2) என ஆகியது. காரணம் பாலர் வகுப்பு எனும் முறைமை நீக்கப்பட்டு அவ் வகுப்பு ஆண்டு 01 **(Year 1)** என ஆகியது. 1999.01.01 முதல் மீண்டும் தரம் என அழைக்கப்படுகின்றது.

◆ இலங்கை ஆசிரியர் சேவை 06.10.1994 இல் சர்வதேச ஆசிரியர் தினத்தன்று அரசாங்கத்தினால் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

ஆசிரியர் சேவையினுள் ஆசிரியர்கள் 03 வகுப்புக்களில் வகைப்படுத்தப்படுவார்கள். அவை; வகுப்பு III,II,I இவற்றில் பிரதான பிரிவுகளும், உப பிரிவுகளும் உள்ளன. அவை,

| | |
|---|---|
| வகுப்பு III | தரம் II |
| வகுப்பு III | தரம் I |
| வகுப்பு II | தரம் II |
| வகுப்பு II | தரம் I |
| வகுப்பு I | |

ஆசிரிய சேவை உருவாக்கப்பட்டமைக்கு அமைய 01.01.95 முதல் அதிகரிக்கப்பட்ட சம்பள அளவுத் திட்டம் நடைமுறைக்கு வந்தது.

◆ "இலங்கை அதிபர் சேவை" எனும் சேவையும் தற்போது நடைமுறையில் உள்ளது. இதன் பிரகாரம் அதிபர்கள் தரம் (Grade) III,II,I என 3 தரங்களாக நிலைப்படுத்தப்பட்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- இலங்கை கல்விச் சேவை (SLES) 1985ஆம் ஆண்டில் இருந்து இலங்கை கல்வி நிர்வாக சேவை **(SLEAS)** எனத் தரம் உயர்த்தப்பட்டது. இது வகுப்பு III,II,I என 03 நிலைகளைக் கொண்டுள்ளது.

- தேசிய கல்வி நிறுவகம் (National Institute of Education-NIE) விசேட நாடாளுமன்றச் சட்டத்தின் மூலம் 1985இல் உருவாக்கப்பட்டது.

  இது கொழும்பு, மகரகம எனுமிடத்தில் இயங்குகின்றது.

  இந்நிறுவனம் உருவாக்கப்பட முன்னர் 2 நிலையங்கள் கல்வி தொடர்பாக இயங்கின. அவை,

  - பாடவிதான அபிவிருத்தி நிலையம் (கொழும்பு)
  - முகாமைத்துவ நிலையம் (களுத்துறை)

  இவை இரண்டும் இணைக்கப்பட்டே 1985இல் தேசிய கல்வி நிறுவகம் ஆரம்பிக்கப்பட்டது.

  அப்போது 22 பணிப்பாளர்களின் கீழ் 22 பிரிவுகளாகத் தேசிய கல்வி நிறுவகம் இயங்கியது.

  இப்பணிப்பாளர்களுக்கு பணிப்பாளர் நாயகம் ஒருவர் தலைமை வகிக்கின்றார்.

  தேசிய கல்வி நிறுவகம் பின்வரும் 6 பிரதான பணிகளை மேற்கொண்டு வருகின்றது.

  i) சட்டப்படி இலங்கையிலே ஆசிரியர்களுக்கு வழங்கப்பட வேண்டிய பயிற்சிகளை வழங்குகின்றது

  ii) பாடசாலைகளில் கற்பிக்கப்பட வேண்டிய பாடவிதானம் முழுவதையும் தயாரிக்க, மீளாய்வு செய்ய வழிகாட்டுகின்றது.

  iii) ஆசிரியர்களுக்காகிய வழிகாட்டிகளைத் தயாரிக்கின்றது.

  iv) கல்வித் திணைக்கள அதிகாரிகளுக்கும், பாடசாலை அதிபர்களுக்கும் முகாமைத்துவம் தொடர்பான கருத்தரங்குகளை வைக்க, தொடர் நிகழ்ச்சிகள் வைக்க பொறுப்பாகவுள்ளது.

  v) பல்கலைக்கழகங்களுக்குச் சமனான 1ஆம் பட்டம், 2ஆம் பட்டம், டிப்ளோமா ஆகிய சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன. இலங்கையில் முதன் முதலாகப் பல்கலைக்கழகம் அல்லாத நிறுவனத்துக்குப் பட்டம் வழங்கும் சட்ட பூர்வமான அங்கீகாரம் அரசினால் தேசிய கல்வி நிறுவகத்துக்கே வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

vi) கல்விசார் ஆய்வுகளை மேற்கொள்ளுகின்றது.

◆ 1943ஆம் ஆண்டு வெளியாகிய கன்னங்கரா குழு அறிக்கையில் ஆசிரிய பயிற்சியின் முக்கியத்துவத்திற்கு முன்னுரிமை அழுத்தம் அளிக்கப் பட்டது.

அதன் விதப்புரைப்படி 1949இல் இலங்கைப் பல்கலைக்கழகமும் பட்டதாரி ஆசிரியர்களுக்கு "கல்வி டிப்ளோமா" வழங்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்டது.

1945இல் இலவசக் கல்வி அறிமுகத்துடன் அதிகளவில் அதிகரித்த பாடசாலைகளில் ஆசிரியர்களும் அதிகளவில் சேர்க்கப்படலாயினர். 1960களில் ஆசிரியப் பயிற்சிக் கல்லூரிகளும் அரசு உடமையாக்கப்பட்ட தால் ஆசிரியப் பயிற்சி முழுப்பொறுப்பையும் அரசு ஏற்க நேரிட்டது.

◆ இலங்கையில் 1985 ஒக்ரோபர் 1 இல் இலங்கையின் கல்வித் துறையில் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கதான கல்வியியல் கல்லூரிகள் (College of Education) எனும் முறைமை அறிமுகம் செய்யப்பட்டது. ஒரே நேரத்தில் பின்வரும் 6 கல்வியியல் கல்லூரிகளும் தொடங்கப்பட்டன.

| | | |
|---|---|---|
| பஸ்துன்ரட்ட கல்வியியற் கல்லூரி | - | களுத்துறை |
| சியன கல்வியியற் கல்லூரி | - | வெயாங்கொடை |
| ஹாபிற்றிகம கல்வியியற் கல்லூரி | - | மீரிகம |
| ஊவா கல்வியியற் கல்லூரி | - | பண்டாரவளை |
| சாரிபுத்த கல்வியியற் கல்லூரி | - | நிட்டம்புவ |
| மகாவலி கல்வியியற் கல்லூரி | - | உயன்வத்தை |

அப்போதைய கல்வி, இளைஞர் விவகார, தொழிநுட்ப அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க அவர்களின் ஆலோசனையின் பேரிலேயே இவை உருவாகின. ஏற்கெனவே ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகளாக இருந்தவையே இவ்வாறு கல்வியியற் கல்லூரிகளாக மாற்றம்பெற்று, புது முறையிலான ஆசிரிய சேவை முன்பயிற்சி நிறுவனங்களாகச் செயற்படத்தொடங்கியவை என்பது குறிப்பிடத்தக்கது.

1986இல் 30ஆம் இலக்க கல்வியியற் கல்லூரி சட்டத்தைப் பாராளுமன்றம் ஏகமனதாக அங்கீகரித்தமை சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது.

இச்சட்டவாக்கத்தினால் ஏலவே அமைக்கப்பட்ட கல்வியியற் கல்லூரிகளுக்கு அதிகாரபூர்வ அந்தஸ்து வழங்கப்பட்டது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவை 1985இல் உருவான தேசிய கல்வி நிறுவகத்தின் அனுசரணையுடன் இயங்கும் வழிமுறைகளும் வகுக்கப்பட்டன.

இக்கல்லூரிகளுக்கு "தேசிய கல்வி டிப்புளோமா" வழங்கவும் படிப்படியாகக் கல்விமாணிப் பட்டம் வழங்கவும் ஏற்பாடுகள் சட்டத்தின் மூலம் குறிப்பிடப்பட்டு உள்ளன.

பின்னர் பின்வரும் ஆண்டுகளில் குறிப்பிடப்படும் இடங்களிலும் கல்வியியற் கல்லூரிகள் உருவாக்கப்பட்டன.

1987 - நில்வள கல்வியற் கல்லூரி - அக்குரஸ்ஸ
1992 - சிறீபாத கல்வியற் கல்லூரி - பத்தனை
1992 - அட்டாளைச் சேனை கல்வியற் கல்லூரி - அட்டாளைச்சேனை
1993 - வவுனியா கல்வியற் கல்லூரி - வவுனியா
1995 - மட்டக்களப்பு கல்வியற் கல்லூரி - மட்டக்களப்பு
1998 - யாழ்ப்பாணம் கல்வியற் கல்லூரி - கோப்பாய்

கல்வியியற் கல்லூரிகளில் மாணவர்களுக்கு ஆங்கிலம், விஞ்ஞானம், கணிதம், ஆரம்பக் கல்வி, உடற்கல்வி, பௌத்தம் போன்ற பல்வேறு பாடங்களில் 02 வருடங்கள் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகின்றது.

அதன் பின்னர் ஏதாவது ஒரு பாடசாலையில் இணைக்கப்பட்டு 01 வருடம் உள்ளகப் பயிற்சி வழங்கப்படுகின்றது. 03 வருட காலப்பகுதியிலும் கல்வி நடவடிக்கைக்கென கொடுப்பனவு ஒன்றும் வழங்கப்படுகின்றது.

தற்போது 18 கல்வியியற் கல்லூரிகள் இலங்கை முழுவதும் உள்ளது.

கல்வியியற் கல்லூரிகளும், ஆசிரிய பயிற்சிக் கல்லூரிகளும் ஆசிரிய தொழில்சார் பயிற்சிகளை அளித்தாலும் குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் உள்ளது.

## பாடசாலை அபிவிருத்திச் சங்கம்

பாடசாலைகள் அனைத்திலும் 31.01.1979ஆம் ஆண்டு28ஆம் இலக்கச் சுற்றுநிருபத்தின்படி பாடசாலை அபிவிருத்திச் சங்கங்கள் அமைக்கப்பட வேண்டும்.

இச்சங்கத்திற்கு அதிபர் தலைவராக இருப்பார். நிர்வாகசபை உறுப்பினர்கள் வருடத்திற்கு ஒரு முறை புதுப்பிக்கப்படுவார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பழைய மாணவர் சங்கம்

பாடசாலையின் நன்மை, தீமைகள், அபிவிருத்தி இவைகளிலே பழைய மாணவர்கள் அக்கறையுடையவர்களாக இருப்பார்கள். எனவே பழைய மாணவர் சங்கம் பாடசாலையில் அக்கறை உள்ளதொரு இயக்கமாகக் கருதப்படல் வேண்டும்.

அதிபர் தலைவராக இருப்பார். ஏனைய அங்கத்தவர்கள் தேவைக்கேற்ப சுற்று நிரூபத்தின்படி இடம்பெறுவர். பழைய மாணவர் சங்கமும், அங்கத்தவர்களும் பாடசாலைக்கு உதவலாமே தவிர பாடசாலை நிருவாகத்தில் தலையிடக்கூடாது.

## மாகாண அடிப்படையில் கல்வி அமைப்பு

மாகாணசபை ஆட்சி முறை 1987ஆம் ஆண்டு 13ஆவது அரசியல் சட்டத் திருத்தத்திற்கும், தொடர்ந்து வந்த மாகாணசபைச் சட்டத்திற்கும் பின்னர் நாட்டில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

இதன்படி கல்வி நிருவாகமுறை மத்திய அரசு, மாகாண அரசு என இரு முறைகளாகியது. மாகாண கல்வி அமைச்சும், மாகாணக் கல்விப் பணிப்பாளர் பணிமனையும் புதிதாக உருவாக்கப்பட்டன. மாகாண கல்வி அமைச்சுக்கு உயர் அதிகாரியாக கல்விச் செயலாளர் இருப்பார்.

கல்வி சம்பந்தப்பட்ட பல அதிகாரங்கள் மத்திய அரசாங்கத்திற்கும், மாகாண அரசாங்கத்திற்கும் இடையில் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன.

- இலங்கைப் பாடசாலைகளில் சாரணர் இயக்கம் நிறுவப்பட்ட ஆண்டு – 1917. உலக சாரணர் இயக்கத்தின் தந்தையென இங்கிலாந்தைச் சேர்ந்த பேடன் பவெல் பிரபு போற்றப்படுகின்றார்.
- பாடசாலை மாணவர்களுக்கு இலவச பாடநூல் விநியோகிக்கும் திட்டம் நடைமுறைக்கு வந்தது - 1989.

  இலவச மதிய உணவு வழங்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது – 1989

  பின்னர் இது 1990இல் இலவச மதிய உணவு முத்திரை வழங்கும் திட்டமாக மாற்றப்பட்டது. 1996உடன் இதுவும் கைவிடப்பட்டது.

- 1987இல் தேசியப் பாடசாலைகள் என்ற கோட்பாடு அறிமுகப்படுத்தப்பட்டது. முழு நிலைப்பாடசாலைகள் 14 தேசியப் பாடசாலைகளாக உருப்பெற்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2003ஆம் ஆண்டு தரவின்படி ஏறத்தாழ 310 தேசிய பாடசாலைகள் முழுவதும் உள்ளன.

## புதிய கல்விச் சீர்திருத்தம்

முக்கிய கொள்கை சீரமைப்புக்களை விதந்துரைப்பதற்காகவும், நடவடிக்கைத் திட்டத்தினைத் தயாரிப்பதற்காகவும் 1996இல் ஜனாதிபதி செயலணிக்குழு ஒன்று நியமிக்கப்பட்டது. பொதுக்கல்வியை மேம்படுத்துவதற்காகப் பின்வரும் முக்கிய சீரமைப்புகள் விதந்துரைக்கப்பட்டன.

- 5-14 வயதிற்குமிடையிலான சிறார்களுக்கு கட்டாயக் கல்வி
- க.பொ.த. (உ/த.) இற்குப் புதியதொரு தொழிநுட்ப பாடநெறி
- ஆசிரியர் ஆட்சேர்ப்பு
- மற்றும் நியமனத்துக்கு மேம்பட்ட பொறிமுறை.
- ஆசிரியர் பங்கீட்டில் தரத்தினை எய்துவதற்கும் செலவுகளைக் குறைப்பதற்குமான முயற்சி.
- சிறந்த முகாமைத்துவத்திற்காக இருவரிசை அடிப்படையில் தற்போதுள்ள பாடசாலைகளை மீளமைத்தல்.
- தரம் 1-9 வரையிலான வகுப்புக்கள் கொண்ட பாடசாலைகள் கனிஷ்ட பாடசாலைகள் எனவும், தரம் 10-13 வரையிலான வகுப்புக்கள் கொண்ட பாடசாலைகள் சிரேஷ்ட பாடசாலைகள் எனவும் பிரிக்கப்படும்.
- ஆசிரியர் கல்விக்காகத் தேசிய மேலாண்மைச் சபையை நடைமுறைப் படுத்தல்.
- ஆசிரியர்களின் தரத்தினை மேம்படுத்துவதற்காக அவர்களை மதிப்பிடுகின்ற புதியதொரு திட்டம்.
- கற்பித்தல் தொழிலுக்காகப் புதிதாகச் சேர்க்கப்படும் அனைவருக்கும் பணிக்கு முந்திய பயிற்சி.
- பரீட்சார்த்திகளின் மீதான சுமையைக் குறைக்கும் பொருட்டு உயர்தரப் பரீட்சைகளை மீளமைத்தல்.
- பாடநெறி அமைப்பினையும், பாடவிதானத்தையும் திருத்தியமைப்பதன் மூலம் பல்கலைக்கழகக் கல்வியின் பயனுறும் தன்மையினை அதிகரித்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பாடசாலை மாணவர்களுக்கு இலவசப் பாடசாலைச் சீருடை விநியோகிக்கும் திட்டம் அறிமுகமானது - 1993
- பாடசாலைகள் தேசிய மயமாகியது - 1960. இவ் ஆண்டிலேயே தாய்மொழி மூலமாகப் போதிக்கும் பாடசாலைகளும் உருவாகின.
- கல்விச் சீர்திருத்த வெள்ளையறிக்கை வெளியாகியது - 1980.
- 1990இல் தேசிய கல்வி ஆணைக்குழு உருவானது.
- அரசாங்கம் சுதேச மருத்துவக் கல்லூரிக்குப் பல்கலைக்கழக அந்தஸ்து வழங்கியது. 1997
- பள்ளிக்கூட "விசுக்கோத்து" நிகழ்ச்சித் திட்டம் தொடங்கியது - 1986.
- வறிய குடும்பங்களில் இருந்து வரும் திறமையான மாணவர்களின் தகைமைக்காகப் புலமைப் பரிசில் நிகழ்ச்சித் திட்டம் ஆரம்பமாகியது - 1952.
- 1980இல் றாகமவில் வடகொழும்பு மருத்துவக் கல்லூரி உருவானது. பின்னர் இது பல்கலைக்கழக மாணவர்களின் தொடர் போராட்டங்களால் கைவிடப்பட்டது.
- 1978இல் உயர்கல்வி அமைச்சு உருவாக்கப்பட்டது. தொழில்நுட்பக் கல்வி உயர்கல்வி அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டது.
- 1987இல் கணினித் தொழிநுட்ப நிறுவனம் ஆரம்பம்.

**கற்கை நன்றே கற்கை நன்றே**
**பிச்சை புகினும் கற்கை நன்றே.**

**சீனதேசம் சென்றும் சீர்கல்வி தேடிடு.**

**கேடில் விழுச்செல்வம் கல்வி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சர்வதேச உடன்படிக்கைகள்

உலக நாடுகளின் தலைவர்களால் காலத்தின் தேவைக்கேற்ப அவ்வப்போது ஏற்படுத்தப்படும உடன்படிக்கைகள் ஊடகங்களின் வாயிலாக மக்களின் கவனத்தை ஈர்த்து வருகின்றது.

இவை சர்வதேச நிறுவனங்களால் கூட ஏற்படுத்தப்பட்டுள்ளன. அணு ஆயுதக்குறைப்பு, பரம்பலின் தடை, போர்நிறுத்தம், சமாதானம், சூழல் பாதுகாப்பு, பொருளாதார சூமம்பாடு, மனித நலன்களைப் பேணலும் உயர்த்தலும் என்ற பல நோக்கில் இடம்பெறுகின்றன.

அவற்றில் முக்கியத்துவம் மிக்கவை சிலவற்றைப் பார்ப்போம்.

**1. கியோட்டா உடன்படிக்கை**

ஜப்பானின் கியோட்டா நகரில் 1997ஆம் ஆண்டு நடைபெற்ற ஐக்கிய நாடுகள் மகாநாட்டில் அங்கீகரிக்கப்பட்ட ஒரு பிரகடனமே கியோட்டா உடன்படிக்கை எனப்படுகிறது.

புவி வெப்பமடைதலைத் தடுப்பதற்காக பச்சைவீட்டு வாயுக்களின் செறிவைக் கட்டுப்படுத்தும் நோக்கிலான இவ் உடன்படிக்கையில் 152நாடுகள் கையெழுத்திட்டன.

2005பெப்ருவரி 16ஆம் நாள் முதல் நடைமுறைக்கு இடப்பட்ட இப்பிரகடனத்தை அமெரிக்கா தலைமையில் அவுஸ்திரேலியா, சீனா, இந்தியா, ஜப்பான், தென்கொரியா ஆகிய நாடுகள் ஏற்றுக்கொள்ளவில்லை. இவை கியோட்டாவுக்கு அப்பால் எனும் கூட்டுப் பிரகடனத்தை வெளியிட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கியோட்டா உடன்படிக்கையின் மூலம் 2008ஆம் ஆண்டு தொடக்கம் 2012ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் பச்சைவீட்டு வாயுக்கள் சேர்வதைத் தடுத்து சுமார் 15 வருடங்களுக்கு முன்பிருந்த மட்டத்திற்குக் கொண்டுவரும் நடவடிக்கைகளை எடுக்குமாறு உலக நாடுகள் வலியுறுத்தப்படுகின்றது.

மின்சாரத்தை உற்பத்தி செய்யும் நிலையங்களில் பயன்படுத்தப்படும் நிலக்கரி போன்ற எரிபொருள்களாலும், வாகனங்களிலிருந்து வெளியேற்றப்படும் புகையாலும் வளிமண்டலத்தில் காபனீரொட்சைட் வாயு சேர்கிறது. விவசாயக் கழிவுகளைக் குவித்து வைக்கும்போது மீதேன் வாயுவும் இரசாயன பசளைகளை அதிகப்படியாகப் பயன்படுத்தும்போது நைட்ரஜன் ஒட்சைற் வாயுவும் வெளியிடப்படுகின்றன. இவையே பச்சைவீட்டு வாயுக்கள் எனப்படுகிறது.

**2. டேய்ட்டன் உடன்படிக்கை** - Dayton Agreement

யூகோஸ்லாவியா என்ற நாடு முன்னர் 6 குடியரசுகள் சேர்ந்த ஒரு கூட்டமைப்பாக இருந்தது. அவை சேர்பியா, மொண்ரே-நெக்ரோ, பொஸ்னியா-கெர்ச்சகோவினா, குரோஷியா, மசிடோனியா, சிலேவேனியா ஆகியவையே. இதில் பொஸ்னியா-கெர்ச்சகோவினா என்ற குடியரசில் இடம்பெற்ற உள்நாட்டுப் போருக்குத் தீர்வாக 1995டிசெம்பரில் பிரான்ஸ் தலைப்பட்டினம் பாரிஸ் நகரத்தில் கையெழுத்தானதே இந்த டேய்ட்டன் உடன்படிக்கை.

பொஸ்னிய, சேர்பிய, குரோஷிய ஜனாதிபதிகள் இதனை ஏற்படுத்தியிருந்தனர்.

அமெரிக்காவின் டேய்ட்டன் நகரில் நடைபெற்ற இணக்கப் பேச்சுவார்த்தைகளின் போது இவ் உடன்படிக்கை தொடர்பான விதிகள் வகுக்கப்பட்டதால் இப்பெயர் வந்தது. இவ் உடன்பாட்டின்படி பொஸ்னிய குடியரசு 03 வலயங்களாகப் பிரிக்கப்பட்டு முஸ்லிம்கள், சேர்பியர்கள், குரோசியர்களுக்கெனத் தனித்தனியாக ஜனாதிபதிகள் தேர்தலின் மூலம் தெரியப்பட்டனர்.

கிழக்கு ஐரோப்பாவில் சில இலட்சம் முஸ்லிம்கள் கொல்லப்படக் காரணமாக உள்நாட்டு யுத்தத்திற்கு தீர்வை ஏற்படுத்தி நிரந்தர சமாதானத்தைக் கொண்டு வந்த வகையில் இவ் உடன்படிக்கை வெற்றிகரமான ஒன்றாகும்.

**3. ஒஸ்லோ உடன்படிக்கை** - Osslo Agreement

மத்திய கிழக்கில் பல தசாப்தங்களாக தீராத இனப் பகையாக தொடரும் இஸ்ரேல், பலஸ்தீனப் பிரச்சினையைத் தணித்து நீக்கவென உருவானதே இவ் உடன்படிக்கை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இஸ்ரேலிய-பலஸ்தீனத் தலைவர்களால் 1993இல் அமெரிக்க ஜனாதிபதியின் உத்தியோகப்பூர்வ அலுவலகமான வெள்ளை மாளிகையில் வைத்து கைச்சாத்தானது.

மத்திய கிழக்கில் சமாதான யுகத்தை இது தோற்றுவிக்கும் என உலகமே புகழ்ந்ததுடன் உரியவர்களுக்கு 1994இல் உலக சமாதானத்திற்கான நோபல் விருதும் கொடுக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டனர்.

ஹமாஸ் இயக்கம் இவ் உடன்படிக்கையை முற்றாக நிராகரித்ததுடன் இஸ்ரேலுக்கெதிரான தொடர் ஆயுதப் போராட்டத்தை இன்றுவரை முன்னெடுத்து வருகிறது.

இஸ்ரேலிலும் யூதத் தீவிர வலதுசாரிகள் இதனைக் கடுமையாக எதிர்த்ததுடன், உடன்பாட்டை ஏற்படுத்திய பிரதமர் யிற்சாக் ரபீனையும் சுட்டுக் கொன்றனர். அங்கு ஆட்சி மாற்றங்கள், ஆட்சிக் கலைப்புகள் சில தடவை இடம்பெறுவதற்குக்கூட இச் சமாதான உடன்படிக்கை ஏதுவாகியுள்ளது.

நோர்வே நாடு இவர்களை 1990 முதல் தனது நாட்டில் பேச வைத்தது. சமாதான அனுசரணையாளர் பாத்திரத்தை திறம்பட வகித்தது. மூன்றாண்டு முயற்சிகள் 1993 செப்ரெம்பரில் கனிந்து பழமாகியது.

ஒஸ்லோ உடன்படிக்கையின் மூலம் தீராப்பகையாளிகளான இஸ்ரேலும், பலஸ்தீனமும் ஒருவரை ஒருவர் அங்கீகரித்தனர்.
அதாவது பலஸ்தீனர்கள் இஸ்ரேல் என்று ஒரு நாடு இருப்பதனை அப்போது தான் முதன் முதலாக ஏற்றுக் கொண்டனர். அதேபோல் இஸ்ரேலும் பலஸ்தீன விடுதலை இயக்கத்தை விடுதலைக்காகப் போராடும் இயக்கமென முதற்தடவையாக ஒப்புக் கொண்டது.

அதுவரை பலஸ்தீன விடுதலை இயக்கத்தைப் பயங்கரவாத இயக்கமாகவே இஸ்ரேல் அழைத்து வந்தது.

இவ் உடன்படிக்கையின் வாயிலாக மேற்குக்கரை, காசா, ஜெரிக்கோ ஆகிய இடங்களின் சில பகுதிகளில் இருந்து இஸ்ரேலியப் படைகள் விலகின. அத்துடன் யூதக் குடியிருப்புகளில் கணிசமானவற்றை விலக்கின. பலஸ்தீனர்களின் தாயகத்தின் சில பகுதிகளான அவை காலஞ்சென்ற யஸீர் அரபாத் தலைமையிலான பலஸ்தீன அதிகார சபையிடம் கையளிக்கப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலஸ்தீன ஜனாதிபதி, பலஸ்தீன பாராளுமன்றம் ஆகியவற்றுக்கு தேர்தல்கள் நடத்தப்பட்டன.

நிலப்பரப்புக்கள் எதுவுமற்ற ஓர் அரசாங்கமாக, ஆனால் உலக நாடுகளால் தூதரகம் வழங்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட பலஸ்தீன அரசாங்கம் முன்னர் டுனிஸியாவில் இயங்கி வந்தமை ஈண்டு குறிப்பிடத்தக்கது.

இப்போது நிலப்பரப்புக்களுடன் கூடிய அரசாங்கமாக இயங்க ஒஸ்லோ உடன்படிக்கை வழிவகுத்தது.

சமாதானம் குறித்த உன்னத உடன்படிக்கையென ஊடகங்களால் ஆரவாரமாக வரவேற்கப்பட்ட இது தனது முதன்மை நோக்கத்தை அடைவதற்காக தொடர் போராட்டங்களைக் கடந்த 12 வருடங்களாக நடத்த வேண்டியுள்ளது.

**4. ஒட்டாவா உடன்படிக்கை** - (Ottawa Agreement)

உலகெங்கும் நிலக்கண்ணி வெடிகளைத் தடைசெய்யும் நோக்குடன் கனடாவின் தலைநகர் ஒட்டாவாவில் வைத்து 1997இல் கையெழுத்திடப்பட்டதே இது. 133 நாடுகள் கையெழுத்திட்டன. கைச்சாத்தான இடத்தின் பெயரைக் கொண்டு அழைக்கப்படுகிறது. 1999 மார்ச் 1 முதல் நடைமுறைக்கு இடப்பட்டுள்ளது. மிதிவெடிகளின் பாவனை, உற்பத்தி, சேகரித்து வைத்தல், கைமாற்றம் செய்தல் ஆகியவற்றைத் தடைசெய்யும் அதேவேளை முற்றாக ஒழித்து விடுவதற்கும் சட்டம் அமுல் செய்யப்பட்டுள்ளது.

உலக நாடுகளில் குறிப்பாக யுத்தப் பிரதேசங்களில் பயன்படுத்தப்படும் நிலக்கண்ணிவெடி என்ற ஆயுதம் சர்வதேச ஒப்பந்தம் ஒன்றின் மூலம் தடை செய்யப்படுவது வரலாற்றில் இதுவே முதல்முறை.

யுத்தத்தில் சம்பந்தமற்ற அப்பாவிப் பொதுமக்களின் பாதிப்புக்களைத் தவிர்க்க வேண்டுமென்ற பலமுனை சர்வதேச அழுத்தங்களின் விளைவே இவ் உடன்பாடு.

**5. வை நதி உடன்படிக்கை** - Y River Agreement

இஸ்ரேல்-பலஸ்தீனப் பிரச்சனைக்கு 1993இல் உருவான ஒஸ்லோ உடன் படிக்கையின் பின்னரான கொந்தளிப்பு நிலைகளைத்தணிக்கவென இடைக்கால ஏற்பாடாக 1998இல் அமெரிக்காவில் வைத்துக் கையெழுத்தானதே இது.
அமெரிக்காவின் வை நதிக்கரையோரம் உருவான இவ் உடன்படிக்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நிலத்துக்காகச் சமாதானம் **(Land for Peace Deal)** என்பதை தொனிப்பொருளாகக் கொண்டுள்ளது. அதாவது பலஸ்தீனர்களின் நிலத்தை அவர்களுக்கு வழங்கி இஸ்ரேலிய யூதர்களுக்குப் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் நோக்கிலானது. ஆயினும இன வன்முறைகள் தொடர்கதையாகவே உள்ளது.

**6. சிம்லா உடன்படிக்கை**

இந்தியாவினாலும், பாகிஸ்தானினாலும் சர்ச்சைக்குரியதான காஷ்மீர் தொடர்பாக 1972இல் ஏற்பட்ட உடன்படிக்கையே இது.

அப்போதைய இந்திய பாகிஸ்தானிய தலைவர்களான இந்திரா காந்தி, சுல்பிகார் அலி பூட்டோ ஆகிய தலைவர்கள் இதில் ஒப்பமிட்டனர்.

**7. சர்வதேச சிறுவர் சாசனம்** - CRC

சிறுவர்களது உரிமைகளும், நலன்களும் மேம்படுத்தப்பட வேண்டுமென்பதற்காக 1989நவெம்பர் 20இல் 139 நாடுகள் ஒன்று கூடி ஜெனீவாவில் கைச்சாத்திட்ட ஓர் ஒப்பந்தமே இது.

இச்சாசனத்தில் சிறுவர்களது உரிமைகள் தொடர்பாக 42 உறுப்புரைகள் கூறப்பட்டுள்ளன.

இலங்கை 1990இல் உடன்பாடு தெரிவித்துக் கையெழுத்திட்டது. சிறுவர் துஷ்பிரயோகங்களைத் தடுத்து சிறுவர் நலன் பேணப்படல் வேண்டுமென்ற கருத்து உலகின் தீவிர கவனத்தை ஈர்த்து வருகிறது.

**8. காம்ப் - டேவிட் உடன்படிக்கை**

இஸ்ரேலுடன் தீவிர பகைமை பாராட்டி வந்த எகிப்து 1978இல் இஸ்ரேலுடன் செய்து கொண்ட உடன்படிக்கையே இது.

எகிப்து அரபுநாடுகளுடன் இணைந்து இஸ்ரேல் என்ற நாட்டை பூமிப் பந்திலிருந்து அழிப்பேன் எனச் சபதமிட்டு 1967இல் யுத்தத்தை நடத்தியது. 06 நாட்கள் மட்டுமே நீடித்த இவ் யுத்தத்தில் எகிப்து தனது சினாய் தீபகற்பப் பகுதியை இழந்தது. அதை மீளப் பெறுவதற்காக இஸ்ரேலுடன் செய்து கொண்டதே இச் சமாதான உடன்படிக்கை.

இதற்காக 1979இல் உலக சமாதானத்திற்கான நோபல் பரிசை உரிய தரப்பினர் பெற்றனர். காம்ப் டேவிட் உடன்படிக்கையை விரும்பாத எகிப்திய தீவிரவாதிகளால் எகிப்திய ஜனாதிபதி அன்வர்சதாத் படுகொலை செய்யப்பட்டார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**9. பெரிய வெள்ளி உடன்படிக்கை - Good Friday Agreement**

வட அயர்லாந்துப் பிரச்சனைக்குத் தீர்வாக 1998ஏப்பிரலில் கிறிஸ்தவர்களின் புனித நாளான பெரிய வெள்ளி தினத்தில் கையெழுத்தானது.

ஐரிஷ் விடுதலை இராணுவத்தை மெல்ல மெல்லச் சமாதானத்தின் பக்கம் கொண்டு வந்தது. 2005 ஒகஸ்டில் IRA எனப்படும் IRA விடுதலை இராணுவம் ஆயுதப் போராட்டத்தை கைவிட்டதாக அறிவித்தது.



*கடினமான வேலையைச் செய்வதில் மகிழ்ச்சியைக் காணும் மனநிலை கொண்ட மனிதர்களே எப்போதும் வெற்றி வீரர்கள் ஆவார்கள்.*

*- மில்லரன்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உலகம் கண்ட போர்கள்

**1. சிலுவைப் போர் (கி.பி.1095-1291)**

முஸ்லிம்களின் கட்டுப்பாட்டின் கீழிருந்த புனிதப் பிரதேசங்களைக் கைப்பற்ற மேற்கத்தைய கிறிஸ்தவர்களால் தொடரப்பட்ட யுத்தம் இது. எட்டுப் பாரிய சிலுவை யுத்தங்களும் தோல்வியில் முடிந்தன. 1291ஆம் ஆண்டு இறுதியாக நடைபெற்ற சிலுவை யுத்தத்தாலும் புனிதப் பிரதேசங்களைக் கைப்பற்ற முடியாமல் போனது.

**2. அமெரிக்க சுதந்திர யுத்தம் (1775-1784)**

பிரித்தானியாவின் காலனித்துவத்தின் கீழிருந்த அமெரிக்கா தன்னைச் சுதந்திர நாடாகப் பிரகடனப்படுத்த நடைபெற்றது. ஜோர்ஜ் வாசிங்டனின் தலைமையிலான இப்போரின் மூலம் அமெரிக்கா விடுதலை பெற்று 1784யூலை 04இல் சுதந்திரப்பிரகடனம் செய்தது. ஜோர்ஜ் வாசிங்டன் அமெரிக்காவின் முதலாவது ஜனாதிபதியாகப் பதவி வகித்தார். அவரது பெயரிலேயே வாசிங்டன் நகரம் நிர்வாகத் தலைநகராக உள்ளது.

**3. பிரெஞ்சுப் புரட்சியும் நெப்போலியன் யுத்தமும் (1792-1815)**

முதலாம் நெப்போலியனின் கீழ் ஏனைய ஐரோப்பிய வல்லரசுகளுடன் நடைபெற்ற யுத்தம் இது. இதில் பிரிட்டன், பிரஷ்யா (தற்போதைய ஜேர்மனி), ரஷ்யா, ஒஸ்ரிய ஆகிய நாடுகள் பங்கேற்றன.

பிரான்சியச் சக்கரவர்த்தியான நெப்போலியன் பிரித்தானிய பிரஷ்யப் படைகளினால் தோற்கடிக்கப்பட்டு ஆபிரிக்காவிலுள்ள எல்பா தீவில் சிறை வைக்கப்பட்டான். பின்னர் நெப்போலியன் அங்கிருந்து தப்பியோடி மீண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படை திரட்டிப் போரிட்டான். பெல்ஜியத்தின் வோட்டலூ எனுமிடத்தில் அவனது படைகள் தோற்கடிக்கப்பட்டுக் கைது செய்யப்பட்டான். பிரித்தானியப் படைகளின் தளபதியாக இருந்த வெலிங்டன் பிரபுவினாலேயே நெப்போலியனது படைகள் தோற்கடிக்கப்பட்டன. நெப்போலியன் சென்ற் கெலனா தீவிற் சிறை வைக்கப்பட்டு அங்கேயே இறந்து போனான். நெப்போலியன் பிரான்சில் உருவாக்கிய நீதிக் கோவை இன்றும் அந்நாட்டின் சட்டவாக்கத்திற் பெரும் பங்கை வகித்து அவனது பெயரைக் கூறிக்கொண்டு இருக்கின்றது.

**4. அமெரிக்க சிவில் யுத்தம் (1861-1865)**

அமெரிக்க சமஷ்டி அரசுக்கும் தெற்கேயுள்ள 11 தெற்கு மாநிலங்களுக்கு மிடையே நடைபெற்ற போர் இது. பின்னர் வடக்கு-தெற்கு என்று அமெரிக்கா பிளவுபட்டது. பின்னர் வடக்குப் பகுதியால் தெற்குப் பகுதி வெல்லப்பட்டு ஒன்றிணைக்கப்பட்டது.

**5. முதலாம் உலகப்போர் (1914-1918)**

ஒஸ்ரியாவின் இளவரசர் ஆர்ச் டியூக் பேர்டினன்ட் யூகோஸ்லாவியாவின் சரஜேவா நகரில் வைத்து 1914 யூலை 28ஆம் திகதி படுகொலை செய்யப்பட்டார். இதுவே முதலாம் உலகப் போர் மூளக் காரணமாகியது. பிரான்ஸ், பிரிட்டன், ரஷ்யா, அமெரிக்கா ஆகிய நேசநாடுகள் ஒன்றிணைந்து ஓரணியிற் போரிட்டன. ஜேர்மனி, ஒஸ்திரியா, ஹங்கேரி, துருக்கி ஆகிய நாடுகள் இன்னொரு அணியிலுமாகப் போரிட்டன.

முடிவில் முதலாவதாகக் கூறப்பட்ட அணியே போரில் வெற்றி பெற்றது. முதலாம் உலகப்போர் 1918 நவெம்பர் 11ஆம் திகதியன்று முடிவுக்கு வந்தது.

**6. ஸ்பானிய சிவில் யுத்தம் (1936-1939)**

பாஸிஸ இத்தாலி, நாஸிஸ ஜேர்மனி ஆகியவற்றின் ஆதரவுடன் குடியரசுவாத அரசுக்கு எதிராக நடத்திய இராணுவப் புரட்சியே இது. ஜெனரல் பிரான்சிங்கோ பிராங்கோ தலைமையிலான தேசிய வாதப்படை இறுதியில் வென்றது.

**7, இரண்டாம் உலகப்போர் (1939-1945)**

ஜேர்மனிய தேசியவாதி அடால்ப் ஹிட்லரால் ஆரம்பிக்கப்பட்ட போர் இது. ஜேர்மனி, ஜப்பான், இத்தாலி ஆகியன அச்சு அணியில் நின்றன. இவற்றுடன் இங்கிலாந்து, பிரான்ஸ், அமெரிக்கா, ரஷ்யா ஆகியன நேச அணியிலும் நின்று


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடத்திய பெரும் வரலாற்றுப் போர் இது. ஜேர்மனிய ஹிட்லரின் படைகள் 1939 செப்ரெம்பர் 01இல் போலந்தைக் கைப்பற்றியதுடன் இரண்டாம் உலகப்போர் ஆரம்பமானதாகக் கூறப்படுகின்றது.

1889இல் பிறந்த ஹிட்லர்1933இல் ஜேர்மனியின் அரசைப் பொறுப்பேற்றான். 1938இல் ஒஸ்திரியா, செக்கோசெலவாக்கியா ஆகிய நாடுகளை ஜேர்மனியப் படைகள் கைப் பற்றின. 1939இல் போலந்தினைக் கைப்பற்றியபோது அதனை எதிர்த்து ரஷ்யப் படைகள் போரிட்டன.

1940 ஏப்பிரலில் நோர்வே, டென்மார்க், பிரான்ஸ் ஆகிய நாடுகளை ஜேர்மன் படைகள் கைப்பற்றின.

ஐரோப்பாவின் அத்திலாந்திக் மற்றும் ஸ்கன்டிநேவியன் துறைமுகங்களெல்லாம் ஜேர்மனியின் கைக்கு வந்தது.

1940இல் பிரித்தானியாவை ஜேர்மனி மிக மூர்க்கமாகத் தாக்கிய போதும் கைப்பற்ற முடியவில்லை. 1941இல் ஜேர்மன் படைகள் ரஷ்யாவுக்குள் நுழைந்தது. ஆரம்பத்தில் ரஷ்யப் படைகள் தோற்றுப் பின்வாங்கின.

ஆயினும் அப்போதைய சோவியத் ஒன்றிய அதிபர் ஜோசப் ஸ்ராலினால் ரஷ்யப் படைகள் மீளவும் ஒன்று திரட்டப்பட்டது. ஜேர்மனியின் படைகளுக்கு எதிராக வெற்றிகரமாகத் தாக்குதல் நடத்தப்பட்டது. ஜேர்மனியப் படைகள் பெரும் சேதத்துடன் பின்வாங்கி ஓடின.

1944 யூன் 06இல் பிரிட்டிஸ் துருப்புக்கள் பிரான்ஸின் நோர்மண்டிக் கடற்கரையில் தரையிறங்கி Operation Day எனும் பெயரில் பெரும் தாக்குதலை அச்சுப்படைகளுக் கெதிராகத் தொடுத்தன. நேச நாட்டுப் படைகள் மாபெரும் வெற்றி பெற்றன. பிரான்ஸ் முழுவதும் விடுவிக்கப்பட்டது. நேசநாட்டுப் படைகளின் வெற்றிகள் ஏறுமுகத்திற் சென்றன.

1945 ஏப்பிரலில் நேச நாட்டுப் படைகள் ஜேர்மனியைக் கைப்பற்றின. சர்வாதிகாரி ஹிட்லர் தான் உயிருடன் பிடிபடுவதிலிருந்து தப்புவதற்காக 1945 ஏப்பிரல் 30இல் பேர்லின் நகர நிலவறை ஒன்றில் வைத்துத் தற்கொலை செய்வதாகக் கூறப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1945 ஆகஸ்ட் 06, 09 ஆகிய தினங்களில் முறையே ஜப்பானிய ஹிரோசிமா, நாகசாகி நகர்கள் மீது அமெரிக்கா அணுக்குண்டுகளைப் போட்டது. இதை யடுத்து ஜப்பான் சரணடைவதாக அறிவித்தது. ஜப்பானின் சரணாகதியுடன் 1945 ஆகஸ்ட் 15இல் இரண்டாம் உலகப் போர் முடிவுக்கு வந்தது.

**8. இந்திய - பாகிஸ்தானியப் போர்**

காஷ்மீர் தொடர்பாக இந்தியாவும், பாகிஸ்தானும் 1947 இல் போர் புரிந்தன. காஷ்மீரின் மூன்றில் ஒரு பகுதி பாகிஸ்தான் வசமானது. 1949 ஜனவரியில் ஐக்கிய நாடுகள் சபையின் மத்தியஸ்தத்துடன் யுத்த நிறுத்தம் ஏற்பட்டது. 1965இலும் காஷ்மீர் தொடர்பாக இந்தியாவும் பாகிஸ்தானும் போர் புரிந்தன.

1971 டிசெம்பரில் இந்தியா பாகிஸ்தானுடன் போர்புரிந்து கிழக்குப் பாகிஸ்தானைப் பங்களாதேஷ் எனும் தனி நாடாக்கியது.

1999 யூலை மாதத்தில் பாகிஸ்தான் ஆதரவுபெற்ற காஷ்மீர் முஸ்லிம் போராளிக் குழுக்கள், காஷ்மீரின் கார்கில், ட்ராஸ், பட்டாலிக் போன்ற பிரதேசங்களில் ஊடுருவின. இதனால் பின்னணியில் நின்ற பாகிஸ்தான் படைகளுடன் இந்தியப் படைகள் போரிட்டு மேற்கூறிய பகுதிகளைக் கைப்பற்றின. பாகிஸ்தான் ஆதரவு பெற்ற குழுக்கள் இந்திய நிலப்பரப்பில் வன்முறைகளில் ஈடுபடுவதை இந்தியா "எல்லை தாண்டிய பயங்கரவாதம்" என்ற சொல்லின் மூலம் அழைத்து வருகிறது.

**9. கொரிய யுத்தம் (1950-1953)**

கம்யூனிச வடகொரியா, தென்கொரியாவை ஆக்கிரமித்தபோது போர் மூண்டது. அமெரிக்கா தலைமையிலான 16 நாடுகளின் அணி வடகொரியாவுக்கு எதிராகத் தாக்குதலை நடத்தின. பல்லாயிரம் அமெரிக்கப்படையினர் கொல்லப்பட்டும், காணாமலும் போயினர். சில இலட்சம் வட, தென்கொரியப் படை வீரர்கள் கொல்லப்பட்டனர். ஈற்றில் வட கொரியா தோற்கடிக்கப்பட யுத்தம் முடிவுக்கு வந்தது.

**10. மத்திய கிழக்குப் போர்**

இஸ்ரேல் அரபு நாடுகளுடன் 03 முறை யுத்தங்களை நடத்தியுள்ளது. 1948இல் இஸ்ரேல் எனும் நாடு உருவாக்கப்பட்டவுடன் ஜோர்தான், சிரியா, எகிப்து தலைமையிலான அரபு நாடுகள் இஸ்ரேலை அழிக்கப் போர் தொடுத்தன. ஆனால் இஸ்ரேல் அமெரிக்காவினது பலத்த ஆயுத, தளபாட ஆதரவுகளுடன் அரபு நாடுகளைத் தோற்கடித்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1967இல் மீண்டும் எகிப்து, சிரியா, ஜோர்தான் ஆகிய நாடுகளின் தலைமையில் அரபு நாடுகள் இஸ்ரேல் மீது போர் தொடுத்தன.

ஆறுநாள் நடந்த இப்போரிலும் இஸ்ரேல் அமெரிக்காவின் ஆதரவுடன் போராடி பெரு வெற்றியீட்டியது. எகிப்திய சினாய் தீபகற்பம், காஸா நுழைவாயில், ஜோர்தானின் மேற்குக் கரை, கிழக்கு ஜெருஸலேம், சிரியாவின் கோலான் குன்றுகள் ஆகியவற்றை இஸ்ரேல் கைப்பற்றியது.

அதாவது இஸ்ரேல் தனது நாட்டைப்போல இன்னுமொரு பரப்பு நிலப் பகுதியைக் கைப்பற்றி, பாதுகாப்பு ரீதியாகத் தன்னை ஸ்திரப்படுத்திக்கொண்டது.

1973இல் சிரியா, எகிப்து என்பன இஸ்ரேலுடன் போரிட்டும், தாம் இழந்த நிலப்பகுதிகளைக் கைப்பற்ற முடியவில்லை. இதனாலேயே எகிப்து தனது சினாய் தீபகற்பப் பகுதியை மீளப் பெறுவதற்காக 1978இல் இஸ்ரேலுடன் காம்ப்டேவிட் உடன்படிக்கைக்குச் செல்ல நேரிட்டது.

மத்திய கிழக்கில் அமெரிக்காவின் செல்லப் பிள்ளையாக உள்ள இஸ்ரேல் முழு அரபு நாடுகளுக்கும் ஐந்து தசாப்தங்களுக்கு மேலாகச் சவாலாக உள்ளது.

**11. யொம் கிப்பூர் (1973)**

யொம் கிப்பூர் யூத விடுமுறை தினத்தன்று எகிப்தும், சிரியாவும் இணைந்து இஸ்ரேலுக்கு எதிராக நடத்திய வியப்புக்குரிய தாக்குதல் இது. சினாய் பாலைவனத்துக்குள் எகிப்து நுழைந்தது. நவெம்பர் 11 ஆம் திகதி இஸ்ரேல் எகிப்துடன் போர் நிறுத்தம் செய்தது.

**12. ஈரான்-ஈராக் யுத்தம் (1980-1988)**

1980ஆம் ஆண்டு ஈரானை ஈராக் ஆக்கிரமித்தபோது வெடித்த யுத்தம். இந்த யுத்தத்தினால் இரு தரப்பிலுமாக ஒரு மில்லியன் பேர் உயிரிழந்தனர். 1988ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் ஐ.நா.அநுசரணையுடன் யுத்த நிறுத்தம் ஏற்பட்டது.

**13. போக்லாந்து யுத்தம் (1982)**

பிரிட்டனுக்குச் சொந்தமான போக்லாந்து தீவுகள், ஆர்ஜென்டீனாவால் ஆக்கிரமிக்கப் பட்டதையடுத்து உருவான யுத்தம் இது. 70 தினங்கள் நடைபெற்ற சண்டையை அடுத்து ஆர்ஜென்டீனா பிரிட்டனிடம் தோல்வியடைந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**14. ஆப்கானிஸ்தான் யுத்தம் (1978-1989)**

ஆப்கானிஸ்தானிலிருந்த கம்யூனிஸ சார்பு அரசாங்கத்தைப் பாதுகாப்பதற்காக 1978இல் சோவியத் படைகளை எதிர்த்து முஜாகுதீன் போராளிகள் கடும் யுத்தம் புரிந்தனர். முஜாகுதீன் போராளிகளுக்கு அமெரிக்கா, பாகிஸ்தான் ஊடாக அதி நவீன இராணுவ உபகரணங்களைத் தாரளமாகக் கொடுத்தது.

சோவியத் அமெரிக்கப் பனிப்போரின் தாக்கமே இந்த யுத்தம், முஜாகுதீன் போராளிக் குழுக்களின் தாக்குதலை எதிர்கொள்ள முடியாமல் ஒரு இலட்சத்துப் பதினையாயிரம் சோவியத் படைகள் தோல்வியைத் தழுவிப் பின்வாங்கின. சோவியத் யூனியனுக்கு வரலாற்றிற் கிடைத்த மிக மோசமான தோல்வியாக இது கூறப்படுகின்றது.

**15. வளைகுடாப்போர்**

ஈராக் 1990ஓகஸ்டில் குவைத்தை ஆக்கிரமித்தது. குவைத்தைத் தனது 25ஆவது மாகாணமெனவும் அறிவித்துக் கொண்டது. ஈராக் குவைத்தை விடுவிக்க வேண்டுமென ஐ.நா.சபை தீர்மானம் நிறைவேற்றியது.

பெரும்பாலான உலக நாடுகள் ஈராக்கின் இச் செயலைக் கண்டித்தன. குவைத்தை விடுவிக்க மறுத்தது.


ஈற்றில் அமெரிக்கா தலைமையில் 28 நாடுகள் நேசநாட்டுப் படைகளாகத் திரண்டு ஈராக்குக்கு எதிராகப் பாலைவனப் புயல் நடவடிக்கை (Operation Desert Storm) எனும் பெயரில் தாக்குதலைத் தொடுத்தன. 1991 ஜனவரியில் நடைபெற்ற இப்போரே வளைகுடாப்போர் (Gulf War) எனவும் அழைக்கப்படுகின்றது. ஈராக்கியப் படைகள் தோற்கடிக்கப்பட்டுக் குவைத் விடுவிக்கப்பட வளைகுடாப் போர் முடிவுக்கு வந்தது.

**16. பொஸ்னியா யுத்தம் (1992-1995)**

யூகோஸ்லாவியாவின் குடியரசுகளில் ஒன்றாக இருந்த பொஸ்னியா கெர்ச்சகோவினா வில் 1992ஆம ஆண்டில் முஸ்லீம், சேர்பிய, குரோஷிய இனத்தவர்களிடையே நடைபெற்ற உள்நாட்டுப்போர் இது. ஆயிரக்கணக்கான முஸ்லீம்கள் சேர்பியர்களால் படுகொலை செய்யப்பட்டனர். ஆயிரக்கணக்கான பொஸ்னிய முஸ்லீம் பெண்கள் சேர்பியர்களால் இனச் சுத்திகரிப்பு (Ethnic Cleaning) என்ற பெயரில் பாலியல் வல்லுறவுக்கு ஆளாக்கப்பட்டனர். “டேய்ட்டன்” உடன்படிக்கை வெற்றிகரமாக நடைமுறைக்கு வந்ததைத் தொடர்ந்து இந்த யுத்தம் முடிவுக்கு வந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





**17. கொசோவா யுத்தம் (1998-1999)**

யூகோஸ்லாவியாவின் மாநிலங்களுள் ஒன்றாகிய கொசோவா தொடர்பாக நடைபெற்ற யுத்தம் இது. இம் மாநிலத்தில் 90%மானோர் அல்பேனியர்கள். மிகுதி 10% சேர்பியர்கள். அல்பேனியர்கள் யூகோஸ்லாவிய அரசினால் பல துறைகளிலும் திட்டமிட்டுப் புறக்கணிக்கப்பட்டனர். அல்பேனிய மக்கள் கொசோவோ விடுதலை இராணுவம் (KLA) என்ற அமைப்பின் மூலமாக ஆயுதப் போராட்டம் நடத்தினார்கள்.

இப்போராட்டத்தை யூகோஸ்லாவிய அரசு கொடூரமாக ஒடுக்கி அல்பேனிய மக்களைப் படுகொலை செய்ய ஆரம்பித்தது. இதனைத் தடுத்து நிறுத்த அமெரிக்கா தலைமையிலான நேட்டோ அமைப்பு நாடுகள் 11 வார காலமாக யூகோஸ்லாவியாவின் மீது கடுமையான விமானத் தாக்குதல்களைத் தொடுத்தன. ஈற்றில் யூகோஸ்லாவியப் படைகள் 1999 யூனில் கொசோவோவிலிருந்து பின்வாங்கின.

*வாழ்க்கை என்பது இயற்கை அளிக்கும் செல்வம் ஆனால்*
*நல்ல வாழ்க்கை என்பது ஞானம் அளிக்கும் செல்வம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச நிறுவனங்கள்

**1. சிறுவர் பாதுகாப்பு நிதியம் - Save the Children Fund - UK**

பிரித்தானியாவைத் தலைமையகமாகக் கொண்டு இயங்கும் சிறுவர் பாதுகாப்பு நிதியம் 1924ஆம் ஆண்டு "எக்லான்ரின் ஜெப்" எனும் பெண்மணியால் ஸ்தாபிக்கப்பட்டது. சிறுவர் நலன்களை உலகெங்கும் பேணப் பாடுபட்டுவரும் இந்நிறுவனம் அரச சார்பற்ற நிறுவனமாகும். இலங்கை உட்பட்ட உலகின் பல நாடுகளிலும் இந்நிறுவனம் கிளைப் பணியகங்களைத் திறந்து இயங்கி வருகின்றது.

**2. றெட்பார்ணா - REDDBARNA**

வளர்முக நாடுகளின் சிறுவர்களின் நல்வாழ்வுக்காகப் பணியாற்றும் ஸ்தாபனம் இது.

றெட்பார்ணா 1945 ஆம் ஆண்டில் நோர்வே நாட்டில் நிறுவப்பட்டது. Redd Barna எனும் சொல் நோர்வீஜிய மொழியிற் சிறுவர் பாதுகாப்பு எனும் கருத்தைத் தருகின்றது. இந்நிறுவனம் ஒரு அரசசார்பற்ற நிறுவனம் (N.G.O.) ஆகும்.

**3. கிறீன் பீஸ்**

சர்வதேச ரீதியில் சுற்றுச் சூழல் பாதுகாப்புக்காகவும் மேம்பாட்டுக்காகவும் பாடுபட்டு வரும் ஓர் அரச சார்பற்ற நிறுவனம் இது. பசுமைப் பாதுகாப்பை நோக்கமாகக் கொண்டு இது இயங்கி வருகின்றது.

சுற்றுச்சூழற் பாதுகாப்புக்குப் பங்கம் விளைவிக்கும் அணு ஆயுதப் பரிசோதனைகள, பாதுகாப்பற்ற முறையில் அணுக் கழிவுகளை வெளியகற்றுதல், தொழிற்சாலைக் கழிவுகளைப் பிழையான முறையில் வெளியகற்றுதல், திட்டமிடப்படாத முறையில் காடுகளைப் பாரதூரமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழித்தல் ஆகிய இன்னோரன்ன செயல்கள் நிகழும் போதெல்லாம் கிறீன் பீஸ் இயக்கம் மிகவும் வன்மையாகக் கண்டித்து வருகின்றது.

பூமிக்குப் பாதுகாப்பாக உள்ள ஓசோன் படையில் துவாரம் ஏற்படுவதைத் தவிர்க்க CFC (குளோரோ ஃபுளோரோ காபன்) க்குப் பதிலாக கைரோ குளோரோ ஃபுளோரோ காபன், புளோபேன் பியூற்றேன் என்ற வாயுக்களைக் குளிர்சாதனப் பெட்டி உற்பத்திகளின் போது உபயோகிக்கும்படி கிறீன் பீஸ் பிரச்சாரம் செய்து வருகின்றது.

**4. G15 அல்லது குழு 15**

உலக வர்த்தக ஏற்பாடுகளில் அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளது பொருளாதாரத் தேவைகள் ஒரே குரலில் ஒலிப்பதை நோக்கமாகக் கொண்டு நிறுவப்பட்ட அமைப்பே G15.

1989ஆம் ஆண்டு யூகோஸ்லாவிய தலைநகர் "பெல்கிரேட்" நகரில் வைத்து இந்த அமைப்பு அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது.

அல்ஜீரியா, ஆர்ஜென்ரீனா, பிரேசில், சிலி, எகிப்து, இந்தியா, இந்தோனேசியா, ஜமேய்க்கா, கென்யா, மலேசியா, மெக்ஸிக்கோ, நைஜீரியா, பெரு, செனகல், வெனிசுவேலா, சிம்பாவே, இலங்கை ஆகிய 17 நாடுகள் தற்போது இவ் அமைப்பில் அங்கம் வகிக்கின்றது.

1998 மே மாதம் எகிப்துத் தலைநகர் கெய்ரோவில் நடைபெற்ற 08ஆவது உச்சி மகாநாட்டில் வைத்து இலங்கை 17ஆவது நாடாக உறுப்புரிமை பெற்றமை குறிப்பிடத்தக்கது.

**5. வட அத்திலாந்திக் ஒப்பந்த நிறுவனம் - Nato**

பெல்ஜியம் தலைநகர் பிரசெல்ஸ் நகரில் வைத்து 1949 ஏப்ரல் 04இல் கைச்சாத்திடப்பட்ட பாதுகாப்பு, இராணுவ நலன்சார்ந்த உடன்படிக்கையே வட அத்திலாந்திக் ஒப்பந்த நிறுவனமாகும்.

அமெரிக்காவைத் தலைமை நாடாகக் கொண்டு ஜனநாயக நாடுகள் பல கம்யூனிஸ்ட் நாடு தனது அச்சுறுத்தலில் இருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ளும் நோக்குடன் நிறுவனமயப்பட்டு ஒன்று சேர்ந்தமை குறிப்பிடத் தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**6. இஸ்லாமிய மகாநாட்டு அமைப்பு - OIC**

இஸ்லாமிய நாடுகள் ஒன்று சேர்ந்து 1969ஆம் ஆண்டு மொரோக்கோவில் வைத்து அங்குரார்ப்பணம் செய்யப்பட்ட அமைப்பு இது. தற்போது 54நாடுகள் அங்கத்துவம் வகிக்கின்றன.

**7. அணிசேரா இயக்கம் - Nam Non Aligned Movement**

உலகம் ஒரு காலத்தில் நேட்டோ அணி, வார்ச்சோ அணி என இரு கூறாகப் பிரிவுபட்டிருந்தபோது, இவ் அணிகளிலிருந்து தமது தனித்துத்தைத் தற்காத்துக்கொள்ள விரும்பிய நாடுகள் ஒன்று கூடி உருவாக்கிய இயக்கமே அணிசேரா இயக்கம்.

1961ஆம் ஆண்டு யூகோஸ்லாவியாவின் தலைநகர் பெல்கிரேட்டில் வைத்து இவ் அமைப்பு அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. இவ் அமைப்பின் முதலாவது தலைவராக யூகோஸ்லாவியாவின் அன்றைய அதிபர் மார்ஷல் ரிற்ரோ பதவி வகித்தார்.

2003தரவுகளின்படி அணிசேரா இயக்கத்தில் 116 நாடுகள் அங்கம் வகிக்கின்றன.

**8. சார்க் - SAARC**

தெற்காசியப் பிராந்திய நாடுகளுக்கான ஒத்துழைப்புக் குழு எனப்படும் இவ் அமைப்பு அதன் ஆங்கிலப் பெயரின் முதல் எழுத்துக்களாற் சுருக்கமாக சார்க் (SAARC) என அழைக்கப்படுகின்றது.

1985 டிசெம்பர் 12 ஆம் திகதியன்று பங்களாதேஷ் தலைநகரான டாக்கா நகரில் வைத்து இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், மாலைதீவு, நேபாளம், பூட்டான் ஆகிய 07 நாடுகளின் தலைவர்களும் ஒன்று கூடிச் சார்க் அமைப்பை அங்குரார்ப்பணம் செய்து வைத்தனர்.

சார்க் அமைப்பின் தலைமைச் செயலகம் நேபாளத்தின் தலைமைப் பட்டணமாகிய காத்மண்ட் நகரில் அமைந்துள்ளது.
தற்போதைய உலக சனத்தொகையில் 20% இனர் சார்க் நாடுகளில் வசித்து வருவது குறிப்பிடத்தக்கது.

**9. பொதுநலவாய நாடுகள் ஒன்றியம் (கொமன் வெல்த்-Common Wealth)**

பிரித்தானியாவின் குடியேற்ற ஆட்சியிலிருந்து விடுதலையடைந்த நாடுகள் பிரித்தானியாவைத் தலைமை நாடாகக் கொண்டு ஏற்படுத்திய சிநேகபூர்வ அமைப்பு இது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்போது 53 நாடுகள் அங்கம் வகிக்கும் கொமன்வெல்த் அமைப்பின் ஆயுட்காலத் தலைவியாகப் பிரித்தானிய மகாராணி கடமையாற்றுகின்றார். ஆகவே தற்போது தலைவியாக எலிசபெத் மகாராணி உள்ளார்.

1945 ஏப்ரல் மாதம் இலண்டனில் வைத்துக் கனடா, அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, தென் ஆபிரிக்கா, நியூ பவுண்லாந்து ஆகிய நாடுகள் ஒன்று கூடிக் கொமன்வெல்த் அமைப்பைத் தோற்றுவித்தன.

இலங்கை இவ் அமைப்பில் 1948 ஆம் ஆண்டு உறுப்புரிமை பெற்றுக்கொண்டது.

ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 1ஆம் திகதி பொதுநலவாய நாடுகள் தினமாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது.

கொமன்வெல்த் அமைப்பின் அரசுத் தலைவர்கள் பங்கேற்கும் உச்சிமகாநாடு 02 ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறுகின்றது.

## 10. G.8 (Group 8) குழு 8

இன்றைய உலகின் முன்னணி 08 தொழில் வள நாடுகளும் ஒன்று கூடித் தமது வணிக, கைத்தொழில் நலன்களை மேம்படுத்திக் கொள்ளவென உருவாக்கிய அமைப்பே இது.

இவ் அமைப்பில் பிரான்ஸ், பிரித்தானியா, ஜேர்மனி, இத்தாலி, ரஷ்யா ஆகிய 5 ஐரோப்பிய நாடுகளும் கனடா, ஐக்கிய அமெரிக்கா ஆகிய இரு வட அமெரிக்க நாடுகளும் ஆசியாவில் ஜப்பானும் அங்கம் வகிக்கின்றன.

முன்னர் G.7 ஆகவிருந்த இவ் அமைப்பு 1997 யூனில் ரஷ்யாவும் உறுப்பு நாடாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டதன் மூலம் G.8 ஆகியது.
இவ் அமைப்பின் தலைவர்கள் பங்கேற்கும் உச்சி மகாநாடு வருடாந்தம் நடைபெற்று வருகின்றது.

## 11. சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் - ICRC

சுவிற்சலாந்து நாட்டைச் சேர்ந்த சேர். ஹென்றி டுனான்ற் என்பவரால் இவ் அமைப்பு 1863ஆம் ஆண்டு ஜெனீவா நகரில் ஆரம்பிக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகின் பல பாகங்களிலும் இடம்பெற்றுவரும் இயற்கை, செயற்கை அழிவுகளுக்கும், சேதங்களுக்கும் இவ் அமைப்பு உன்னதமான மனிதநேய உதவிகளை வழங்கி வருகின்றது.

இஸ்லாமிய நாடுகளில் சிலுவைச் சின்னத்திற்குப் பதிலாகப் பிறைச் சின்னம் உபயோகிக்கப்பட்டு வருகின்றது.

தலைமையகம் சுவிற்சலாந்து, ஜெனீவா.

## 12. Asem (Asia Europe Meeting)

ஆசிய, ஐரோப்பிய நாடுகள் 25 இணைந்து உருவாக்கிய இவ் அமைப்பு 1998 ஏப்ரல் 04 இலண்டனில் தனது முதலாவது மகாநாட்டை நடத்தியது.

அடுத்த மகாநாடு 2000ஆம் ஆண்டில் தென்கொரியாவில் நடைபெற உள்ளது.

## 13. நப்தா - Nafta

'வட அமெரிக்க சுதந்திர வணிக உடன்படிக்கை' எனப்படும் இவ் அமைப்பு அதன் ஆங்கிலப் பெயரின் முதல் எழுத்துக்களால் சுருக்கமாக Nafta என அழைக்கப்படும்.

ஐக்கிய அமெரிக்கா, கனடா, மெக்சிக்கோ ஆகிய நாடுகளால் எதிர்காலத்திற் கட்டற்ற பொருளாதாரச் சந்தை ஒன்றை ஏற்படுத்தும் நோக்குடன் 1993ஆம் ஆண்டிற் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையே இது.

ஐரோப்பிய நாடுகள் இணைந்து எதிர்காலத்தில் மேற்கொள்ள உள்ள கட்டற்ற பொருளாதாரச் சந்தைக்குப் போட்டியாகவே இவ் அமைப்பு தோற்றுவிக்கப் பட்டமை குறிப்பிடத்தக்கது.

## 14. இன்ரர் போல் - Inter Pol

இன்ரர் போல் (International Police Commission) என்பது பன்னாட்டுப் பொலிஸ் கமிஷன் ஆகும். 1923இல் இவ் அமைப்பு உருவாக்கப்பட்டது.

பன்னாட்டுப் பொலிஸ் துறைக்கிடையே ஒற்றுமையை ஏற்படுத்துவதே இதன் பிரதான நோக்கமாகும். தலைமையகம் - பிரான்ஸ், பரிஸ்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**15. லயன்ஸ் கழகம் - Lions Club**

1919ஆம் ஆண்டு மெல்வின் ஜோன்ஸ் எனும் அமெரிக்கரால் ஒரு சிறிய குழுவுடன் ஆரம்பிக்கப்பட்டதுதான் லயன்ஸ் கழகம். இலங்கை உட்பட உலகின் பல்வேறு நாடுகளில் இது சமூக சேவைப் பணிகளை ஆற்றி வருகின்றது.

இன்றைய உலகில் மிகப்பெரிய சமூகசேவை நிறுவனமாக இது உள்ளது குறிப்பிடத்தக்கது.

ஐ.நா.சபையால் அங்கீகரிக்கப்பட்ட ஒரே நிறுவனம்.

**16. சர்வதேச மன்னிப்புச் சபை**

இவ் அமைப்பு 1961இல் லண்டனில் உருவாக்கப்பட்டது. பிரபல வழக்கறிஞர் பீற்றர் பென்சன் உருவாக்கினார்.

ஆரம்பத்தில் மன்னிப்புக்கான விண்ணப்பம் 1961 என்ற பெயரே இதற்கு வழங்கப்பட்டது. பின்னரே சர்வதேச மன்னிப்புச் சபை எனப் பெயரிடப்பட்டது. 1977இல் உலக சமாதானத்திற்கான நோபல் விருதும் கிடைத்தது.

நெல்சன் மண்டெலா உட்பட உலகெங்கும் பல்லாயிரம் கைதிகளின் விடுதலைக்கு சர்வதேச மன்னிப்புச் சபை வழிவகுத்தது.

**17. ஐக்கிய நாடுகள் - United Nations Organization - UNO**

உலக நாடுகள் அனைத்தினதும் பொது மன்றமாக இயங்கும் ஓர் அமைப்பே ஐக்கிய நாடுகள் சபை.

இரண்டாம் உலகப் போர் நடைபெற்ற சமயம் உலகப் போர் ஒன்று மீள ஆரம்பபிக்கப்படாமல் இருப்பதற்காகப் பொது அமைப்பு ஒன்று தோற்றுவிக்கப்பட வேண்டுமென்ற கருத்து உலகத் தலைவர்கள் மத்தியில் தோன்றியது.

அதன் செயல் வடிவமாகவே ஐக்கிய நாடுகள் சபை தோற்றுவிக்கப்பட்டது. இதற்கு முன்னோடியாக 1945 ஏப்ரல் 25ஆம் திகதி ஐக்கிய நாடுகள் சாசனம் தோன்றியது.

1945.06.26 இல் அமெரிக்காவின் சான்பிரான்ஸ்சிஸ்கோ நகரில் வைத்து உலகத் தலைவர்களால் ஐக்கிய நாடுகள் சாசனம் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இதில் 30 நாடுகள் பங்கேற்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1945 ஒக்ரோபர் 24இல் நியூயோர்க் நகரில் வைத்து உலகின் முன்னணி சக்திமிக்க நாடுகளின் தலைவர்கள் பலரால் ஐக்கிய நாடுகள் சபை கோலாகலமாக அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

ஐக்கிய நாடுகள் என்ற தொடரை முதன்முதலில் F.W.D.ருஸ்வெல்ட் (அமெரிக்க ஜனாதிபதி) தான் உபயோகித்தார்.

வருடாந்தம் ஒக்ரோபர் மாதம் 24ஆம் திகதி ஐக்கிய நாடுகள் சபைத் தினமாக உலகெங்கும் கொண்டாடப்படுகின்றது.

1946ல் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் சபையின் முதலாவது பொதுக் கூட்டத்தில் 51 நாடுகள் மட்டுமே பங்கேற்றன.

ஐ.நா.வின் வருடாந்த அமர்வுகள் செப்ரெம்பர், டிசம்பர் காலப்பகுதியில் நடைபெறுகின்றது.

தலைமைக் காரியாலயம் நியூயோர்க் நகரில் அமைந்துள்ளது. இக் கட்டடத்திற்காக "டிராக் பெல்லர் பிரபு" நிலம் வழங்கி இருந்தார்.

ஐ.நா.தலைமைக்காரியாலயக் கட்டடத்துக்கான அடிக்கல் 1949 ஒக்ரோபர் 24 இல் நாட்டப்பட்டது.

1951ஆம் ஆண்டு கட்டி முடிக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டது.

உலக சமாதானத்தைக் குறிக்கும் "ஒலிவ்" மரக்கிளை ஐ.நா.சபையின் சின்னத்தில் இடம்பெற்றுள்ளது.

ஐ.நா.சபை பின்வரும் 06 பிரதான அமைப்புக்களைக் கொண்டு இயங்கி வருகின்றது.

1. பொதுச்சபை
2. பாதுகாப்புச்சபை
3. பொருளாதாரச் சபை
4. சர்வதேச நீதிமன்றம்
5. செயலாளர் நாயகத்தின் பணிமனை
6. தர்மகர்த்தா சபை

தற்போது 194 நாடுகள் அங்கம் வகிக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**1. பொதுச்சபை**

அங்கத்துவ நாடுகள் 194 உம் இதில் அங்கம் வகிக்கின்றன. இச்சபைதான் ஐ.நா.சபையின் விவாத மேடையாகத் திகழ்கின்றது. புதிய நாடு ஒன்றிணைந்து சேர்ப்பதாயின் பொதுச்சபையில் இரண்டில் மூன்று பங்கு நாடுகளின் ஆதரவு அவசியம் தேவை.

பொதுச் சபையின் முதலாவது அமர்வு 1946 யூன் 10இல் நடைபெற்றது. அமர்வுகளின் போது 21 துணைத் தலைவர்கள் தெரிவு செய்யப்படுகின்றனர்.

சித்திரவதைக்கு எதிரான தடைச் சட்டத்தைப் பொதுச் சபை 1984 டிசம்பர் 10 இல் வெளியிட்டது.

ஐ. நா. பொதுச்சபை தனது அவசர கூட்டத்தை முதன்முதலாக 1959இல் சுயெஸ் கால்வாய் பிரச்சினைக்காகக் கூட்டியது.

**2. பாதுகாப்புச் சபை**

ஐ. நா. சபையில் மிகச் சக்திவாய்ந்த அமைப்பு இதுவாகும். உலக சமாதானத்தையும், உலகளாவிய பாதுகாப்பையும் பேணுவது பாதுகாப்புச் சபையின் பொறுப்பாகும்.

ஆரம்பத்திற் பாதுகாப்புச் சபையில் 11 நாடுகளே உறுப்புரிமை பெற்றிருந்தன. 1965ஆம் ஆண்டில் இவ் எண்ணிக்கை 15 ஆக உயர்த்தப்பட்டு, இன்றுவரையும் அவ்வாறே இருந்து வருகின்றது. இதில் 5 நாடுகள் நிரந்தர அங்கத்துவ நாடுகளாகவும் 10 நாடுகள் தற்காலிக அங்கத்துவ நாடுகளாகவும் உள்ளன.

பாதுகாப்புச் சபையில் ஐக்கிய அமெரிக்கா, சீனா, பிரான்ஸ், பிரித்தானியா, ரஷ்யா ஆகிய 5 நாடுகளுமே நிரந்தர அங்கத்துவ நாடுகளாக உள்ளன.
இந்த நாடுகளுக்கும் பாதுகாப்புச் சபையில் எடுக்கப்படும் தீர்மானம் தொடர்பில் வீட்டோ (VETO) எனப்படும் "வெட்டுவாக்கு" அதிகாரம் உள்ளது.

நிரந்தர அங்கத்துவ நாடொன்று தீர்மானமொன்றின் மீது வெட்டுவாக்கைப் பிரயோகிக்குமாயின் அத்தீர்மானம் செல்லுபடியற்றதாகிவிடும்.

அதாவது 14 நாடுகள் ஒரு தீர்மானத்திற்கு ஆதரவாகவும் ஒரு நிரந்தர அங்கத்துவ நாடு தீர்மானத்துக்கு எதிராகவும் வாக்களிக்கப்படுமானால் அத் தீர்மானம் செல்லுபடியற்ற தாகிவிடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பாரம்பரியம் பல சந்தர்ப்பங்களிலும் வளர்முக நாடுகளாற் பெரிதும் விமர்சிக்கப்பட்டு வருவதுடன் பாதுகாப்புச் சபையில் தமக்கு நிரந்தர அங்கத்துவம் வழங்கக் கோரியும் வருகின்றது.

பாதுகாப்புச் சபையின் தற்காலிக அங்கத்துவ நாடுகள் 10உம் பொதுச்சபையில் இரண்டில் மூன்று பெரும்பான்மையுடன் 02 ஆண்டுகளுக்கு மட்டுமே தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

**3.பொருளாதார சமூக சபை**

பொருளாதார, சமூக, பண்பாட்டு, மனிதாபிமானப் பிரச்சினைகள் குறித்து ஆராய்ந்து பொதுச் சபைக்குத் தகவல் தரும் அமைப்பு இது. பொதுச் சபையின் இரண்டில் மூன்று பங்கு உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படும் 54 உறுப்பினர்களைக் கொண்டு இயங்குகின்றது.

**4. சர்வதேச நீதிமன்றம்**

சர்வதேச சட்டப் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்கு ஏற்பட்ட இவ் அமைப்பின் விதி முறைகளுக்கு ஐ.நா. உறுப்பினர் நாடுகள் கட்டுப்பட்டவையாக உள்ளன. 15 நீதிபதிகளைக் கொண்டுள்ள சர்வதேச நீதிமன்றுக்கான நீதிபதி பொதுச் சபையாலும் பாதுகாப்புச் சபையாலும் தேர்ந்தெடுக்கப்படுவது வழக்கம்.

சர்வதேச நீதிமன்றம் "நெதர்லாந்து" நாட்டின் "த ஹேக்" நகரத்தில் இயங்கி வருகின்றது.

**5.செயலாளர் நாயகத்தின் பணிமனை**

ஐ.நா.பணிமனையின் தலைமைப் பொறுப்பைச் செயலாளர் நாயகமே வகிக்கின்றார். இவரது பதவிக்காலம் 5 வருடங்கள். சென்ற 1996 டிசெம்பரில் கானா நாட்டின் இராஜ தந்திரியும், பழுத்த ஐ.நா.அதிகாரியுமான "கொபி அனான்" அவர்கள் செயலாளர் நாயகமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர் 07ஆவது செயலாளர் நாயகம்.

எமது ஆசியாவில் "மியன்மார் (பர்மா)" நாட்டைச் சேர்ந்த "ஊதாண்ட்" ஒருவரே இப்பதவியை வகித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

**6. தர்மகர்த்தா சபை**

குடியேற்ற ஆட்சியிலிருந்து நாடுகளைச் சுதந்திரத்திற்கும் சுயாட்சிக்கும் தயார் செய்வதில் இச்சபை ஈடுபடுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஐ.நா. வின் துணை நிறுவனங்கள்**

**1. சர்வதேச தொழிலாளர் நிறுவனம் - ILO**

இந் நிறுவனம் 1919இல் அமைக்கப்பட்டது. பின்னர் ஐ.நா.வினுள் சேர்த்துக் கொள்ளப்பட்டது. தலைமையகம் – ஜெனீவா. (சுவிற்சர்லாந்து)

**2. சர்வதேச அணுசக்தி முகவரகம் - IAEA**

அமைதிப் பணிக்கு அணுசக்தியைப் பயன்படுத்துவதை ஊக்குவிப்பதில் இந்நிறுவனம் ஈடுபடுகின்றது. 1957இல் அமைக்கப்பட்ட இந் நிறுவனம் உலக சமூகத்தின் ஆக்கப் பணிக்கு மட்டுமே அணுச்சக்தி பயன்படுத்தப்பட அனுமதிக்க வேண்டுமெனக் குரல் கொடுத்து வருகின்றது.

சர்வதேச அணுசக்தி முகவரகத்தின் தலைமையகம் ஒஸ்ரியாவின் தலைநகர் வியன்னாவில் அமைந்துள்ளது.

**3.உணவு விவசாய நிறுவனம் - FAO**

உலகளாவிய ரீதியில் உணவு முகாமைத்துவ நடவடிக்கைகளை இந்நிறுவனம் மேற்கொள்கின்றது. உலக உணவு நெருக்கடி குறித்து காலத்திற்குக் காலம் பல சர்வதேச கருத்தரங்குகளை நடாத்தி வருகின்றது.

1945ஆம் ஆண்டு நிறுவப்பட்ட உணவு விவசாய நிறுவனத்தின் தலைமையகம் ரோம் நகரில் அமைந்துள்ளது.

**4. ஐ.நா.கல்வி விஞ்ஞான பண்பாட்டு நிறுவனம்**
**யுனேஸ்கோ-Unesco**

1946ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட இந்த நிறுவனம் கல்வி, விஞ்ஞான, பண்பாட்டு நடவடிக்கைகளுக்கு உலகளாவிய ரீதியில் பங்களிப்புச் செய்து வருகின்றது.
யுனெஸ்கோ கூரியர் எனும் பொது அறிவுத் தகவல்களை உள்ளடக்கிய பருவ இதழைப் பல மொழிகளில் வெளியிட்டு வருகின்றது. தலைமையகம் – பரிஸ் (பிரான்ஸ்)

**5. உலக சுகாதார நிறுவனம் - WHO**

1948இல் நிறுவப்பட்டது. ஐ.நா.வினால் மேற்கொள்ளப்படும் உலகளாவிய சுகாதார நல மேம்பாட்டு நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாக இருக்கின்றது. தலைமையகம் – ஜெனீவா (சுவிற்சலாந்து).

**6.அபிவிருத்திக்கும் புனரமைப்புக்குமான சர்வதேச வங்கி அல்லது உலக வங்கி - IBRD**

1945ஆம் ஆண்டில் நிறுவப்பட்டு 1946ஆம் ஆண்டுமுதல், உலக வங்கி செயற்பட்டு வருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சர்வதேச ரீதியாக நாடுகளின் பொருளாதார நடவடிக்கைகளுக்கு ஆலோசனை வழங்குவதில் இவ்வங்கி முதன்மை வகிக்கின்றது. தலைமையகம் - வாஷிங்டன் (அமெரிக்கா).

**7. சர்வதேச நாணய நிதியம் - IMF**

1947இல் நிறுவப்பட்டது. தலைமையகம் - வாஷிங்டன் (அமெரிக்கா). உலக வங்கியும் சர்வதேச நாணய நிதியமும் "பிறிட்டன் வூட்ஸ்" உடன்படிக்கையின் மூலம் ஏற்படுத்தப்பட்டன. அதனால் இவ் இரண்டு நிறுவனங்களையும் பிறிட்டன் வூட்ஸ் இரட்டையர்கள் என்று சிறப்புப் பெயர் கொண்டு அழைக்கின்றனர்.

**8. உலக வானிலை அமைப்பு - WMO**

சர்வதேச ரீதியான காலநிலை பருவகால அவதானிப்புத் தொடர்பான நடவடிக்கைகளை இந்நிறுவனம் மேற்கொண்டு வருகின்றது.

1950ஆம ஆண்டில் நிறுவப்பட்ட உலக வானிலை அமைப்பின் தலைமையகம் சுவிற்சர்லாந்து நாட்டின் ஜெனீவா நகரில் அமையப் பெற்றுள்ளது.

**9.அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள்**
**உயர்ஸ்தானிகராலயம் - UNHCR**

1950ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட இந்நிறுவனம் சுவிற்சலாந்து நாட்டின் ஜெனீவா நகரில் தலைமையகத்தைக் கொண்டுள்ளது. உலகளாவிய ரீதியில் மனிதாபிமானப் பணிகளை மேற்கொண்டு வருகின்றது. இயற்கை, செயற்கை அனர்த்தங்கள் உள்நாட்டுப் போர் ஆகியவற்றினால் ஏற்படும் இடர்களுக்கு உதவியளித்து வருகின்றது.

அகதிகள் நிவாரணத்திற்குச் சிறந்த பணியாற்றியதற்காக UNHCR க்கு 1981இல் உலக சமாதானத்திற்கான நோபல் விருது வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

**10. உலக வர்த்தக நிலையம் - WTO**

கற் (Gatt) எனப்பட்ட வியாபாரம் வரி தொடர்பிலான பொது உடன்படிகை எனும் அமைப்பு 01.01.95 முதல் உலக வர்த்தக நிலையம் எனப் பெயர் மாற்றம் பெற்றுள்ளது. தலைமையகம் - ஜெனீவா (சுவிற்சர்லாந்து).

**11. ஐ.நா.குழந்தைகள் நிதியம் - Unicef (யுனிசெப்)**

1946இல் நிறுவப்பட்டது. குழந்தைகளின் நலன்களைச் சர்வதேச ரீதியாகக் கவனித்து வரும் அமைப்பு இது. தலைமையகம் - நியூயோர்க் (அமெரிக்கா).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# உலக விருதுகள்

**1. நோபல் விருது**

சுவீடன் தேசத்து விஞ்ஞானியான "அல்பிரட் நோபல்" டைனமைற் எறும் சேர்வையைக் கண்டுபிடித்து பெருஞ்செல்வம் சேர்த்தார். தனது சொத்துக்களிற் கணிசமான ஒரு பங்கை வங்கியில் வைப்பில் இட்டு அதன்மூலம் பெறப்படும் வட்டித் தொகையிலிருந்து ஆண்டுதோறும் உலக சமாதானம், மருத்துவம் அல்லது உடற் கூற்றியல், இலக்கியம், இரசாயனவியல் அல்லது வேதியியல், பௌதிகவியல் அல்லது இயற்பியல் ஆகிய துறைகளில் சிறந்து விளங்குவோருக்கு விருது வழங்கப்பட வேண்டுமென உயில் எழுதி வைத்துவிட்டு 1896இல் காலமானார்.

1901 ஆம் ஆண்டிலிருந்து "ரோயல் சுவீடிஷ் அக்கடமி" எனும் நிறுவனம் மேற்குறித்த துறைகளிற் சிறந்து விளங்குவோருக்குப் பரிசு வழங்கி வருகின்றது.

1969ஆம் ஆண்டிலிருந்து சுவீடன் நாட்டு "ரிக்ஸ்" வங்கியின் அன்பளிப்புத் தொகையைக் கொண்டு பொருளாதாரத் துறையில் சிறந்து விளங்குவோருக்கும் நோபல் பரிசு வழங்கப்பட்டு வருகின்றது.

ஒவ்வொரு வருடமும் ஒக்ரோபர் மாத நடுப்பகுதியில் ஒவ்வொரு துறைகளிலும் பரிசுக்கெனத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களது பெயர் விபரங்களைப் பரிசுக் குழு அறிவிக்கும்.

பரிசு அல்பிரெட் நோபல் மறைந்த தினமாகிய டிசெம்பர் 10ஆம் திகதியன்று சுவீடனில் வழங்க்ப்படுகின்றது.

இலக்கியத்திற்கான நோபல் பரிசு பின்வருமாறு 07 ஆண்டுகளில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. 1914, 1918, 1935, 1940, 1941, 1942, 1943.

நோபல் பரிசைப் பெற்ற முதல் தமிழர் - "சேர்.C.V.இராமன். நோபல் பரிசை ஆசியாவில் முதன்முதலாகப் பெற்றவர் - கவிஞர் இரவீந்திரநாத் தாகூர். தமது கீதாஞ்சலி எனும் கவிதை நூலுக்காக 1913இல் இலக்கியத்திற்கான நோபல் பரிசைப் பெற்றார். மிகக் குறைந்த வயதில் நோபல் விருது வென்றவர் லோரன்ஸ் பிராக்.

உலக அமைதிக்கான நோபல் விருதை அதிக தடவைகள் பெற்றுள்ள நாடு - ஐக்கிய அமெரிக்கா.

நோபல் விருதை முதல் வென்ற பெண் - மேரி கியூரி அம்மையார். இவர் 1903இல் பௌதிகத்திற்காகப் பரிசு பெற்றார்.

லின்ஸ் பௌலிஸ் என்பவர் 1954இல் இரசாயனவியலுக்கான நோபல் பரிசையும், 1962இல் உலக சமாதானத்திற்கான நோபல் பரிசையும் பெற்றுக்கொண்டார்.
1964ஆம் ஆண்டு இலக்கியத்திற்கான நோபல் பரிசை "ஜீன்பால் சார்ட்ரே" வாங்க மறுத்துவிட்டார்.

**2. ரமன் மச்சே சே விருது**

விமான விபத்து ஒன்றில் கொல்லப்பட்ட பிலிப்பைன்ஸ் அதிபர் ரமன் மச்சே சே அவர்களின் நினைவாக இவ்விருது 1957ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்டு வருகின்றது. சிறந்த அரசாங்கப் பணி, சமூக சேவை என 4 துறைகளில் சிறந்து விளங்குவோர் வருடாந்தம் இவ்விருதைப் பெறுவார்கள்.

இவ்விருது உலகில் குறிப்பிடத்தக்க மதிப்பு மிக்க விருதாகக் கருதப்படுகின்றது.

**3. புலிட்ஸர் விருது**

ஐக்கிய அமெரிக்காவில் ஆண்டு தோறும் பத்திரிகைத் தொழில், நாடகம், இலக்கியம் ஆகிய துறைகளில் உலகளாவிய ரீதியில் சிறந்து விளங்குபவர்களுக்கு ஆண்டு தோறும் இவ்விருது வழங்கப்படுகின்றது.

New York World எனும் பத்திரிகையின் ஆசிரியராகவிருந்து உன்னதமான பத்திரிகைப் பணியாற்றிய ஜோசப் புலிட்ஸர் என்பவரின் நினைவாகவே இப்பரிசு வழங்கப்பட்டு வருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**4. பால்கன் விருது**

1956இல் இத்தாலியப் பெண் தொழிலதிபர் ஒருவரால் இவ்விருது ஆரம்பிக்கப்பட்டது. சுவிற்சலாந்து நாட்டின் உயரிய விருது இது.

**5. காந்தி சமாதான விருது**

மகாத்மா காந்தியின் நினைவாக இந்திய அரசினால் 1995ஆம் ஆண்டு முதல் விருது வழங்கப்பட்டு வருகிறது. ஒரு கோடி ரூபா, பணம், பாராட்டுப் பத்திரம், கேடயம் என்பன விருதாக வழங்கப்படுகின்றது. இலங்கையின் சர்வோதய இயக்கத் தலைவர் கலாநிதி. ஆரியரத்ன அவர்களும் இவ்விருதை 1996ஆம் ஆண்டில் பெற்றுள்ளார்.

**6. புக்கர் விருது**

உலகின் சிறந்த இலக்கிய நூலுக்கான இவ்விருது 1968ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்டு வருகின்றன. இலக்கியத்திற்காக வழங்கப்படும் நோபல் பரிசுக்கு அடுத்தபடியாக உலகில் மிகவும் மதிப்புமிக்க விருதாக இதுவே கருதப்படுகின்றது. இங்கிலாந்தினால் வழங்கப்படுகின்றது.










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விண்வெளி அறிவியல்

◆ ஐக்கிய நாடுகள் சபை 1992ஆம் ஆண்டைச் சர்வதேச விண்வெளி ஆண்டெனப் பிரகடனம் செய்திருந்தது.

◆ ஐக்கிய அமெரிக்காவின் விண்வெளி ஆய்வு நிகழ்ச்சித் திட்டத்திற்குப் பொறுப்பாக உள்ள நிறுவனம் - நாஸா **(NASA) NASA-National Seronatics and Space Administration)**

◆ யூரி ககாரின் என்ற ரஷ்யர் 1961 ஏப்ரல் 12இல் 4.65 தொன் எடையுள்ள "வொஸ்டொக்" என்ற விண்கலத்தில் 89.34 நிமிடங்களில் பூமியை ஒரு முறை சுற்றி விட்டுத் திரும்பினார்.

இவரே விண்வெளிக்கு முதன் முதலாகச் சென்ற மனிதன் என்ற பெருமையைப் பெறுகின்றார்.

◆ விண்வெளிக்குச் சென்ற முதல் வீராங்கனை என்ற பெருமையை "வலென்ரீனா ரெரஸ்கோவ்" என்ற ரஷ்யப் பெண் பெறுகின்றார். இவர் 1963யூன் 16இல் "வொஸ்டொக் - 6 விண்கலத்தில் 02 நாட்கள் 22 மணித்தியாலயம் 42 நிமிடங்களில் 48 முறை பூமியைச் சுற்றினார்.

◆ 1969 யூலை 20இல் அமெரிக்காவினால் அனுப்பி வைக்கப்பட்ட அப்பலோ II எனும் விண்வெளி ஓடத்தில் "நீல் ஆம்ஸ்ரோங், எட்வின், அல்ட்றின், மைக்கல் கொலின்ஸ்" ஆகியோர் பயணம் செய்து சந்திரனை அடைந்தனர். "நீல் ஆம்ஸ்ரோங்" அப்பலோ விண்கலத்திலிருந்து இறங்கிச் சந்திரத் தரையில் கால் வைத்தார். இதன் மூலம் சந்திரனில் காலடி வைத்த முதலாவது மனிதன் என்ற பெருமையைப் பெறுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் சந்திரனில் காலடி வைத்தபோது "மனிதனுக்கு இது சிறு அடிதான். ஆனால் மனித குலத்திற்கு மாபெரும் பாய்ச்சல்" என இந்நிகழ்வை வர்ணித்தார்.

- விண்வெளியில் நடந்த முதல் வீரர் - அலெக்ஸ் A லியனோவ். ரஷ்யாவைச் சேர்ந்த இவர் 1965 மார்ச் 18 அன்று தமது வொஸ்டொக் - 2 விண்கலத்தில் இருந்து இறங்கி வெளியே நடந்தார்.

- விண்வெளியில் பயணித்த முதல் தம்பதியினர் என்ற பெருமையை அமெரிக்காவைச் சேர்ந்த மாக்லி, ஜேன்டேவிஸ் ஆகியோர் பெறுகின்றனர். 1992 செப்ரெம்பரில் இவர்கள் விண்வெளிக்குப் பயணித்தனர்.

- உலகின் முதலாவது விண் ஓடமான கொலம்பியா **(Columbia)** அமெரிக்காவால் 1981 ஏப்ரல் 12ஆம் திகதி விண்ணுக்கு வெற்றிகரமாக ஏவப்பட்டது.

- **Challenger Shuttle** இல் அமெரிக்காவின் முதல் வீராங்கனையான **Dr**.சாலிரைட் 1983 யூன் 18இல் பயணமானார்.

- 1983 ஒகஸ்ட் 30 இல் "சலஞ்சர்" **(challenger)** இல் அமெரிக்காவின் நீக்ரோ வீரர் "குயன் எஸ் பூநா போர்ட்" பயணமானார்.

- பூமியிலிருந்து இயக்கப்பட்டு சந்திரனில் இறங்கிய முதல் ஆளற்ற விண்வெளி ஓடம் "லூனா கோடி" இது 1970 நவம்பர் 17இல் பூமியிலிருந்து சென்றது.

- விண்வெளியைச் சுற்றி வந்த முதல் செயற்கைக் கோள் ரஷ்யாவின் "ஸ்புட்னிக்". இது 1957 ஒக்டோபர் 04 இல் ஏவப்பட்டது. எடை 83.6 கிலோகிராம்.

- "ஹேலீஸ்" எனும் வால்வெள்ளி 76 ஆண்டுகளுக்கு ஒரு முறையே பூமிக்கு அண்மையாக வானில் தோன்றுகின்றது. இறுதியாக 1986 ஆம் ஆண்டு ஹேலீஸ் வால் வெள்ளி தோன்றியது.

- "ஹெப்பொப்" எனும் வால் நட்சத்திரம் 1997 மார்ச் மாத நடுப்பகுதியில் இலங்கையின் வானில் தென்பட்டது. இவ்வால் நட்சத்திரம் 4200 வருடங்களுக்கு ஒரு முறைதான் பூமிக்கருகில் தோன்றுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

- அமெரிக்காவின் **Challenger Shuttle** எனும் விண்கலம் புறப்பட்ட சில நொடிகளிலேயே வெடித்துச் சிதறியது. 1986இல் நடைபெற்றது. இதில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கிறிஸ்டாக் ஆலிஃப்" என்ற பள்ளி ஆசிரியையான வீராங்கனை உட்பட ஏழு வீரர்கள் மாண்டனர்.

- 1989 மே மாதத்தில் வீனஸ் (Venus) கோளை ஆராய "மெகலன்" என்னும் விண்ணூர்தியை அமெரிக்காவின் Discovery Shuttle செலுத்தியது.

- 1990 ஒக்ரோபர் 09இல் சூரியனை ஆராய "யுலீசஸ்" என்ற விண்கலத்தை Discovery Shuttle மூலம் அமெரிக்கா செலுத்தியது.

- 1986 பெப்ரவரி 20 இல் உலகின் 03வது தலைமுறை விண்ணாய்வு ஓடமான "மிர்" (mir) ரஷ்யாவால் செலுத்தப்பட்டது. ஆசை என்பது ரஷ்யமொழியில் சமாதானம் என்ற கருத்தைத் தருகின்றது.

- விண்வெளிப் பயண விதிகளை வரையறுத்த முதல் அறிஞர் சேர்.ஐசாக் நியூட்டன் (1642 - 1727).

  இவரது இயற்கைத் தத்துவத்தின் கணிதக் கோட்பாடுகள் (Mathematical Principals of Natural Philosophy) என்பதே இதனை வரையறுத்தது.

- 11 ஐரோப்பிய நாடுகள் அங்கம் வகிக்கும் ESA (European Space Agency) தனது ஏரியான் (Ariane) ரொக்கெற் மூலம் 1989 ஒகஸ்ட் (33வது பயணத்தில்) "ஹிப்பார்க்ஸ் (Hipparcas) என்ற தொலைக்காட்சியை விண்ணுக்குச் செலுத்தியது.

  ESA இல் Rocket Launching Pad பிரெஞ்சு கயானாவில் உள்ள "கூரு" (Koru) இல் உள்ளது.

- பூமிக்கு அண்மையில் உள்ள கோள் - புதன்
  மிகக் குளிர்ச்சியான கோள் - புளூட்டோ
  மிக லேசான கோள் - புதன்
  மிகக் கனமான கோள் - வியாழன்
  மிக உஷ்ணமான கோள் - வெள்ளி அல்லது சுக்கிரன்
  சிவப்புக் கோள் எனப்படுவது - செவ்வாய்

- 1996 ஆம் ஆண்டின் முற்பகுதியில் பூமிக்கு அண்மையில் தோன்றிய வால் நட்சத்திரத்தின் பெயர் - கியாகுடாவே. இதனைக் கண்டறிந்த ஜப்பானியரின் பெயரே இதற்கு இடப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

◈ 1957 இல் விண்வெளிக்குச் சென்ற "லைகா" எனும் நாய் வெண்வெளிக்குச் சென்ற முதலாவது உயிரினம் என்ற பெருமையைப் பெறுகின்றது.

◈ ஞாயிற்றுத் தொகுதியின் மிகப்பெரிய கோளான வியாழன் கிரகத்தடன் 1994 ஏப்ரலில் "சூ மேக்கர் லெவி" - எனும் வால் வெள்ளி 21 துண்டங்களாக உடைந்து மோதியது. இருபதாம் நூற்றாண்டின் மிகப் பெரிய வால்வெள்ளி மோதலாக இது கூறப்படுகின்றது.

இவ் வால்வெள்ளியை சூ மேக்கர் தம்பதியினரும், அவர்களது உதவியாளரான லெவி என்பவரும் கண்டறிந்ததனால் அவர்களது பெயரே இதற்கு இடப்பட்டது.

அமெரிக்க சுதந்திர தினமான 04.07.1997 இல் செவ்வாய்க் கிரகத்தில் அமெரிக்காவின் விண்கலமான பாத்பைண்டர் (Path Pinder) வெற்றிகரமாகத் தரையிறங்கியது.

இவ்விண்கலத்திலிருந்து 06 சக்கர தன்னியக்க இயந்திர வண்டியான "சோஜோனர் றோவர்" செவ்வாய் தரையை தீவிரமாக ஆராய்ந்தது.

இவ் விண்கலம் செவ்வாய் தரையில் இறங்கிய நிகழ்வு உலக விண்வெளி அறிவியல் வரலாற்றில் குறிப்பிடத்தக்க ஒன்றாகக் கூறப்படுகின்றது.

◈ விண்வெளிக்குச் சென்ற முதல் பத்திரிகையாளர் - டொகியோ ஹிரா (ஜப்பான்) 1990 இல் விண்வெளி பயணமானார்.


◈ விண்வெளியில் முதன் முதல் உயிர் நீத்த வீரர் - விளாடி மிர்கமெசோடா (சோவியத் ரஷ்யா)

**பிறக்கின்றபோதே இறக்கின்ற தேதி இருக்கின்றதென்பது**
**மெய்தானே.**
**ஆசைகள் என்ன ஆணவம் என்ன உடம்பு என்பதும்**
**பொய்தானே.**
**பேதை மனிதனே கடமையை இன்றே செய்வதுதானே**
**ஆனந்தம்.**

**-கவிஞர் வைரமுத்து**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மருத்துவம்

- ◈ மருத்துவத்தின் தந்தை – கிப்போ கிறட்டீஸ்
- ◈ மனித உடலின் சாதாரண வெப்பநிலை பரனைற் 98.4 $^0$f, செல்சியஸ் 36.8$^0$C
- ◈ குருதியின் (இரத்தம்) வகைகள் – A, B, AB, O
- ◈ பொது வழங்கி குருதி வகை – O
- ◈ பொது வாங்கி குருதி வகை AB
- ◈ அறுவைச் சிகிச்சையின்போது உடல் விறைப்பதற்குப் பயன்படுத்தப் படுவது – ஈதர்
- ◈ காச நோய்க்குரிய (T.B.) தடுப்பு மருந்து – B.C.G.
- ◈ எலி கடிப்பதால் உண்டாகும் நோய் – பிளேக்

**மனித உடலில் ....**

மிக நீண்ட எலும்பு தொடை எலும்பு

உயிரற்ற கலங்களால் ஆக்கப்பட்ட பகுதி – நகம், மயிர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிகவும் வன்மையான பகுதி - பல் மிளிரி

மிகப் பெரிய உறுப்பு - கல்லீரல்

◈ மனித உமிழ்நீரிலுள்ள நொதியங்கள் - தயலின், அமிலேசு

◈ விற்றமின் (Vitamin) எனும் பெயரை அறிமுகம் செய்தவர் பங்விற்றமின்
விற்றமிமன் A குறைவால் ஏற்படும் நோய் - மாலைக்கண்
விற்றமின் B குறைவால் ஏற்படும் நோய் - பெரிபெரி
விற்றமின் C குறைவால் ஏற்படும் நோய் - ஸ்கேபி
விற்றமின் D குறைவால் ஏற்படும் நோய் - என்புருக்கி நோய்

◈ பித்தத்தைச் சுருக்கும் உறுப்பு - ஈரல்
பித்தக்கான் தடைப்படுவதால் உண்டாகும் நோய் - செங்கண்மாரி
இரும்புச் சத்துக் குறைவால் உண்டாகும் நோய் - குருதிச்சோகை

◈ பென்சிலின் எனும் மருந்து தயாரிக்கப்படும் தாவரம் - பென்சிலியம் எனப்படும் பங்கசுத் தாவரம்

பென்சிலின் கண்டுபிடித்தவர் ; அலெக்ஸாண்டர் பிளேமிங்.
இக் கண்டுபிடிப்பு 1928 இல் நடைபெற்றது.

◈ மனித உடலில் உள்ள நோயெதிர்ப்புச் சக்தியை அழிக்கும் தன்மை கொண்ட நோய் எய்ட்ஸ் **(AIDS)** என அழைக்கப்படுகின்றது.

HIV எனும் வைரஸ் தொற்றினால்தான் எய்ட்ஸ் நோய் மனிதர்களுக்கு ஏற்படுகின்றது. இந்நோய் ஒரு தொற்று. நோயல்ல. நோயாற் பீடிக்கப்பட்ட ஒருவருடன் ஏனையோர் எதுவித பயமும் இன்றி சகஜமாகப் பழகிக் கொள்ளலாம்.

நிணநீர்த் தொற்றுதல், இரத்தம்மூலம் தொற்றுதல் மூலமே எய்ட்ஸ் ஏனையோருக்குத் தொற்றிக் கொள்கின்றது.

இருபதாம் நூற்றாண்டில் மருத்துவ உலகிற்கு மாபெரும் சவால் விடுவதாக எய்ட்ஸ் விளங்குகிறது. காரணம் இந்நோய்த் தடுப்பிற்கென இன்று வரையும் மருந்து கண்டு பிடிக்கப்படாமையினால் ஆகும்.

உலகின் முதலாவது எய்ட்ஸ் நோயாளி 1981 ஆம் ஆண்டு பிரான்ஸ் நாட்டின் லூயி பாஸ்ரர் விஞ்ஞான ஆய்வு கூடத்தினால் கண்டறியப் பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் அதற்கு முன்பே பல காலமாக எய்ட்ஸ் நோய் இனங்காணப் படாத ஓர் ஆட்கொல்லி நோயாக மட்டுமே அறியப்பட்டது. எய்ட்ஸ் எனும் பெயரினையும் நோயை உண்டாக்கும் கிருமி வைரஸ் HIV எனவும் பெயரிட்டது அமெரிக்காவின் தேசிய புற்றுநோய் ஆய்வு நிலையமாகும். இந்நிகழ்வு 1984 இல் நடைபெற்றது.

AIDS - Acquired Immune Deficiency Syndrome

HIV - Human Immune Deficiency Virus

◈ உலகின் முதலாவது சோதனைக் குழாய்க் குழந்தை **(Test Tube Baby)** 1978 ஆம் ஆண்டில் இங்கிலாந்தில் பிறந்தது. இவ்வாறு பிறந்த பெண் குழந்தையின் பெயர் - லூயி பிரவுண். இப்பரிசோதனைக் குழாய்க் குழந்தையை உருவாக்கும் முயற்சியில் வெற்றி கண்ட இரு மருத்துவர்கள் - Dr. ஸ்ரெப்ரோ, Dr. எட்வேட்ஸ்.

◈ வெண் குழியங்களின் எண்ணிக்கை மனித இரத்தத்தில் அசாதாரணமாகப் பெருகுவதால் உண்டாகும் நோய் - இரத்தப் புற்றுநோய். இது இலுக்கேமியா எனவும் அழைக்கப்படுகின்றது.

◈ மலேரியா எனும் நோயை மனிதர்களுக்கு ஏற்படுத்தக் காரணமாக அமையும் பெண் நுளம்பு - அனோஃபிலிஸ்.

பிளாஸ்மோடியம் எனும் ஒட்டுயிரி மூலமாகவே அனோஃபிலிஸ் நுளம்பு மலேரியாவை உண்டாக்குகிறது.

◈ இங்கிலாந்தின் மருத்துவராக Dr. றிச்சாட் பெட்ரோ 1993ஆம் ஆண்டினிறுதியில் வியக்கத்தக்க மருத்துவ ஆய்வு முடிவொன்றை வெளியிட்டார். ஒருவர் அஸ்பிரின் மாத்திரையைத் தினசரி 75 மில்லிகிராம் வீதம் உட்கொண்டு வந்தால் மாரடைப்பு, இரத்த அமுத்தம் ஆகிய நோய்களை வராமல் தடுக்கலாம். என்பதே இவ் ஆய்வு முடிவு.

◈ உலகின் முதலாவது பெண் தாதி என்ற பெருமையை இத்தாலி நாட்டைச் சேர்ந்த ஃபுளோரன்ஸ் நைற்றிங்கேல் பெறுகின்றார்.

இவரை விளக்கேந்திய பெருமாட்டி எனவும் தற்காலத் தாதிச் சேவையின் தாய் எனவும் போற்றுகின்றனர்.

◈ உள மருத்துவத்தின் தந்தை - சிக்மன் ஃபுரொய்ட். இவரால் தான் மனித உளவியல் ஆராயப்பட்டு புதிய முன்னேற்றகரமான கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- முதிர்ச்சி அடைந்த மனிதனில் காணப்படும் என்பு 206.

- இருதய மாற்று சத்திர சிகிச்சை முதன் முதலில் வெற்றிகரமாகச் செய்தவர் Dr.கிறிஸ்ரியன் பேனாட் (தென் ஆபிரிக்கா) இந்நிகழ்வு 1967இல் நடைபெற்றது.

- மனித உடலில் உள்ள மிகப்பெரிய சுரப்பி - ஈரல்

- ஒரு மனிதனுக்குச் சயரோக நோய் அல்லது நீரிழிவு நோய் இருக்கின்றதா என்பதைக் கண்டறிய அவரின் சிறுநீருடன் சேர்த்துச் சூடாக்கப்படும் கரைசல்கள்; பீலிங்கின் கரைசல் அல்லது பெனடிக்கின் கரைசல்.

- மனிதர்களின் சராசரி நாடித்துடிப்பு நிமிடத்திற்கு 72 தடவைகள்.
  பெண்களின் நாடித்துடிப்பு நிமிடத்திற்கு 78 - 82 தடவைகள்.
  ஆண்களின் நாடித்துடிப்பு நிமிடத்திற்கு 70-72 தடவைகள்.

- மனிதர்களுக்குத் தடிமனை ஏற்படுத்துவது - றேனோ வைரஸ்

- மயிரிழை போன்ற ஊசி மனித உடலில் குறிப்பிட்ட சில இடங்களில் நரம்புகளில் குத்துவதன் மூலம் நோய்களுக்கு சிகிச்சையளிக்கும் பாரம்பரிய சீன மருத்துவ முறை அக்குபங்சர். (Acupuncture)
  இம்முறையில் நோயாளிக்கு மாத்திரைகள் எதுவுமே வழங்கப்படுவதில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

- மிகப் பழமை வாய்ந்த இந்திய மருத்துவமான "ஆயுர்வேத மருத்துவ முறையின் தந்தை" எனக் கருதப்படுபவர் - சாரகா.

  கி.மு.02ஆம் நூற்றாண்டில் ஊர் ஊராக நடந்து போய் ஆங்காங்கே வியாதிகளுக்கு மருத்துவம் பார்க்கும் நாடோடி ஒருவருக்கு மகனாகப் பிறந்தவர்தான் சாரகா.

- ஹோமியோபதி மருத்துவ முறையின் தந்தை - சாமுவேல் ஹனிமன். ஜேர்மனியில் 1755ஆம் ஆண்டு பிறந்த சாமுவேல் ஹனிமனால் உடற்கூற்றையும், உளவியலையும் ஆழமாக ஆராய்ந்து மனித உடல் வியாதிகளுக்குப் பரிகாரம்காணக் கண்டறியப்பட்ட சிகிச்சை முறைதான் ஹோமியோபதி.

- மஞ்சட் காமாலை நோயால் பாதிப்புறும் உடல் உறுப்பு - கல்லீரல்

- மனிதர்கள் தடுமாறாமல் நேராக நிற்கக் காரணமாக மூளையிலுள்ள கட்டுப்பாட்டுப் பகுதி - சிறுமூளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

◈ ஞாபக மறதியையும் புத்திக் கூர்மையையும் பாதிக்கும் நோய் அல்சைமர் (மறதி நோய்).

◈ மனிதனின் இருதயத் துடிப்பை அறியும் கருவியின் பெயர் - கார்டியோ கிராப்.

◈ எபோலா **(Ebola)** எனும் ஒரு வைரஸ் கிருமியின் தொற்றுதல் காரணமாக ஆபிரிக்காவின் கொங்கோ ஜனநாயக குடியரசிலும் (ஸைரே) அயல் நாடுகளிலும் ஏராளமான மக்கள் 1994, 1995ஆம் ஆண்டுகளில் இறந்தனர். எபோலா எனும் ஆற்றங்கரை அருகில் வாழ்ந்த மக்களையே இந்தநோய் முதன் முதலில் தாக்கியதனால் அந்நோய்க்கு எபோலா எனப் பெயரிட்டனர்.

இந்த நோய் கண்டவர்கள் உடலின் உள் உறுப்புக்கள் கரைந்து இரத்த வாந்தி எடுத்துப் பரிதாபமான முறையில் இறந்து போவார்கள்.

அத்துடன் எபோலா நோய் மிக இலகுவாக ஏனையவர்களுக்கும் தொற்றிவிடும் தன்மை வாய்ந்ததாக இருப்பதனால் எய்ட்ஸ் நோயை உண்டாக்கும் HIV வைரஸை விட மிகக் கடுமையாக உள்ளது. இந்நோய் இடைக்கிடை ஆபிரிக்காவைத் தாக்குகின்றது.


## நவீன மருத்துவக் கண்டுபிடிப்புக்கள்

| கண்டுபிடிப்பு | கண்டுபிடித்தவர் | நாடு | ஆண்டு |
|---|---|---|---|
| இரத்தச் சுற்றோட்டம் | வில்லியம் ஹார்வே | பிரித்தானியா | 1628 |
| புற்றுநோய் | ரோபேர்ட்வெய்னபெரி | அமெரிக்கா | 1682 |
| மயக்கமருந்து (குளோரோபோம்) | ஜேம்ஸ் சிம்ப்ஸன் | பிரித்தானியா | 1847 |
| கொலரா காசநோய்க்கிருமி | ரொபேட் கோச் | ஜேர்மனி | 1877 |
| கருத்தடை மாத்திரை | பின்க்ஸ் | அமெரிக்கா | 1955 |
| இருதய மின் அலைப்படம் | என்தோவன் | நெதர்லாந்து | 1906 |
| இனப்பெருக்கச் சிகிச்சை | மார்ட்டின் கிலிவ் | அமெரிக்கா | 1980 |
| நீரிழிவு நோய் | பேண்டிக் கெஸட் | கனடா | 1921 |
| சிறுநீரக நோய் | கோல்ப் | நெதர்லாந்து | 1944 |
| குஷ்டரோகக் கிருமிகள் | ஹான்சன் | நோர்வே | 1873 |
| போலியோ முக்கூட்டு வக்சின் | அல்பேட்சேபின் | அமெரிக்கா | 1854 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| திறந்த இருதய அறுவைச் சிகிச்சை | வோல்ரன் வில்லி ஹெல் | அமெரிக்கா | 1853 |
| உடற் கூற்றியல் | அல்பர்சர் வானஹாலர் | சுவிற்சலாந்து | 1757 |
| மனோதத்துவ ஆராய்ச்சி | சிக்மண்ட் பிராய்ட | அவுஸ்திரேலியா | 1895 |
| புகைப்பட சிகிச்சை | N.R.பின்சன் | டென்மார்க் | 1903 |
| வெறிநாய்க்கடி சிகிச்சை | லூயி பாஸ்ரர் | பிரான்ஸ் | 1860 |
| பாலுணர்வுச் சிகிச்சை | யூஜென்ஸ்டினாச் | அவுஸ்திரேலியா | 1910 |
| இரத்தம் உறைதல் | பால்எர்ல்ச் | ஜேர்மனி | 1884 |
| ஸ்ரெதஸ்கோப் | ரேனே லானக் | பிரான்ஸ் | 1819 |
| அம்மை குத்தும் முறை | எட்வேட் ஜென்னர் | அமெரிக்கா | 1796 |






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சினிமா

◈ உலகச் சினிமா வரலாற்றின் நூற்றாண்டு விழா நிகழ்வுகள் 1995ஆம் ஆண்டில் உலகெங்கும் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது.

சினிமாத் துறையின் பல்வேறுபட்ட கால அபிவிருத்திகளும், புரட்சிகரமான மாற்றங்களும் நினைவு கூரப்பட்டது.

◈ பிரான்ஸ் நாட்டில் வாழ்ந்த லூமியர் சகோதரர்கள் 1895ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் கையால் சுற்றி இயக்கும் புரொஜெக்ரர் ஒன்றின் மூலம் தமக்குச் சொந்தமான தொழிற்சாலையிலிருந்து தொழிலாளர்கள் வேலை முடிந்து புகையிரத நிலையத்திற்குச் செல்லும் காட்சியைப் படமாக்கித் திரையில் காட்டினார்கள்.

இது அக்கால உலகில் மிகவும் பரபரப்பாகப் பேசப்பட்டது.

◈ தொடக்க காலத்தில் மௌனப் படங்கள்/ ஊமைப்படங்கள் மட்டுமே வெளிவந்தன. காலப்போக்கில் விரைந்த விஞ்ஞான தொழில் நுட்ப வளர்ச்சி காரணமாக பேசும் படங்கள் வந்தன. இன்று மிக உன்னத தொழில் நுட்பங்கள் சினிமாத் துறையில் பிரயோகிக்கப்படுவதுடன் உலகின் அனைத்து மக்களையும் கவர்ந்து இழுக்கும் சக்தி வாய்ந்த ஊடகமாகவும் சினிமாவே விளங்குகின்றது.

◈ இலங்கையின் சினிமாத்துறை 1947இல் ஆரம்பிக்கப்பட்டது. இதன் பொன்விழா நிகழ்வுகள் 1997இல் கொண்டாடப்பட்டது.

முதலாவது மௌனப் படம் - ராஜகீய விக்கிரமய

முதலாவது பேசும் படம் - கடவுன பொறந்துவ (உடைந்த உறுதிமொழி)

இது 1956 இல் வெளியாகியது. S.M. நாயகம் எனும் தமிழர் இதனைத் தயாரித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

◈ முதலாவது தமிழ் படம் - சமுதாயம். இப்படத்தை ஹென்றி சந்திரவன்ஸ எனும் சிங்களவர். குறும்படமாகத் தயாரித்து இயக்கி வெளியிட்டார்.

◈ இலங்கையின் முதலாவது 35 mm (மில்லி மீற்றர்) தமிழ்ப் படம் தோட்டக்காரி இதை இயக்கியதுடன் கதாநாயகனாகவும் நடித்தவர் கிருஷ்ணகுமார்.

◈ இலங்கை அரசினால் தலைசிறந்த சினிமாக் கலைஞர்களுக்கு "சரசவிய" விருது வழங்கிக் கௌரவிக்கப்படுகிறது.

◈ இலங்கையில் எடுக்கப்பட்ட முதலாவது ஆங்கிலத் திரைப்படம் - பிறிட்ஜ் ஓவ் த றிவர் குவாய். (Bridge of the river Quai) இப் படம் 1959. ஆம் ஆண்டு அமெரிக்க ஹொலிவூட் கலைஞரான "டேவிட் லீன்" என்பவரால் எடுக்கப்பட்டது.

◈ இலங்கை திருகோணமலையைச் சேர்ந்த Dr.S.R. வேதநாயகம் (வேதா) என்பவரால் 1978 இல் எடுக்கப்பட்ட படம் - தென்றலும் புயலும்.

◈ முதன் முதலாக படங்களே இல்லாமல் வெளிவந்த திரைப்படம் அந்த நாள். நடிகர் திலகம் சிவாஜி கணேசன் நடித்த படம் இது.

◈ இந்தியத் திரைப் பாடல்களில் அதிக பாடல்களைக் கொண்டு வெளிவந்த படம் இந்திர சபா.மொத்தம் 71 பாடல்களைக் கொண்டது. இது ஹிந்தி மொழிப் படமாகும்.

◈ தென்னிந்திய தமிழ் நடிகரான சிவாஜி கணேசனுக்கு பிரான்ஸ் நாடு தனது கலைத்துறை உயர் விருதான செவாலியே விருதை 1995 ஆம் ஆண்டு வழங்கிக் கௌரவித்தது.

◈ கதையம்சம் சிரிப்பு நிறைந்த இன்றைய காட்டூன் (கேலிச் சித்திர) வரிசையில் முதலில் தயாரான படம் - fanta smagorie

◈ 1908 இல் பிரான்ஸ். பரிஸ் நகரில் இது முதன் முதலில் திரையிடப்பட்டது.

◈ "சிம்பனி" எனும் உலகின் உயர்ந்த இசை வடிவத்தை 1993ஆம் ஆண்டில் தென்னிந்திய சினிமா இசையமைப்பாளரான இளையராஜா. அமைத்தார் சிம்பனி இசை வடிவமே உலகின் உன்னதமான இசை வடிவமாகப் புகழப்படுகின்றது. பிரித்தானியாவின் ரோயல் பில் ஹார்மோனிக் எனும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இசை நிறுவனத்துக்காக இளையராஜா இதனை அமைத்தார்.

சிம்பனியை ஆசியாவிலேயே இவர் ஒருவர் தான் அமைத்தது குறிப்பிடத்தக்கது.

◈ சினிமாத்துறையின் உயரிய விருதான ஒஸ்கார் விருதை 1956 இல் பென்ஹர் (Benhur), 1998 இல் டைட்டானிக் (Titanic) ஆகிய படங்கள் 11 துறைகளுக்காக 11 விருதுகளைப் பெற்றமை சாதனையாகக் கருதப்படுகின்றது.

◈ இந்திய மேற்கு, வங்காளத்தைச் சேர்ந்த உலகப் புகழ்பெற்ற சினிமாக் கலைஞரான காலஞ்சென்ற "சத்திய ஜித் ரே" கௌரவ ஒஸ்கார் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

இவரால் இயக்கி வெளியிடப்பட்ட "பதர் பாஞ்சாலி, அபுசன்சார், நாயக், அபராஜிதா, ஜல்சாகர்" ஆகிய படங்கள் உலகத் தரம் வாய்ந்தவை, பிரபல்யமானவை,

◈ தமிழில் முதன் முதலில் வெளியாகிய முப்பரிமாண 3D படம் மைடியர் குட்டிச்சாத்தான்.

◈ வருடாந்தம் வெளியாகும் சிறந்த படங்களுக்கு "ஒஸ்கார்" (Oscar) விருது வழங்கப்படுவது போல அமெரிக்காவில் மோசமான திரைப்படங்களுக்கு "ராஸ்பெரி" விருது வழங்கப்படுகின்றது.

> *தாய் உலகத்தில் ஒரு புனிதப் படைப்பு.*
> *தாய் தரணியில் நடமாடும் தெய்வம்.*
> *தாயின் தியாகம் அளவிட முடியாதது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விஞ்ஞானம்

◈ பூமிக்குக் கவசமாக விண்ணில் அமைந்துள்ள படை மண்டலம் - ஓசோன்

இது சூரியனிலிருந்து பூமியை நோக்கி வரும் மனித உடலுக்குத் தீமையான கதிர்வீச்சுக்களைத் தடுத்து நிறுத்துகின்றது. பிரதானமாக மனித உடலில் தோல் புற்றுநோயை உண்டாக்கவல்ல "அல்றா வயலெற்" (U.V) எனும் தீய கதிர்களைத் தடுத்து நிறுத்துகின்றது.

◈ அண்மைக் காலமாக ஓசோன் மண்டலம், குளிர்சாதனப் பெட்டிகளிலும் வாசனைத் திரவியங்களிலும் உபயோகிக்கப்பட்டு வரும் குளோரோஃ புளோரோ காபன்" (CFC) எனும் வாயுவினால் சிதைவடைந்து வருவதாக விஞ்ஞானிகள் அறிந்துள்ளனர். இதனால் புவியின் சமநிலை பாதிக்கப்பட்டுப் பாரிய தீய விளைவுகள் ஏற்படலாமென விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளனர்.

◈ ஓசோனின் சிதைவதைத் தடுத்து நிறுத்துவதில் விஞ்ஞானிகள் தீவிர கவனம் செலுத்துகின்றனர்.CFCக்குப் பதிலீட்டை அறிமுகம் செய்வதில் தீவிர கவனம் செலுத்துகின்றனர். ஓசோன் ($O_3$) 1840 ஆம் ஆண்டு "சோன்பீன்" எனும் அமெரிக்கரால் கண்டறியப்பட்டது.

பூகம்பத்தை அளவிடப் பயன்படுவது - றிச்ரர் அளவுகோல். இதனை Dr.சோல்ஸ் றிச்ரர் என்பவரே கண்டுபிடித்தார்.

பிரெஞ்சு மேதையான "பஸ்கல் 1642 இல் Adding Machine (கூட்டல் இயந்திரம்) ஒன்றைக் கண்டுபிடித்தார்.

சாள்ஸ் பபேஜ் (பிரான்ஸ்) என்பவரினால் கண்டுபிடிக்கப்பட்ட Difference Engine, Analytical Engine ஆகியவைதான் கணினியின் (Computer)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னோடிகள் . இதனால் சாள்ஸ் பபேஜ் கணினியின் கண்டு பிடிப்பாளராகவும், கணினியின் தந்தையாகவும் கூறப்படுகின்றார். இவரது உதவியாளரான "லேடிஅடே" அவர்களே முதலில் கணினி நிகழ்ச்சித் தயாரிப்பாளர் (Computer Programmer) ஆக இருந்தார்.

1946 இல் J.பிரெஸ்பர் எக்கொட், ஜோண் மௌக்கிளி ஆகியோர் இணைந்து உருவாக்கிய ENIAC நவீன கணினியின் முன்னோடி.

- மின் காந்தக் கொள்கை (Electro Magnetic Thesis) 1870 இல் கிளார்க் மக்ஸ்வெல் (1831 - 79) என்ற ஆங்கில இறப்பியலாளரால் (பௌதிகவியலாளரால்) அறிவிக்கப் பட்டது.
- ஹீனரிச் ஹேட்ஸ் (1857 - 1895) என்ற ஜேர்மனிய இயற்பியல் விஞ்ஞானி Radio Waves (மின்காந்தக் கதிர்கள்) ஐக் கண்டறிந்தார்.
- 1895இல் வில்கெம் ரொண்ட் ஜென் (1845 - 1923) என்ற ஜேர்மனிய இயற்பியலாளர் X-Rays (X கதிர்கள்)ஐக் கண்டுபிடித்தார். இவர் இதற்காக 1901 இல் பௌதிக வியலுக்கான நோபல் பரிசை முதலாவதாகப் பெற்றுக் கொண்டார். அவ்வருடமே நோபல்பரிசு வழங்கப்படும்முறை ஆரம்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.
- 1800இல் வில்லியம் ஹேர்ஷல் (1738 - 1822) என்பவர் அகச் சிவப்புக் கதிர்வீச்சைக் (Infra red radiation) கண்டறிந்தார்.
- ஹென்றி பேக்கிரல் (1852-1909) என்ற பிரெஞ்சு விஞ்ஞானி 1896இல் கதிரியக்கத்தைக் (Radio Activity) கண்டறிந்தார்.
- உலகின் முதலாவது நீர்மூழ்கிக் கப்பலான Turtle (கடல் ஆமை) அமெரிக்கரான டேவிட் புஸ்நெல் என்பவரால் உருவாக்கப்பட்டது.
- "டொல்பி ஸ்டீரியோ" எனும் ஒலி அமைப்பை (Sound) கண்டுபிடித்த அமெரிக்கர் - டொல்பி
- தொலைக்காட்சி ஒளிபரப்பிற்காகச் செய்மதியை முதன்முதலில் பயன்படுத்திய நாடு - கனடா . Canada Television Service (CTS) என்ற நிறுவனம் 1976 இல் CTS என்ற செயற்கைக் கோளை ஒளிபரப்பு நோக்கத்திற்காக விண்ணுக்குச் செலுத்தியது.
- முதல் வானொலி ஒலிபரப்பு நிலையம் புடாபெஸ்டில் (Budapest) 1883இல் யூனில் தொடங்கப்பட்டது.
- வேதிப் பொருட்களின் அரசன் - கந்தக அமிலம்
- Plaster Paris எனப்படுவது - ஜிப்ஸம்
- துரிதவெள்ளி (Quick Silver) - இரசம் (Hg)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

◈ புகையில் உள்ள நச்சுத்தன்மையான பொருள் - நிக்கொட்டின்

◈ செயற்கை மழையைக் கண்டறிந்தவர் - எபலின்லாமு

◈ **இன்ரநெற்** (Internet)

பல்லாயிரக்கணக்கான கணினிகள் ஒன்றோடு ஒன்று இணைக்கப்பட்ட ஒரு வலைப்பின்னல் "இன்ரநெற்" (Internet) ஆகும். சர்வதேசக் கணினிகளின் கூட்டமைப்பு எனவும் இன்ரநெற்றை அழைக்கலாம். (International Network) என்பதன் சுருக்கமே Internet என அழைக்கப்படுகின்றது. கணினிகளின் இணைப்பால் உருவானதால் இதனை "இணையம்" என்று தமிழில் கூறுகின்றார்கள். இவற்றில் தகவலை அனுப்பும் மையங்கள் காணப்படுகின்றன. இவை "வெப் தளங்கள்" (Web site) எனப்படுகின்றன.

"வெப்" (web) என்பது அதன் பெயருக்கு ஏற்ப இன்ரநெற்றில் பரவிக்கிடக்கின்ற பல இலட்சக்கணக்கான கணினிக் கோவைகளின் வலையமைப்பாகும்.

◈ **ஈ - மெயில் (E - Mail)**

கணினியை உபயோகித்து இணையத்தின் ஊடாகக் கடிதத்தை வேறு இடத்திற்கு அனுப்புவதையே ஈ - மெயில் (E-mail) என அழைக்கின்றனர். இலத்திரனியல் தபால் (Electronic Mail) என்பதன் சுருக்கமே ஈ -மெயில் (E-mail)

சாதாரண தபாலுக்கும் கணினித் தபாலுக்கும் நிறைய வித்தியாசங்கள் உண்டு. இந்தக் கணினித் தபால் அனுப்பும் பொத்தானை அழுத்திய மறு விநாடியே உரிய இடத்தைச்சென்றடைகின்றது. முன்னர் எழுத்துரு மூலமான கடிதங்களை மாத்திரமே ஈ-மெயில் மூலம் அனுப்ப முடிந்தது.

தற்போது புகைப்படம், படம், வீடியோத் துண்டுகள் என்று எதையுமே ஈ-மெயில் மூலம் அனுப்பி விடலாம். வெளிநாட்டுக்குச் சாதாரண தபாலை அனுப்ப ஏற்படும் செலவைவிட மிகக் குறைந்த செலவே ஈ-மெயில் மூலம் அனுப்ப ஏற்படுகின்றது. ஒவ்வொரு தனி நபருக்கும் அல்லது நிறுவனத்திற்கும் தனித்தனியான ஈ-மெயில் முகவரிகள் இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கலை இலக்கியம்

- முத்தமிழ் வித்தகர், முத்தமிழ் முனிவர் எனப் போற்றப்படும் ஈழத்தவர் சுவாமி விபுலானந்தர்.

  அம்பாறை காரைதீவைப் பிறப்பிடமாகக் கொண்ட இவரது இயற்பெயர் - மயில்வாகனன்

  புலமை மிகுந்த தமிழ்ப் பேறறிஞரான இவரால் யாழ் நூல், மதங்கசூளாமணி, கங்கையில் விடுத்த ஓலை ஆகிய நூல்கள் எழுதி வெளிடப்பட்டுள்ளன. "விவேகானந்தன்" என்ற பத்திரிகையின் ஆசிரியராகவும் இருந்துள்ளார்.

- முதன்முதலில் கலைக் களஞ்சியம் வெளியிட்ட நாடு - பிரான்ஸ்

- தமிழில் முதலில் தோன்றிய இலக்கணநூல் - தொல்காப்பியம்.

- "கவிக்குயில்" என்று மக்களால் அழைக்கப்பட்டவர். - சரோஜினி நாயுடு (இந்தியா)

- தமிழில் முதன்முதலில் தோன்றிய குழந்தைகள் பத்திரிகை - பாலதீபிகை (1840)

- பேராசிரியர் கா.கைலாசபதி அவர்கள் இலங்கையில் இலக்கியத் திறனாய்வு முயற்சிகளுக்கு வித்திட்ட முன்னோடியாகக் கருதப் படுகின்றார்.

- கர்நாடகக் கச்சேரிச் சங்கீதத்தின் பிதாமகராக "அரியகுட்டி இராமானுஜ அய்யங்கார்" கருதப்படுகின்றார். கர்நாடக சங்கீதத்தில் முதல் இந்திய ஜனாதிபதி விருதுபெற்ற வாய்ப்பாட்டுக்காரர் இவர்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

◈ இலங்கையின் பிரபல கார்ட்டூனிஸ்ட்டுகளில் ஒருவர் S.சிவஞானசுந்தரம் இவரது இலட்சியப் பத்திரிகையான "சிரித்திரன்" எனும் பருவகால இதழ் சிரிப்பே சீவியம் என்பதனைத் தாரக மந்திரமாகக் கொண்டு பல்லாண்டுகளாக வெளிவந்தமை குறிப்பிடத்தக்கது.

"சுந்தர், சிவாஜி" ஆகிய புனைப் பெயர்களையும் சிவஞானசுந்தரம் கொண்டிருந்தார்.



இவரால் வரையப்பட்ட "சவாரித்தம்பர், சின்னக்குட்டி, மைனர் மச்சான்" ஆகிய கதாபாத்திரங்கள் பத்திரிகை வாசகர்களிடையே மிகவும் பிரபல்யமானவை.

◈ உலகின் மிகப் பழமையான கலைக் களஞ்சியம், இயற்கை வரலாறு. (Natural History)

◈ ஜவகர்லால் நேரு சிறைக்குள் இருந்தபோது தனது மகளான இந்திராகாந்திக்கு எழுதிய கடிதங்கள் Discovery of India என்ற பெயரில் நூலாக வெளிவந்தது.

◈ தமிழ் சுருக்கெழுத்து முறையைத் தோற்றிவித்தவர் M.சீனிவாசராவ்

◈ உலகில் ஆகக்கூடிய பதிப்புரிமை பெற்ற ஒரே புத்தகம் Guiness Book (உலக சாதனைகளின் பதிவேடு) கின்னஸ் புத்தகம்.

◈ தமிழில் சிறுகதையெனும் இலக்கிய வடிவத்தை அறிமுகம் செய்து வைத்தவர் வ.வே.சு.ஐயர். இவரை தமிழ்ச் சிறுகதை முன்னோடி எனவும் அழைப்பர்.

◈ கவியரசு கண்ணதாசனின் இயற்பெயர் சா.முத்தையா. பல்லாயிரம் கவிநயமிகு திரைப்பாடல்களை இயற்றி உலகத் தமிழ் மக்கள் மனதில் நீங்காத இடம் பிடித்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அர்த்தமுள்ள இந்துமதம், சேரமான் காதலி, இயேசு காவியம் போன்ற புகழ்மிக்க பல நூல்களையும் எழுதி வெளியிட்டுள்ளார்.

◈ தமிழ்ச் சிறுகதை இலக்கிய மேதையெனப் போற்றப்படுபவர் புதுமைப் பித்தன். தமிழ் நாட்டைச் சேர்ந்த இவரது இயற்பெயர் செ.விருத்தாசலம்.

◈ தமிழ் நாடகத் தந்தையெனப் போற்றப்படுபவர் - பம்பல் சம்பந்த முதலியார். இவராலேயே தமிழில் நாடகம் என்ற கலை வடிவம் அறிமுகம் செய்து வைக்கப்பட்டது.

◈

| மொழிகள் | சிறப்புப் பெயர்கள் |
|---|---|
| தமிழ் | பக்தி மொழி |
| பிரெஞ்ச் | காதல் மொழி |
| ஆங்கிலம் | வணிகமொழி |
| கிரேக்கம் | சட்ட மொழி |
| இத்தாலி | இசைமொழி |
| உருது | கவிதை மொழி |

◈ "சிறுகதையின் திருமூலர்" என்று புதுமைப்பித்தனால் புகழப்பட்டவர் "மௌனி". தமிழ் நாட்டைச் சேர்ந்த இவரது இயற்பெயர் "மணி"

◈ "ஆசுகவி" என அழைக்கப்படும் ஈழத்துப் புலவர் கல்லடி சு.வேலுப்பிள்ளை

◈ கவிஞர்களின் கவிஞன் என்று அழைக்கப்பட்ட ஆங்கிலக் கவிஞர் - எட்மண்ட் ஸ்பென்சர் (1552 - 1599)

◈ தமிழில் வெளிவந்த முதலாவது நாவல் - பிரதாப முதலியார் சரித்திரம், நீதிபதி மயிலாடுதுறை வேதநாயகம்பிள்ளை அவர்கள் இந்நூலை எழுதினார்.

◈

| நூல்கள் | | ஆசிரியர்கள் |
|---|---|---|
| சிலப்பதிகாரம் | - | இளங்கோ அடிகள் |
| இராமாயணம் (மூலம்) | - | வான்மீகி |
| இராமாயணம் (தமிழில்) | - | கம்பர் |
| சீறாப் புராணம் | - | உமறுப் புலவர் |
| பெரிய புராணம் | - | சேக்கிழார் |
| மகாபாரதம் (மூலம்) | - | வியாசர் |
| மகாபாரதம் (தமிழில்) | - | வில்லிபுத்தூரார் |
| திருவாசகம் | - | மாணிக்கவாசகர் |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேம்பாவணி, ஒப்பியலிலக்கணம் – வீரமாமுனிவர்
மகாவம்சம் – மகாநாம
பாஞ்சாலி சபதம் – சுப்பிரமணிய பாரதியார்
காஞ்சிப்புராணம் – சிவஞானமுனிவர்
நற்சிந்தனை – யோகர்சுவாமிகள்
நன்னூல் – பவணந்த முனிவர்
வெற்றிவேற்கை – அதிவீரராம பாண்டியன்
நல்வழி, நீதிநூல்கள், ஆத்திசூடி
கொன்றைவேந்தன் – ஔவையார்
மனோன்மணீயம் – சுந்தரம்பிள்ளை
கீதாஞ்சலி – இரவீந்திரநாத் தாகூர்
மணிமேகலை – சீத்தலைச் சாத்தனார்
தொல்காப்பியம் – தொல்காப்பியர்
சூளாமணி – தோலாமொழித்தேவர்
திருப்புகழ் – அருணகிரிநாதர்
போரும் சமாதானமும் – லியோ ரோல்ஸ்ரோய்
இலியட், ஒடிசி – ஹோமர்
நளவெண்பா – புகழேந்தி
நள்ளிரவுச் சுதந்திரம் – லாரி காலின், டொமினிக், லேப்பியர்
அர்த்த சாஸ்திரம் – கௌடில்யர்
ஆசியஜோதி – எட்வின் ஆர் நொல்ட்
என் சத்திய சோதனை – மகாத்மா காந்தி
குடியாட்சி – பிளாற்றோ
ஒரு உலகம் – வேன்ட்ஸ் வில்கி
மூலதனம் – கார்ல் மாக்ஸ்
சகுந்தலை வெண்பா – சு.நடேசபிள்ளை
இனியவை நாற்பது – பூதஞ் சேந்தனார்
கீத கோவிந்தம் – ஜெயதேவர்

◈ "சாது முனிவர்" என்ற பட்டப்பெயர் கொண்டு அழைக்கப்படும் தமிழறிஞர் வி.க.கல்யாணசுந்தரம்.

◈ "சிலம்புச் செல்வர்" என அழைக்கப்படும் தமிழக அறிஞர் - ம.பொ.சிவஞானம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

◈ **திருக்குறள்**

தமிழில் வெளிவந்த நூல்களில் ஆகக் கூடுதலாகப் பிற மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்ட ஒரே நூல் இதுவேயாகும்.

திருக்குறளை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து வெளியிட்டவர் G.U.போப்

திருக்குறள் மொத்தம் 1330 குறள்களைக் கொண்டுள்ளது. 133 அதிகாரங்களில் அமைந்துள்ள இக்குறள்கள் அறம், பொருள், காமம் என முப்பால்களாக வகுக்கப்பட்டுள்ளது. குறள்கள் இரண்டு அடியில் செறிவான, நிறைவான கருத்துக்களை உறுதியாக வலியுறுத்துவது சிறப்பிற்குரியது. "அ" என்ற எழுத்தில் தொடங்கும் குறள் "ன்" என்ற எழுத்தில் முடிவடைகின்றது.

திருக்குறளின் மறுபெயர்கள் : முப்பாநூல், உத்தரவேதம், தெய்வநூல், பொய்யமொழி, வாயுறை வாழ்த்து, தமிழ்மறை பொதுமறை.

திருவள்ளுவரின் மறுபெயர்கள்: முதற் பாவலர், பெருநாவலர், தேவர், செந்நாப் போதர், மாதானுபங்கி, தெய்வப் புலவர், நாயனார், நான்முகனார்.

திருக்குறள் உலக நாடுகளின் பல்வேறு மொழிகளிலும் மொழி பெயர்த்து வெளியிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

◈ முதலாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு 1966ஆம் ஆண்டு மலேசியாவின் தலைநகர் கோலாலம்பூர் நகரில் நடைபெற்றது. 4ஆவது உலகத் தமிழாராய்ச்சி மகாநாடு 1974 ஜனவரியில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது. அம் மகாநாட்டின் விழாக்குழுவுக்கு, பேராசிரியர் சு.வித்தியானந்தன் (அமரர்) தலைமை தாங்கினார்.

◈ உலகப் புகழ்பெற்ற பிறந்த நாள் பாடலை Mildred, Potty Hill என்ற சகோதரிகள் 1893ஆம் ஆண்டு எழுதினார்கள்.

◈ பின்னர் இது Happy Birthday to you என்று மாற்றப்பட்டு உலகெங்கும் இன்றுவரை பிரபல்யம் பெற்று விளங்குகிறது.

◈ ஒரு யுகம் என்பது 4320000 ஆண்டுகளைக் கொண்டதென "ஆரியப்பட்டர்" எழுதிய "ஆரியப்பட்டீயம்" என்ற நூல் கூறுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### தமிழ் ஆண்டின் மாதங்கள், பருவகாலங்கள்

| | |
|---|---|
| சித்திரை, வைகாசி | - இளவேனில் / வசந்த காலம் |
| ஆனி, ஆடி | - முதுவேனிற் காலம் |
| ஆவணி, புரட்டாதி | - கார்காலம் |
| ஐப்பசி, கார்த்திகை | - கூதிர் காலம் |
| மார்கழி, தை | - முன்பனி |
| மாசி, பங்குனி | - பின்பனி |

◈ ஐம்பெருங்காப்பியங்கள் - சீவகசிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, குண்டலகேசி, வளையாபதி

◈ சங்ககால எட்டுத்தொகை நூல்கள் - நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு, புறநானூறு

சங்ககால பத்துப்பாட்டு நூல்கள் - திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப் படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப் படை, முல்லைப்பாட்டு, மதுரைக் காஞ்சி, நெடுநல்வாடை, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை, மலைபடு கடாம்.

◈ **நூல்கள், மூலமொழிகள்**

பைபிள் - கீபுறு

தம்மபதம் - பாளி

குரான் - அரபு

◈ "வில்லியம் ஷேக்ஸ்பியர் (இங்கிலாந்து) எனும் புகழ்பெற்ற ஆங்கில நாவலாசிரியரால் எழுதப்பட்டுப் புகழ்பெற்ற கவிதை நாடகங்கள்- யூலியஸ் சீஸர், ரோமியோ ஜூலியட், ஒதல்லோ, ஹம்லெற், பிக்மேலியன், மக்பெத்.

◈ உலகின் முதலாவது தமிழ்ப்புத்தகம் - கிறீஸ்தவ வணக்கம். இது இந்தியாவில் வெளியிடப்பட்டது.

◈ "ஆலும் வேலும் பல்லுக்குறுதி, நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி" எனும் தமிழ்ப் பழமொழியில் நாலு எனக் குறிப்பிடப்படுவது நாலடியார் பாடல். இரண்டு எனக் குறிப்பிடுவது திருக்குறள்.

◈ **திசைகள், வீசும் காற்றுக்கள்**

| | | |
|---|---|---|
| வடக்கு | - | வாடைக்காற்று |
| தெற்கு | - | தென்றல் காற்று |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கு - கோடைக்காற்று
கிழக்கு - கொண்டல் காற்று

◈ முத்தமிழ் காவலர் எனப்படும் இந்திய அறிஞர் - கி.ஆ.பெ. விசுவநாதம்.

◈ "ஜனகண மன..." என ஆரம்பிக்கும் இந்தியாவின் தேசிய கீதத்தை இயற்றியவர் - இரவீந்திரநாத் தாகூர்.

◈ **ஆண்டு நிறைவு, விழாக்கள்**

10ஆவது ஆண்டு - தசரவிழா, தசாப்த நிறைவு விழா
25ஆவது ஆண்டு - வெள்ளிவிழா
50ஆவது ஆண்டு - பொன்விழா
60ஆவது ஆண்டு - மணிவிழா, வைரவிழா
75ஆவது ஆண்டு - பவளவிழா
100 ஆவது ஆண்டு - நூற்றாண்டுவிழா

◈ ஈழத்தில் இசை நாடகக் கலையை வளர்த்தெடுத்து அதனை மக்கள் மத்தியில் பிரபல்யமடையச் செய்தவர். - நடிகமணி வி.வி.வைரமுத்து.

◈ தமிழ் இலக்கியத்தில் "முற்றும்" என்ற சொல்லை முதன்முதலில் அறிமுகப்படுத்தியவர் - இளங்கோ அடிகள்.

◈ "முது தமிழ்ப்புலவர்" என அழைக்கப்படும் ஈழத்துப் புலவர்-மு. நல்லதம்பி

◈ **ஐவகை நிலங்கள், பண்புகள்**

குறிஞ்சி நிலம் - மலையும் மலை சார்ந்த இடமும்
மருதம் - வயலும் வயல் சார்ந்த இடமும்
முல்லை - காடும் காடு சார்ந்த இடமும்
பாலை - மணலும் மணல் சார்ந்த இடமும்
நெய்தல் - கடலும் கடல் சார்ந்த இடமும்

◈ "புலவர் மணி" எனப் போற்றப்படும் ஈழத்துப் புலவர் ஏ.பெரியதம்பிப் பிள்ளை
இவருக்குக் கிழக்குப் பல்கலைக்கழகம் தேகாந்த நிலையில் (மரணத்தின்பின்) இலக்கிய கலாநிதிப் பட்டமளித்துக் கௌரவித்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

◈ **இராகங்கள், பாடப்படும் நேரங்கள்**

| | | |
|---|---|---|
| பூபாளம் | - | காலைநேரம் |
| ஆனந்தா | - | மத்திய நேரம் |
| வசந்தா | - | மாலை நேரம் |

◈ "பாவேந்தர்" எனச் சிறப்பிக்கப்படும் தமிழகக் கவிஞர் பாரதிதாசன். இவரது இயற்பெயர் - கனகசுப்புரத்தினம்

"காளிதாசன்" எனும் வடமொழி (சமஸ்கிருதம்) பெரும் புலவரால் இயற்றப்பட்ட காவியங்கள் - மேகதூதம், இரகுவம்சம், குமார சம்பவம், சாகுந்தலம்.

"யாதும் ஊரே யாவரும் கேளீர், தீதும் நன்றும் பிறர்தர வாரா" எனப் பாடியவர் சங்ககாலப் புலவர் கணியன் பூங்குன்றனார்.

இதில் வரும் "கேளீர்" எனும் சொல் உறவினர்கள் என்ற கருத்தைத் தருகின்றது.

◈ பல இராகங்களில் பாடப்படுவது "இராகமாலிக்கா" என அழைக்கப் படுகின்றது.

◈ தங்கத் தாத்தா" என அழைக்கப்படுகின்ற ஈழத்துப் புலவர் நவாலியூர் சோமசுந்தரப்புலவர்.

◈ **வரலாற்றுக் காலங்கள்**

| | | |
|---|---|---|
| சங்க காலம் | - | கி.பி.1-3 ஆம் நூற்றாண்டுவரை |
| சங்கமருவிய காலம் | - | கி.பி.3-6ஆம் நூற்றாண்டுவரை |
| பல்லவர் காலம் | | கி.பி.6-9 ஆம் நூற்றாண்டுவரை |
| சோழர் காலம் | | கி.பி. 9-14ஆம் நூற்றாண்டுவரை |
| விஜயநகநாயக்கர்காலம் | | கி.பி.14-16ஆம் நூற்றாண்டுவரை |

◈ இலங்கையில் பாமர மக்களின் கலையாக ஆடப்பட்டுவந்த நாட்டுக்கூத்துக் கலையைப் பல்கலைக்கழக மட்டத்திற்கு எடுத்துச்சென்று அதனை ஆய்வுக்குரிய துறைசார் புலமை வாய்ந்த கலை என்ற தகுதியைப் பெற்றுக்கொடுத்தவர் பேராசிரியர் சு.வித்தியானந்தன்.

இவர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகங்களின் முதலாவது துணைவேந்தர் (V.C.) பதவியை அலங்கரித்தமை குறிப்பிடத்தக்கது.

◈ மொழிகள், அகராதியை முதலில் தொகுத்தவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| தமிழ் | - | கதிரவேற்பிள்ளை |
| சிங்களம் | - | சோரட்ட தேரர் |
| ஆங்கிலம் | - | சாமுவேல் ஜோண்சன் |

◈ "இடைக்காலச் சிங்களக்கலை", "சிவ நடனம்" ஆகிய நூல்களை எழுதியவரும், மரபு வழியான கண்டியக் கலைகளினதும், கைப் பணிகளினதும் மறுமலர்ச்சிக்கும் உதவியவர் கலாயோகி சேர். ஆனந்தகுமாரசாமி.

◈ "மோனாலீசா" எனும் உலகப் புகழ்பூத்த பெண் ஓவியத்தை வரைந்தவர் லியனார்டோ டாவின்சி (இத்தாலி). மோனலீஸா ஓவியம் கி.பி. 1503ஆம் ஆண்டில் வரையப்பட்டது. இவ் ஓவியத்தில் உள்ள மோனலீஸா என்ற பெண்ணின் மென்மையான புன்னகை; உலகப் பிரசித்தமானது.

டாவின்ஸியினால் வரையப்பட்ட "இராப்போசனம்" எனும் ஓவியமும் மிகப் பிரபல்யமானது.

டாவின்ஸி அவர்கள் கி.பி.1452ஆம் ஆண்டு இத்தாலியின் புளோரன்ஸ் நகருக்கு அருகில் பிறந்தார். இவர் பொறியியல் வல்லுனராக, கட்டடக் கலைஞனாக, பாடகனாக, வானியலாளனாக, கணித வல்லுனராக, தாவரவியல் அறிஞராக, விலங்கியல் நிபுணராக, உடற்றொழிலியல் விற்பன்னராக, சிலை வடிக்கும் சிற்பியாக, பாட்டியற்றும் புலவனாகப் பல பாத்திரங்களை ஒரே நேரத்தில் வகித்தவர். ஓவியம் இவரின் ஞானக் கடலில் இருந்து வெளிவந்த ஒரு சிறுதுளி என்றே கூறலாம்.

◈ இந்தியாவில் அண்மைக் காலமாகத் தாழ்த்தப்பட்ட அல்லது பிற்படுத்தப்பட்ட அல்லது ஹரிஜன மக்களால் தமது வாழ்வியல் தொடர்பாகவும் எதிர்கால மேம்பாடு தொடர்பாகவும், படைக்கப்படும் இலக்கியங்கள் "தலித் இலக்கியம்" எனும் சிறப்புப் பெயர்கொண்டு அழைக்கப்படுகின்றது. "மகாராஷ்டிர மொழியிலமைந்த "தலித்" எனும் சொல் "மண்ணில் பிடித்தவர்கள்" என்ற கருத்தைத் தருகின்றது.

◈ ஈழத்தில் தாழ்த்தப்பட்ட மக்கள் தொடர்பாக இவ்வகை இலக்கியங்களைப் படைத்த முன்னோடிகள் கே.டானியல், டொமினிக் ஜீவா.

◈ "மிக்கி மவுஸ்" எனும் உலகப் புகழ்பெற்ற கார்ட்டூன் (கேலிச் சித்திரம்) வரைந்தவர் வோல்ட் டிஸ்னி (ஐக்கிய அமெரிக்கா) இவரால் ஐக்கிய அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் சிறுவர்களுக்கான உல்லாச உலகமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"டிஸ்னி லாண்ட்" அமைக்கப்பட்டுள்ளது. இந்த இடம் பெருமளவு சுற்றுலாப் பயணிகளைக் கவர்ந்திழுக்கும் இடமாக உள்ளது.

◈ "இலங்கைத் தமிழ் நாடகத் தந்தை" எனப் போற்றப்படுபவர் கலையரசு சொர்ணலிங்கம்.

◈ உலகப் புகழ்பெற்ற ஓவியரான "பப்லோ பிக்காஸோ" ஸ்பெயினில் 1881ஆம் ஆண்டு பிறந்தார். பேசுவதற்குப் பழக முன் ஓவியம்வரையத் தொடங்கிய மேதையான இவர் 1973இல் காலமானார். சமாதானத்தின் சின்னமாகப் போற்றப்படும் ஒலிவ்கிளை தாங்கிய வெண்புறாவை உருவாக்கியவர் இவரே. "கொர்னிக்கா" எனும் பிரபல ஓவியமும் இவராற்றான் வரையப்பட்டது.

◈ கலைத்துறைக்குப் பிரான்ஸ் நாட்டில் வழங்கப்படுகின்ற உயர்விருது - செவாலியர்.

பிரான்ஸ் சக்கரவர்த்தியாகத் திகழ்ந்த "நெப்போலியன் போனபார்ட்" என்பவராலேயே இவ் விருது உருவாக்கப்பட்டது.

தென்னிந்தியத் தமிழ் சினிமா நடிகரான சிவாஜிகணேசனுக்குப் பிரான்ஸ் அரசாங்கம் 1995ஆம் ஆண்டில் இவ்விருதை வழங்கிக் கௌரவித்தமை சிறப்பிற்குரியது.

◈ தமிழில் வெளிவந்த முதலாவது வரலாற்று நாவல் - மோகனாங்கி. நாயக்க மன்னர்களின் காலத்தை நிலைக்களனாக வைத்து இலங்கையரான தி.க.மு.சரவணமுத்து அவர்களால் எழுதப்பட்ட இந்த நாவல் 1865இல் வெளிவந்தது.

◈ Twinkle Twinkle Little Star எனும் உலகப் புகழ்பெற்ற ஆங்கில மழலைக் கவிதையை எழுதியவர் ஆன்ரெய்லர்.

◈ தமிழ் சினிமாவின் புகழ்பெற்ற பாடலாசிரியரான பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் 1938இல் இந்தியாவின் தமிழகத்தில் பிறந்தார்.

பொதுவுடைமைக் கருத்துக்களையும், இலக்கியச் செழுமைமிக்க வரிகளையும் கொண்ட நூற்றுக்கணக்கான பாடல்களை எழுதியுள்ளார். தமது 29ஆவது வயதுவரை வாழ்ந்து பிரகாசித்த இவர் மாரடைப்பால் காலமாகியமை தமிழ் இலக்கிய உலகுக்குப் பேரிழப்பாகும்.

◈ சென்னை பச்சையப்பன் கல்லூரியில் 1924இல் தமிழறிஞர்கள் ஒன்றுகூடி, தமிழ் ஆண்டு உருவாக்கப்படவேண்டியதன் அவசியத்தை உணர்ந்து "திருவள்ளுவர் ஆண்டை" உருவாக்கினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கி.மு.31 இல் திருவள்ளுவர்காலம் ஆரம்பிக்கிறது எனக் கொண்டு திருவள்ளுவர் ஆண்டு கணிக்கப்படுகின்றது.

ஆங்கில ஆண்டு +31 = திருவள்ளுவர் ஆண்டு மறைமலை அடிகள் சி.ஆ.பெ.விசுவநாதன், கல்யாணசுற்தரனார், சோமசுந்தரபாரதியார் முதலானோர் இதிற் கலந்து கொண்டனர்.

பன்னிரு இராசிகளும் தூய தமிழில் தமிழ் மாதங்களாகப் பின்பற்றப்படுகின்றன.

- Descent of man எனும் நூலை எழுதியவர் - சார்ள்ஸ்டார்வின். Animal form நூலை எழுதியவர் - ஜோர்ஜ் ஆவெல்.
- தமிழில் முதன்முதலில் வெளிவந்த மாத இதழ் மாசத்தின் சரிதை.
- இலங்கையில் தமிழில் வெளிவந்த முதலாவது நாளிதழ் அஸன்பேயுடைய சரித்திரம்.

முகமது சாசிம் சித்திலெப்பை என்பவர் இதனை எழுதியுள்ளார்.

இலங்கையின் முதலாவது தமிழ் நாவலாசிரியை - மங்களநாயகம் தம்பையா

இலங்கையைக் களமாகக் கொண்டு எழுதப்பட்ட முதலாவது நாவல் - சன்மார்க்க ஜெயம்

இலங்கை தொடர்பான முதல் வரலாற்று நாவல் - விஜயசீலம்.

- சிங்கள நாவல்களை எழுதியவர்கள் கரம்பெலிய - மார்ட்டின் விக்கிரமசிங்க (நாவல்:கம்பெரரெலிய)

கருணாசேன ஜயலத் (நாவல்:கொலுஹகவத)

- ஈழத்தில் எழுந்த முதற் பள்ளு நூல் - கதிரமலைப் பள்ளு
- வெண்பா பாடுவதில் வல்லவர் எனப் பெயர் பெற்றவர், புகழேந்தி. "பரணி" பாடுவதிற் சிறந்தவர் எனப் பெயர் பெற்றவர் சயங்கொண்டார்.
- ஐம்பெருங் காப்பியங்களில் ஒன்றாகிய சிலப்பதிகாரம் "குடிமக்கள் காப்பியம்" என அழைக்கப்படுகின்றது.
- முதன் முதலில் வெளி வந்த அகராதி "சதுர அகராதி"


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



◈ ஈழத்துச் சிறுவர் இலக்கியத் துறையில் வெளிவந்த முதல் தமிழ் நாவல் ஓடிப்போனவன்.

